கோகுலம்

GOKULAM

ஜூன் '87 ரூ. 2.



ஹார்லிக்ஸ் பிஸ்கட்ஸ் துண்டுகளைத் தேடமுடியுமா?
சரியான பாதிகளை சேர்த்துக் காட்ட முடியுமா?




1-6, 2-3, 4-8, 5-10, 7-9

ஹார்லிக்ஸ்
பிஸ்கட்ஸ்



ஹார்லிக்ஸின் நலமிக்க கரகர மொறுமொறு பிஸ்கட்!

HTA-5074 TAM



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்

கோகுலம்

1987 ஜூன் மாத இதழ்

மலர் 5 இதழ் 5

தனிப்பிரதி ரூ. 2/—

ஆண்டுச் சந்தா ரூ. 24/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

* "தமிழில் எங்களுக்கான திரைப்படங்கள் வேண்டும்.
* வண்ணப்படங்களுடன் நிறையப் புத்தகங்கள் வெளிவர வேண்டும்.
* எல்லாப் பள்ளிகளிலும் நூலகங்கள் இருக்க வேண்டும்.

என்று நாங்கள் தனித்தனியாகவும் பலர் சேர்ந்தும் — மொத்தம் 85,000 குழந்தைகள் தமிழக மாண்புமிகு முதல்வரவர்களுக்குச் சென்ற ஆண்டு ஒரு வேண்டுகோள் விடுத்தோமே, அதுபற்றி இன்றுவரை ஒன்றும் தெரியவில்லையே!"

— இப்படி உங்களில் பலர் ஏக்கத்தோடும், சிலர் ஏமாற்றத்தோடும் அடிக்கடி எங்களுக்கு எழுதிக் கேட்கிறீர்கள்.


சத்துணவுத் திட்டம் கொண்டு வந்து 85 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்கிவரும் நம் தமிழக முதல்வரவர்கள் விரைவில் உங்களுடைய அறிவுப் பசியையும் தீர்க்க ஆவன செய்வார் என்றே நம்புகிறோம்.

உங்களைப் போன்ற குழந்தைகளுக்கு நல்ல நல்ல நூல்களை அழகிய படங்களுடன் மலிவான விலையில் வெளியிட ஒரு நிறுவனத்தை அமைக்க வேண்டும் என நம் தமிழக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சென்ற நவம்பர் மாதம் குழந்தைகள் நாளில் விருப்பம் தெரிவித்தார்கள். அந்த நிறுவனத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் தற்போது எடுத்து வருவதாக அறிகிறோம். விரைவிலே, உங்களுக்கான ஒரு புத்தக டிரஸ்ட் தமிழகத்தில் தோன்றப் போகிறது என்பதை நினைக்கும் போதே நெஞ்சம் இனிக்கிறது.

இந்த இதழில் 'தெலுங்குச் சிறுவருக்குச் சேவை செய்யும் அகாடமி' என்ற கட்டுரை வெளியாகியிருக்கிறது. அதைப் படித்ததும், 'ஆஹா! ஆந்திர மாநிலக் குழந்தைகள் அதிர்ஷ்டசாலிகள்தான்!' என்று பாராட்டுவீர்கள். அத்தகைய அதிர்ஷ்டம் நம் தமிழ்க் குழந்தைகளுக்கும் கிட்டுவதற்கு அதிக நாள் இல்லை என்றே நம்புகிறோம்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




ப. நா. பாலசுப்பிரமணியன்



அ. சுப்பையன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



சு. ஸ்ரீராம்




சுப. கலாவதி



ஆர். அமர்நாத்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஏ. ரசித்



சு. லட்சுமி பிரபா



ஏ. ஆர். வீரராகவன்

அட்டை வண்ணப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி

மின்மினிக் கதைகள்

('சிங்கமும் சுண்டெலியும்,' 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும்' போன்ற பல கதைகளைக் கேட்டிருக்கிறீர்கள். இக்கதைகளைக் கூறியவர் கிரேக்க நாட்டு அறிஞராகிய ஈசாப் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஈசாப் கூறிய கதைகளை நிறைய நிறையக் கேட்டு மகிழ்ந்த நீங்கள், ஈசாப்பைப் பற்றிய சில கதைகளை இங்கே படித்து மகிழப் போகிறீர்கள்...)

கடலைக் குடிக்கும் பந்தயம்



அந்தக் காலத்தில் சந்தையில் ஆடு மாடுகளை விற்பதைப் போல் மனிதர்களையும் விற்று வந்தனர். அப்படி விற்கப்பட்ட ஒரு மனிதர்தாம் ஈசாப். அவரை சாந்தஸ் என்பவர் விலைக்கு வாங்கித் தம்மிடம் அடிமையாக வைத்திருந்தார்.

ஒரு நாள் சாந்தஸ் குடிவெறியில் தமது நண்பர்களிடம் ஒரு பந்தயம் கட்டிவிட்டார். அதாவது சமுத்திரத்தில் உள்ள தண்ணீர் முழுவதையும் அவர் குடித்துப் பொட்டலாக்கி விடுவதாகவும், அப்படிச் செய்யாவிடில், தம் சொத்து முழுவதையும் கொடுத்து விடுவதாகவும் கூறினார்.

ஆனால், மயக்கம் தெளிந்ததும், தாம் செய்த முட்டாள்தனத்தை உணர்ந்தார். 'இதற்கு என்ன வழி?' என்று தம்மிடம் அடிமையாக இருந்த ஈசாப்பைக் கேட்டார்.

ஈசாப் ஒரு நல்ல யோசனை கூறினார்; அதன்படி சமுத்திரத்திலுள்ள நீரைக் குடிக்க சாந்தஸ் ஈசாப்புடன் புறப்பட்டார். மற்றவர்களும் சென்றனர்.

சமுத்திரத்தை அடைந்ததும், ஈசாப் அங்கு நின்றவர்களைப் பார்த்து, "நண்பர்களே, எங்கள் எஜமானர் சமுத்திரத்திலுள்ள நீர் முழுவதையும் குடிக்கத் தயார்தான். அவர் சமுத்திரத்திலுள்ள நீரை மட்டுமே குடிப்பதாகக் கூறினார். ஆனால், இப்போது பல ஆறுகளிலிருந்தும் நீர் வந்து சமுத்திரத்தில் விழுந்து கொண்டேயிருக்கின்றதே! குடிக்கக் குடிக்கத் தண்ணீர் வந்து கொண்டேயிருந்தால், எப்படிக் குடித்துப் பொட்டலாக்குவது? ஆகையால், முதலில் ஆற்று நீர் சமுத்திரத்தில் விழாதபடி முகத்துவாரத்திலேயே அடைத்துவிட வேண்டும். அப்போதுதான் என் எஜமானர் சொன்னபடி செய்வார்," என்றார்.

உடனே, வேடிக்கை பார்க்க அங்கு வந்திருந்தவர்கள், "ஆமாம், ஆமாம். அதுதான் சரி" என்று கூச்சலிட்டனர்.

பந்தயம் கட்டியவர்களுக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. வெட்கத்துடன் திரும்பிவிட்டனர்.

கனமில்லாத சுமை

அவர் அடிமையாக இருந்தபோது, ஒருநாள் அவருடைய எஜமான்ர் வெளியூர் செல்லப் புறப்பட்டார். சாமான்களைத் தூக்கி வருவதற்காகத் தம்முடன் சில அடிமைகளையும் அழைத்துச் செல்வது அந்த எஜமானரின் வழக்கம்.

அன்று எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்களை ஈசாப் ஒரு முறை பார்த்தார். பிறகு, மற்ற அடிமைகளைப் பார்த்து, "எனக்கு அதிக கனமில்லாத சுமையைத் தர வேண்டும்" என்று கேட்டார்.

ஈசாப்பிடம், மற்ற வேலைக்காரர்களுக்கு எப்போதுமே நல்ல மதிப்பு உண்டு. ஆகையால், "சரி, உனக்கு வேண்டிய சாமானை எடுத்துக் கொள்" என்றார்கள், அவர்கள்.

உடனே ஈசாப் அங்கிருந்த பெரிய கூடை ஒன்றை எடுத்துக் கொண்டார். அக்கூடை நிறைய ரொட்டிகள் இருந்தன, வழியில் சாப்பிடுவதற்காக. ஈசாப் பெரிய கூடையைத் தூக்கிக் கொண்டதும், மற்ற அடிமைகள் சிரித்தார்கள்.

"என்னப்பா இது! கனமில்லாத சுமையாக வேண்டுமென்று கேட்டாய். இவ்வளவு பெரிய கூடையைத் தூக்கிக் கொண்டிருக்கிறாயே!" என்றார்கள்.

ஈசாப் ஒன்றும் பதில் கூறவில்லை.

ஆனால், ஈசாப் ஒரு முட்டாளல்ல என்பதை அவருடைய நண்பர்கள் தெரிந்து கொள்ள வெகு நேரமாகவில்லை. ஈசாப் வைத்திருந்த கூடையிலிருந்த ரொட்டிகளை வேளா வேளைக்கு அவர்கள் எடுத்துத் தின்று வந்ததால், கனம் குறைந்து கொண்டே வந்தது. செல்ல வேண்டிய ஊரை நெருங்கிய போது ஈசாப் வெறும் கூடையுடன் ஆனந்தமாக நடந்து சென்றார். ஆனால், மற்றவர்கள்



அப்படிச் செய்யவில்லை; போகப் போக அவர்கள், சுமையைத் தூக்க முடியாமல் அலுத்துப் போய்விட்டனர்.

அப்போதுதான் அவர்கள் ஈசாப்பின் புத்திசாலித்தனத்தை உணர்ந்தனர்!

ஒரே ஒரு மனிதன்



ஈசாப் வசித்த ஊரில் பொது மக்கள் குளிப்பதற்காக ஒரு குளம் அமைக்கப்பட்டிருந்தது.

அன்று ஈசாப்பின் எஜமானர் அந்தக் குளத்தில் குளிக்க எண்ணினார். உடனே ஈசாப்பை அழைத்து, அந்தக் குளத்தில் கூட்டம் இருக்கிறதா என்று பார்த்து வரச் சொன்னார். ஈசாப் போய்ப் பார்த்தார்.

அப்போது குளத்திற்குச் செல்லும் வழியில் நீளமான ஒரு கல் கிடந்தது.

குளிக்கச் செல்வோரில் சிலர் அதைத் தாண்டிக் கொண்டு சென்றனர். சிலர் அதில் தடுக்கி விழுந்து, பிறகு எழுந்து சென்றனர். ஆனால், ஒருவர் கூட அதை அப்புறப்படுத்தவில்லை.

ஈசாப் இந்தக் காட்சியைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அதே சமயம் அங்கு வந்தார் ஒருவர். அவர் அந்தக் கல்லைத் தூக்கி ஓர் ஓரத்தில் போட்டுவிட்டுக் குளிக்கச் சென்றார்.

ஈசாப் உடனே திரும்பித் தம் எஜமானரிடம் சென்று, ''குளத்தில் ஒரே ஒரு மனிதர்தான் குளித்துக் கொண்டிருக்கிறார்'' என்றார்.

''சரி, போய்க் குளித்துவிட்டு வருகிறேன்'' என்று எஜமானர் புறப்பட்டுக் குளத்திற்குச் சென்றார்.

அங்கு ஏராளமானவர்கள் குளித்துக் கொண்டிருந்தனர். உடனே எஜமானருக்கு ஈசாப்பின் மேல் கோபம் வந்துவிட்டது. வேகமாக வீட்டுக்குத் திரும்பி வந்தார். ஈசாப்பை அழைத்து, ''உனக்கென்ன, கண் பொட்டையா? குளத்தில் எத்தனை பேர் குளிக்கிறார்கள்? ஒரே ஒருவர் குளிப்பதாகக் கூறினாயே!'' என்று கேட்டார்.


''ஆம் எஜமானே, அவர் ஒருவர்தான் மனிதர்! வழியிலே கிடந்த கல்லை அப்புறப்படுத்தி, மற்றவர்களை விழாமல் காப்பாற்றிய அவர் ஒருவர்தான் மனிதர்!'' என்றார் ஈசாப்.

தடுக்கி விழ வைக்கும் கல்லைக் கண்டும், பேசாமல் சென்று குளித்துக் கொண்டிருந்தார்களே, அவர்களை மனிதர் என்று சொல்ல விரும்பவில்லை, நம் ஈசாப். இதை அறிந்த எஜமானர் ஈசாப்பின் புத்தி நுட்பத்தைப் பாராட்டினார்.



சிந்தனையாளர் ரூசோ

தோற்றம் : 28-6-1712 மறைவு : 2-7-1778



வில்லியம் தாம்ஸன்

தோற்றம்: 26-6-1824　　　மறைவு: 17-12-1907




சிந்தனையாளர் ரூசோ

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த இவர் சிறந்த சிந்தனையாளரும் தத்துவ அறிஞருமாவார். இவருடைய தந்தையார் கடிகாரம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். சிறிய வயதிலேயே தாயை இழந்த இவர், சரியாகப் பள்ளிக்குச் சென்று கல்வி கற்கவில்லை. ஆயினும்இவர் சுயமாகக்கல்வி கற்றுப் பல நூல்களை எழுதினார். அந்த நூல்களில் ஏழை மக்கள் படுகின்ற துன்பங்களையெல்லாம் எடுத்துக் கூறி அவர்களின் உரிமைகளை வற்புறுத்தினார். நாட்டில் வாழும் எல்லாரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்தார். அக்கால மக்களுக்கு இவரது கொள்கைகள் மிகவும் புதுமையாக இருந்ததோடு மிகவும் பிடித்துமிருந்தன. அத்துடன் அன்று முதல் இன்று வரை இவரது கொள்கைகள் உலக வரலாற்றிலே பல முக்கிய மாற்றங்களைச் செய்திருக்கின்றன!

18 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. அதற்குப் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பே இவர் இறந்து விட்டார். ஆயினும், அந்தப் புரட்சியைத் தூண்டி விட்டவை இவரது எழுத்துக்களே! குடியரசுக் கொள்கையை உலகில் பரப்பியது, அந்தப் பிரெஞ்சுப் புரட்சி தான்.

இவர் எழுதிய நூல்களில் சமூக ஒப்பந்தம் (Le Contract Social) என்ற நூல் மிகவும் சிறப்பானது.

“குழந்தைகள் தாமாகச் சிந்திப்பதற்கு வழிவகுத்துக் கொடுப்பது மிக அவசியம். அதுவே மிகவும் உயர்ந்த கல்விக்கு அடிகோலும்” என்பது இவர் கருத்து.



வில்லியம் தாம்ஸன்

இவர் ஓர் ஆங்கில விஞ்ஞானி.

இவர் ஆராயாத பௌதிகத் துறையே இல்லை என்று சொல்லலாம். வெப்ப இயலைப் பற்றி ஆராய்ந்து இவர் 'தனி வெப்ப நிலை' என்ற புதுக் கருத்தை வெளியிட்டார். இதன் மூலம் பௌதிகத் துறைக்கு இவர் மிகப் பெரிய சேவை புரிந்திருக்கிறார்.

கடலுக்குள் தந்தி அமைக்கும் முயற்சியிலும் இவர் வெற்றி பெற்றார். இதற்காகப் பல நுட்பமான கருவிகளைத் தயாரித்து உதவினார். மாலுமிகளுக்கு மிகவும் உதவக் கூடியது திசை காட்டும் கருவி. அதை இவர் திருத்தி அமைத்ததோடு, கடலில் பயன்படும் பல கருவிகளையும் அமைத்துத் தந்தார். இவரது விஞ்ஞானத்திறமையைப் பாராட்டி அரசாங்கம் பல கௌரவங்களை வழங்கியது. இவர் கெல்வின் பிரபுவாக ஆக்கப்பட்டார்.

ராயல் சொஸைட்டியின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகச் சேர்ந்து 50 ஆண்டுகள் ஆனதும், அந்தப்பல்கலைக் கழகத்தின் மிகப் பெரிய நூலகத்தில் ஒரு காட்சியை அமைத்திருந்தார்கள். அக்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இவரது கண்டுபிடிப்புக்களை உலகின் பல நாடுகளிலிருந்தும் ஏராளமான விஞ்ஞானிகள் வந்து கண்டு களித்தனர்.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இவரைத் தேடி வந்து, இவரது யோசனைகளைப் பெற்றுச் சென்றனர். அவர்களில் பலர் புகழ் பெற்ற விஞ்ஞானிகளாகப் பிற்காலத்தில் விளங்கினர்.



வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.
சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.
அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.
காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.
Complan
COMPLETE PLANNED FOOD
23
மூலதார சத்துணவுகள்
திட்டமிட்ட விகிதங்களில்
புரதம் ரிபோ
கொழுப்பு ப்ளேவின்
கார்போ நிகோடி
ஹைட்ரேட் னமைடு
கால்ஷியம் கால்ஷியம்
பாஸ்பரஸ் பென்டோதெனேட்
சோடியம் கோலின்
குளோரைடு வைரிடாக்ஸின் (பி6)
(கரி வடிவில்) வைட்டமின் (பி12)
பொட்டாஷியம் ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து வைட்டமின் ஸி
அயோடின் வைட்டமின் டி
வைட்டமின் "ஏ" வைட்டமின் ஈ
வைட்டமின் "பி1" வைட்டமின் கே
பால் சேர்த்திடத் தேவையில்லை.
காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூரண உணவு
GX/2G/203 TML

தெலுங்குச் சிறுவருக்குச் சேவை செய்யும் அகாடமி

ஹைதராபாத்தில் பர்கட்புரா என்னுமிடத்தில் ஒரு நிறுவனம் இருக்கிறது. அது சிறுவர்களுக்காக இலக்கிய சேவை செய்து வருகிறது. அதன் பெயர் 'ஆந்திர மாநில பாலல அகாடமி'. ஆந்திர அரசின் உதவியோடு அது இயங்கி வருகிறது. நிறுவனத்தின் செயலாளர் திரு சுப்பராயனைச் சந்தித்தபோது அகாடமி குழந்தைகளுக்காக என்னென்ன நற்பணிகளைச் செய்து வருகிறது என்பதை விவரமாகத் தெரிவித்தார்.

1976—ல் நிறுவப்பட்ட இந்த அகாடமி குழந்தைகளைக் கவரும் வண்ணம் பல செயல்களைச் செய்து வருகிறது.



பத்திரிகை — பாலசந்திரிகை

குழந்தைகளுக்கான புத்தகங்கள்

ஏராளமான படங்களுடன் குழந்தைகளின் உள்ளங்களைக் கவரும் வண்ணம் பல நூல்களை வெளியிடுகிறார்கள்.

சிறுவர்களின் வயதுக்கேற்ப மூன்று வகையான புத்தகங்களை வெளியிடுகிறார்கள். எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், எட்டிலிருந்து பதினொரு வயதுக்குட்பட்ட குழந்தைகள், பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் என்று மூன்று பிரிவினருக்கான நூல்கள் அங்கு வெளியிடப்படுகின்றன.

ஒரு புத்தகத்தைப் பார்த்தவுடனே

8 வயதிற்குள்

8 முதல் 11 வயது

12 வயதுக்கு மேல்

— சாந்தினி —

அன்னம்



அது எந்த வயதுப் பிள்ளைகளுக்காக வெளியிடப்பட்டது என்பதைக் கண்டு பிடித்துவிடலாம். அட்டையிலே சிறிதாகக் கிளிப் படம் போட்டிருந்தால் அது 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, யானைப் படம் இருந்தால் 8 முதல் 11 வயதினருக்கு, அன்னம் படம் இருந்தால் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு.

புஜ்ஜி கதலு (சின்னஞ் சிறு கதைகள்) என்ற தலைப்பில் எண்பது வார்த்தைகள் கொண்ட எட்டுப்பக்கப் புத்தகங்கள். எல்லாப் பக்கங்களிலும் வண்ணப் படங்கள். எட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்காக வெளியிடும் புத்தகங்கள். விலையோ ஒரு ரூபாய்தான். இதுவரை 10 தலைப்புகள் வெளிவந்துள்ளன. நூலிலே முக்கால் பங்கு படங்களாகவே இருக்கின்றன.

இதுபோல 8—11 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான நூல்களில் பாதிப் பங்கு படங்கள் காணப்படுகின்றன. 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளின் நூல்களில் கால் பங்கு படங்கள். இப்படியாக வயதுக்கேற்ற விதமாக நூல்களை வெளியிடுகிறார்கள்.

'புஜ்ஜி கதலு' என்ற தலைப்பில் சிம்மம் எலுக (சிங்கமும் எலியும்), பட்டணம் எலுக (பட்டணத்து எலி), குர்ரம் காடித (குதிரையும், கழுதையும்) போன்ற நூல்கள் குழந்தைகளிடையே பிரபலமாகியுள்ள நூல்கள்.

உடல் நலம் மற்றும் சுகாதாரம் பற்றிய 'டாக்டர் கொக்கரோகோ' என்ற நூலும் 'போகடரா நி தல்லி பூமி பாரதினி (உன் தாய் நாட்டைப் புகழ்ந்து பேசு) என்ற நூலும் திரு கல்வி கோபாலகிருஷ்ணனால் எழுதப்பட்டவை. தெலுங்கில் மொழி பெயர்த்து எட்டு வயதிலிருந்து பதினொரு வயதுவரை உள்ள குழந்தைகளுக்காக வெளியிட்டிருக்கிறார்கள்.

'சிலுக பலுகுலு' (கிளிப் பாட்டு) என்ற தலைப்பில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒன்று 'லாலி லாலம்மா லாலி' என்ற தாலாட்டுப் பாட்டுகள் கொண்ட நூல் சிறுவர் சிறுமிகளை மிகவும் கவர்ந்துள்ளது.

'தப்பட்லோய் தாலலோய்' என்ற நூலில் எல்லாம் குழந்தைகளுக்கான சிறு பாடல்கள். எட்டு வயதுக் குழந்தைகளைப் பாட வைக்கும் நூல்.

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கான பல பயனுள்ள நூல்களும் உள்ளன.

வெலுகு பட்டலு (வெளுப்பான துணிகள்), இந்திரா காந்தியைப் பற்றிய 'இந்திரா பிரியதர்சினி, சிலுக தீர்ப்பு (கிளியின் தீர்ப்பு), இந்திர தனுசு (சரோஜினி நாயுடுவின் வாழ்க்கை வரலாறு), ஆந்துருல கதா (ஆந்திர மக்களின் வரலாறு), சுயராஜ்யம் நா ஜன்ம அக்கு (சுயராஜ்ஜியத்தின் கதை) போன்ற நூல்கள் நாடக வடிவிலும் வெளிவந்துள்ளன. சுயராஜ்யம் நா ஜன்ம அக்கு என்ற நூலை எழுதிய திரு டி. ராமலிங்கம் என்பவருக்கு தெலுங்குப் பல்கலைக் கழகம் இலக்கியப் பரிசு ஒன்றைத் தந்து கௌரவித்துள்ளது.

'பண்டக பாடலு' (பண்டிகைப் பாடல்கள்) என்ற நூல் விழாக் காலங்களில் பாடக் கூடிய பாடல்கள் கொண்ட நூலாகும்.

குழந்தைகளைக் கவரும் இந்நூல்கள் ஒவ்வொரு மாதமும் குறைந்தது இரண்டு அல்லது மூன்று நூல்களாவது வெளிவருகின்றன.

சிறுவர் பத்திரிகை

சிறுவர்களுக்கான ஒரு பத்திரிகையை 'பாலசந்திரிகை' என்ற பெயரில் நடத்தி வருகிறது. அகில உலகக் குழந்தைகள் ஆண்டான 1979—ல் ஆரம்பிக்கப்பட்டது. 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காகத் தயாரித்து வெளியிடுகிறார்கள். பத்திரிகையைப் புரட்டும்போது எவ்வளவு படங்கள்! எவ்வளவு விஷயங்கள்! அப்பப்பா, குழந்தைகளின் உள்ளத்தை அப்படியே கவர்ந்து விடும் பல அம்சங்களைக் கொண்டிருக்கிறது! மாதந்தோறும் 40,000 பிரதிகளை அச்சிட்டு மாநிலத்திலுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் அனுப்பி வருகிறார்கள். பத்திரிகையின் விலை என்னவோ இரண்டு ரூபாய் தான். முப்பத்திரண்டு பக்கங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் வண்ணப் படங்கள்.

இப்பத்திரிகைக்கு குழந்தைகளும்

எழுதலாம். வெளியாகும் கதை, கட்டுரைகளுக்குச் சன்மானமாக, அழகான புத்தகங்களைக் கொடுக்கிறார்கள்.

சின்னச்சின்னப் பாடல்கள், சுவையான கதைகள். நகைச்சுவைத் துணுக்குகள், நாட்டு நடப்பு விவரங்கள், புகைப்படங்கள் — இப்படியாகப் பல சுவையான அம்சங்களைத் தாங்கி வருகிறது பாலசந்திரிகை.

தவிர, பத்திரிகையின் நடுப் பக்கத்தில் 4 பக்கங்கள் கொண்ட விஞ்ஞானப் பகுதி உள்ளது. மாதாமாதம் வெளியாகும் இப்பகுதியைத் தனியே எடுத்துத் தொகுத்து வைத்துக் கொண்டால், ஒரு சிறந்த கலைக் களஞ்சியமே உருவாகிவிடும்! மேலும், இப் பத்திரிகையில் பொழுதுபோக்கு அம்சமாக பொம்மை செய்தல், ஓவியம் வரைதல், விளையாட்டு விவரங்கள் போன்ற பகுதிகளும் உண்டு. ஆந்திர மாநிலத்தில் 'பாலசந்திரிகை' சிறுவர்களிடையே நன்கு பிரபலமாகியுள்ளது. பட்டி தொட்டிகளிலெல்லாம் இப்பத்திரிகை அங்குள்ள குழந்தைகளைக் கவருகிறது.

காசெட்டுகள்


நூல் வடிவில் வந்த கதைகள், கவிதைகள், தாலாட்டுப் பாடல்கள் எல்லாவற்றையும் காசெட்டுகளாகத் தயாரித்து வெளியிட்டுள்ளார்கள். இசையுடன் கூடிய பாடல்களைக் குழந்தைகள் மிகவும் விரும்பிக் கேட்பதோடு, மகிழ்ச்சியுடன் பாடவும் செய்கிறார்கள். (சிலுக பலுகுலு) 'கிளிப் பாட்டு' என்றதலைப்பில்எட்டுக்கதைப் பாட்டுகள், மேலும் இவற்றைக் குழந்தைகளுக்காக நாடக வடிவமாக்கிகாசெட்டுகள் தயாரித்து வெளியிட்டுள்ளார்கள். காசெட்டுகளுடன் அவற்றுக்குரிய புத்தகங்களையும் இணைத்து விற்பனை செய்கிறார்கள்.

கதைகளை உரக்கப் படித்துக் காட்டும் (Read Aloud) முறையைக் கடைப்பிடித்து பல சிறுவர் கதைகளை காசெட்டுகளாகத் தயாரித்துள்ளார்கள். இவை மூன்று வயதிலிருந்து ஏழு வயதுக் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்பட்டவை.

இதுபோன்று 8 - 11 வயதுக்கான குழந்தைகள், 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான கதை, கவிதைகள் எல்லாம் காசெட்டுகளாகத் தயார்செய்து வெளியிட்டுள்ளார்கள். காசெட்டுகள் குழந்தைகளின் மனத்தில் பல நல்ல விஷயங்களை நன்கு பதிய வழி செய்கின்றன. தவிர, கோலாட்டப் பாடல்கள், நாடகங்கள் போன்ற சுவையான அம்சங்கள் கொண்ட காசெட்டுகள் சிறுவர்களிடையே நல்ல மதிப்பைப் பெற்றுள்ளன. ஆந்திராவின் கலாசாரம், வரலாறு, கலைகள் போன்ற விஷயங்கள் காசெட்டுகள் மூலம் நன்கு அறியப்படுகின்றன.

புத்தகப் பெட்டி

இன்னொரு புதுமையை அகாடமி செய்து வருகிறது. 'பிரதி படிகி பால சரஸ்வதி பீடம்' என்ற திட்டம்தான் அது. எல்லா வயதுக் குழந்தைகளுக்கான நூல்களையும், காசெட்டுகளையும் ஓர் அழகான அட்டைப் பெட்டியில் வைத்து, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள நூலகத்துக்கும் அனுப்பி வைக்கிறார்கள். ரூபாய் எண்பத்தாறு விலையுள்ள இந்தப் புத்தகப் பெட்டியை பள்ளிகளில் உள்ள குழந்தைகள் நன்கு பயன்படுத்துகிறார்கள். இதற்கான செலவை அரசு ஏற்கிறது.





செயலாளர் சுப்பராயன்

பொம்மலாட்டம்

குழந்தைகளை மிகவும் கவரக் கூடியது பொம்மலாட்டம். இதை நன்குணர்ந்து பொம்மலாட்டக் காட்சிகளைப் பள்ளிகள் தோறும் அவ்வப்போது நடத்தி வருகிறது இந்நிறுவனம். இந்நிகழ்ச்சியை 1984—ல் ஆரம்பித்து இன்று பல பள்ளிகளில் நடத்தி வருகிறார்கள். 'பலே தீர்ப்பு' (அதிசய தீர்ப்பு) புகழ் பெற்ற விடுதலை வீரர் அல்லூரி சீதாராம ராஜுவின் வரலாறு போன்ற பல நாடகங்களை பொம்மலாட்ட வடிவில் தயாரித்துள்ளார்கள். மற்றும் விலங்குகளின் கதைகள், விஞ்ஞான விஷயங்கள் போன்ற பல அம்சங்கள் கொண்ட பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் குழந்தைகளை மிகவும் கவர்ந்துள்ளன. இதன் பொறுப்பை ஏற்று, திறம்பட நடத்தி வரும் திருமதி எம். ராஜ்யலக்ஷ்மி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தவிர பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், ஓவியம் தீட்டுதல் போன்ற பல நிகழ்ச்சிகளை நடத்தி, குழந்தைகளுக்குப் பல பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது இந்த 'ஆந்திர பிரதேச பாலல அகாடமி' இந்த அகாடமி ஆந்திர மாநிலத்துக் குழந்தைகளுக்கு அரியதொரு சேவையைச் செய்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

சின்னஞ் சிறு வயதிலே நல்ல புத்தகங்களைப் படிக்கும் ஆர்வத்தை வளர்க்க வேண்டும். கதையும் பாட்டும் கூறி அவர்களை நல்ல குடிமக்களாக ஆக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் ஆந்திர மாநில அரசால் நிறுவப்பட்டு, மிகுந்த அக்கறையுடன் வளர்க்கப்படும் இந்நிறுவனம் போல், நம் தமிழகத்திலும் ஏற்படாதா என்ற ஏக்கம் உங்களுக்கு ஏற்படுகிறதல்லவா? அந்த ஏக்கத்தைப் போக்க. நம் தமிழக அரசும் விரைவில் முன் வரும் என்று நம்புவோமாக!


அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநர்

டாக்டர் லலிதா காமேஸ்வரன்





இரு மொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS

நாளை கிடைக்கும் பலாக்காயை விட இன்று கிடைக்கும் களாக்காயே மேல்.
A bird in the hand is worth two in the bush.

ஆபத்தில் உதவுகிறவனே உண்மையான நண்பன்.
A friend in need is a friend indeed.

உயர, உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகாது.
A hog armour is still but a hog.

பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.
An old thief will one day be caught.



சூடுகண்டபூனை அடுப்பருகில்போகாது.
A burnt child dreads the fire.

குற்றமுள்ள. நெஞ்சு குறுகுறுக்கும்.
A guilty conscience needs no accuser.

குரைக்கிற நாய் கடிக்காது.
Barking dog seldom bites.

புயலுக்குப் பின் அமைதி.
Calm follows storm.

வரவுக்குத் தகுந்த செலவு செய்.
Cut your coat according to the cloth.

கொல்லன் தெருவில் ஊசி விற்காதே.
Do not carry coal to Newcastle.

கால தாமதம், காரிய நஷ்டம்.
Delay is dangerous.

அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும்.
Every bird must hatch its own eggs.

தோல்வியே வெற்றிக்கு முதல்படி.
Failures are stepping stones to success.

வாய்மையே வெல்லும்.
Honesty is the best policy.

பணம் பத்தும் செய்யும்.
Money makes many things.

புதுத் துடைப்பம் நன்றாகப் பெருக்கும்.
New broom sweeps well.

நெருப்பின்றி புகையாது.
No smoke without fire.

ஆணவம் அழித்துவிடும்.
Pride goes before a fall.

தொகுத்தவர்:
ஆலங்காடு கோ. கோபிநாத்.



கோடை விடுமுறை விட்டாச்சு;
கொள்ளை இன்பம் இன்பம்தான்!
ஆடிப் பாடி மகிழ்ந்திடலாம்;
ஆகா! இன்பம் இன்பம்தான்!

ஊர்கள் பலவும் சென்றிடலாம்;
உறவு முறையைக் கண்டிடலாம்!
ஏரி குளத்தில் நீந்திடலாம்;
எங்கும் சுற்றித் திரிந்திடலாம்!

நண்பர் பலரைக் கண்டிடலாம்;
நாளும் பேசிக் களித்திடலாம்!
விண்ணில் பட்டம் விட்டிடலாம்;
விருப்பம் போல ஆடிடலாம்!

கூட்டாஞ்சோறு பொங்கிடலாம்;
கூடி ஒன்றாய்த் தின்றிடலாம்!
பாட்டும் கதையும் கேட்டிடலாம்;
பலவாய்ப் பொழுதைக் கழித்திடலாம்!

என் குழந்தைப் பருவம்

—லக்ஷ்மி



சென்ற இதழ் தொடர்ச்சி

தெருவிலிருந்த மற்ற ஆண் குழந்தைகளைப் போல கிட்டிப்புள், பலிஞ்சடுகுடு முதலிய விளையாட்டுக்களில் கலந்து கொள்ள ஆசைப்பட்டேன். வீட்டுக்குச் சீராட வந்திருக்கும் பேத்திகள் எல்லாம் சோழி வைத்துப் பல்லாங்குழி ஆடக் கற்றுக் கொண்டிருந்த சமயம், நான் மரம் ஏறக் கற்றுக் கொண்டிருந்தேன்.

பின்பக்கமிருந்த பன்னீர் மரத்தின் கிளையைத் தாவிப் பிடித்து 'எப்படி ஏறுவது' என்பதை என் பெரியம்மா மகன் கற்றுக் கொடுக்க, நான் அந்த வயதிலேயே துணிச்சலாகக் கிணற்றுக் கைப்பிடியின் மீது ஏறி அருகில் நீண்டிருக்கும் கிளையைப் பிடித்து மரம் ஏறப் பழகிக் கொண்டு விட்டேன்.

நானே பறித்த மொட்டுக்களை நாரில் தொடுத்துத் தலையில் சூட்டிக் கொண்டு மகாப்பெருமை அடைவேன். பாட்டியின் கண்களுக்குப் படாது நான் செய்த இந்த வேலைக்கு ஒருநாள் முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது.

எதையோ எடுக்கப் பின்பக்கம் வந்த பாட்டி தோட்டத்தை எட்டிப் பார்த்தாள். பன்னீர் மரத்தின் உயரமான கிளை ஒன்றில் காலைத் தொங்கப் போட்டு நான் உட்கார்ந்திருந்ததைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

அவளுக்கு சமயோசித புத்தி அதிகம். இரைந்து கத்தினால் நான் பயந்து கீழே விழுந்துவிடக் கூடும் என எண்ணி மெல்ல மரத்தருகில் வந்தாள்.

''பூ வேணும்னு சொன்னா, மாமா பறிச்சுத் தருவானே? நீ ஏன் மரத்திலே ஏறினேம்மா? மெதுவா இறங்கும்மா!'' என்று தாஜா செய்தாள்.

பாட்டி கோபிக்கவில்லை என்ற தெம்பில் நான் மெல்ல மரத்தை விட்டுக் கீழே இறங்கியதுதான் தாமதம். தலையைப் பற்றிக் கொண்டு 'பளார் பளார்' என்று என் முதுகில் அறைந்தாள்.

வீடே இரண்டு பட நான் அலற, உள்ளேயிருந்தவர்கள் எல்லோரும் ஓடிவர 'ஓ'வென்று பாட்டி கூச்சலிட்டாள்.

''பெண் குழந்தை கீழே விழுந்து காலை ஒடிச்சுக் கொண்டா எவன் கல்யாணம் செய்துப்பான்?'' என்று கோபத்துடடன் அதட்டினாள்.

மாமா இடைபுகுந்து சமாதானம் செய்தார். நான் மரம் ஏறும் விளையாட்டைக் கைவிட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டேன்.

சிதம்பரத்தில் நடந்த ஒரு திருவிழாவுக்குப் பாட்டி என்னை அழைத்துக் கொண்டு போயிருந்தாள்.

பட்டுப் பாவாடை—சட்டை அணிவித்து உச்சந்தலையில் நாகர் வைத்துக்



குஞ்சலம் கட்டிப் பின்னிவிட்டு கால்களுக்குப் புதுப் பட்டைக் கொலுசுகளை அணிவித்து அலங்காரமாக என்னை அழைத்துச் சென்றான்.

கடவுள் புறப்பாடு கோபுர வாசலை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் ஒரே கூட்டம்.

பாட்டி என்னை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள். கூட்டத்தையும் சாமியையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நான், யாரோ காலைத் தொடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன்.

கொடுவாள் மீசை ஆசாமி ஒருவன் 'வாயைத் திறக்காதே' என்று உதட்டின் மீது விரலை வைத்து மௌனமாக மிரட்டியபடி என் வலது கால் கொலுசைக் கழற்றிக் கொண்டிருந்தான்.

எனக்கேற்பட்ட பயத்தில் பாட்டியின் கழுத்தை இறுகப் பற்றிக் கொண்டேன். வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. வீட்டுக்குப் போனதும் வலதுகால் கொலுசு காணாது பாட்டி அலறிவிட்டாள்.

'எங்கே தொலைச்சே' என்று அதட்டியபோது நான் உண்மையைச் சொன்னேன்.

''அடிப்பாவி! ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லியிருந்தா நான் விட்டிருப்பேனா? புத்தம் புது கொலுசைக் கண்பட்டது போலப் பறிகொடுத்துட்டு வந்திருக்கே... மக்கு'' என்று திட்டியபடி என் தலையில் ஓங்கிக் குட்டினாள்.

ஒரு வெயில் நாள். தெருவில் ஆள் நடமாட்டம் இல்லாத போது வாட்டசாட்டமான ஆசாமி திண்ணையருகே வந்தான்..''பாப்பா கீழே இறங்கி என்னோடு வா. உனக்கு வேடிக்கை காட்டுகிறேன்'' என்றான்.

உள்ளே திரும்பிப் பார்த்தேன். பாட்டியைக் காணவில்லை. என்ன வேடிக்கை...?பார்க்கணும் என்ற பிடிவாதம் உந்த அவன் கையைப் பிடித்துக் கொண்டு நடந்து விட்டேன்..

சற்றுத் தொலைவில் இருந்ததொரு சப்பாத்திப் புதரருகே என்னை அழைத்துச் சென்றான்.

''பாப்பா, கழுத்துச் சங்கிலியைக் கழற்று...'' என்றான் கனிவான குரலில்.

"ஐயையோ... பாட்டி அடிப்பா... முடியாது"என்று மறுத்த போது ஓங்கி ஒரு குட்டுத் தலையில் வைத்தான். ''கத்தின மென்னியை முறுக்கிடுவேன். கழற்று...'' என்றான்.

உடல் பதற நெஞ்சு துடிக்க, கண்களில் நீர் வழிய, விக்கி அழப்பயந்து சட்டென்று அவனிடம் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தேன். ''கண்ணை மூடிக்கோ.. மனசுக்குள்ளே நூறு எண்ணு... அப்புறம்தான் கண்ணைத் திறக்கணும்...'' அவன் அதட்டியதைக் கேட்டுஅரண்டுபோய்கண்களை இறுக மூடிக் கொண்டேன்.

கொஞ்ச நேரம் பொறுத்துக் கண்களைத் திறந்தபோது அவன் அங்கே இல்லை.

மெல்ல அழுது கொண்டே வீட்டுக்குத் திரும்பினேன்.

அதற்குள் பாட்டி என்னைக் காணாது வீடு முழுதும் தேடிக் கத்திக் கொண்டிருந்தாள்.

கழுத்துச் சங்கிலியை டாலருடன் கழற்றி யாரோ ஒரு தடியனிடம் கொடுத்துவிட்டதைக்கேட்டுஎல்லோரும் பதைத்துப் போனார்கள்.

''பாவிப் பெண்ணே... இப்படி ஒரு அசடாயிருப்பியா... பத்துப் பவுன் நகையைப் பறிகொடுத்திட்டியே...'' என்று அலறி அடிக்க வந்தபோது தாத்தா என்னைத் தூக்கி அணைத்துக் கொண்டார்.

''மீனாட்சி,நகை போனாப் போகட்

டும். குழந்தை உசிரோட திரும்பி வந்தாளே அது போதும்...'' என்றார்.

அன்றிலிருந்து பாட்டி எனக்கு நகைகளை அணிவிப்பதை நிறுத்திக் கொண்டாள். கழுத்தில் பவள மாலையும் கைகளில் வளையல்களும் காதில் ஈர்க்குச்சியுமாக நான் பள்ளிக்கூடம் போய் வந்தேன்.

சிறுகுழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியோ என்னவோ, நான் நகைகளை எப்போதும் விரும்பியதே இல்லை. வசதியாக வாழ்ந்த நாட்களிலும் நான் எளிமையாக இருக்க விரும்பினேன்.

நகைகளை அதிகம் அணிவதில்லை. இப்போது நான் அவைகளை வெறுக்கிறேன்.

பின்னர் ஒருசமயம் பாட்டியுடன் ஒரு பொருட்காட்சிக்குப் போயிருந்தேன். வளையல் கடையருகே பாட்டி தன் தோழி ஒருத்தியுடன் பேசத் துவங்கி விட்டாள். அவளது கைப்பிடியிலிருந்து நழுவி, மெல்ல பலூன் விற்றுக் கொண்டிருந்த ஒருத்தன் பின்னால் நான் ஓடிக் கொண்டு திரளாக எதிரே வந்ததொரு கூட்டத்தில் மூழ்கி மறைந்து திக்கு திசை தெரியாது காணாமல் போயிட்டேன்.

பாட்டி வாங்கித் தந்த ஜவ்வு மிட்டாயைக் கடித்துக் கொண்டு, கண்ணீர் கன்னங்களில் வழிந்தோட, நான் ''அம்மா! அம்மா!'' என்று பாட்டியை அலறிக் கூவியழைத்த நிலைவு இப்போதும் என் மனக்கண் முன் விரிகிறது. அந்தக் குழந்தை உள்ளத்திலே அப்போது ஏற்பட்ட திகிலைக் கற்பனை செய்து பார்க்கும் போது கூட ஒரு பயங்கர உணர்வுதான் ஏற்படுகிறது.

''ஐயோ! யார் பெத்த பிள்ளையோ, இந்தப் பிள்ளை கூட்டத்தில் காணமப் போயிருக்கு'' சில பெண்கள் என்னைச் சுற்றி நின்று அனுதாபப்பட்டனர். என் துயரம் பன்மடங்காகப் பெருக 'ஓ'வென்று கூச்சலிட்டு நான் அலறினேன்.

அந்தப் பொருட்காட்சி மைதானத்தில் ஒரு கீத்துக் கொட்டகைக்குள் காவல் நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு காவல்துறை அதிகாரி அழுது கொண்டிருந்த என்னைத் தூக்கிக் கொண்டு போய், பாதுகாப்பு நிலையத்தில் சேர்த்து விட்டார். அங்கே என்னைப் போல இன்னும் இரண்டு சிறுவர்கள் பெற்றவர்களைப் பிரிந்த பயங்கரத்தில் ஊளையிட்டுக் கொண்டிருந்தனர்!

இதற்குள் பாட்டி என்னைக் காணாது பதறிப் போய் ''என் குழந்தையைப் பார்த்தீங்களா?'' என்று பித்தம் பிடித்தவள் போல் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் கேட்டுக் கண்ணீர் விட்டு விம்மியழுதபடி மைதானத்தில் வளைய வந்து கொண்டிருந்தாள்.

''அந்தப் போலீஸ் கொட்டகைக்குள்ளே போய் விசாரிம்மா'' என்று யாரோ சொன்னதைக் கேட்டு அங்கு வந்து சேர்ந்தாள்.

அவ்வளவுதான், ''அம்மா!'' என்று அலறியபடி ஓடிச் சென்று பாட்டியை அணைத்துக் கொண்டதும், ''என் கண்ணே! எங்கே போய்ட்டே!'' என்று அழுதபடி என்னை மார்புடன் தழுவிக் கொண்டதும் இன்று போல் என் நினைவில் எழுகின்றன.

அம்மாப்பேட்டைப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை என்னால் மறக்க முடியாது. எங்களுடன் படித்த ஒரு பையன் வயதில் பெரியவன். பெரிய ரௌடி. எல்லாக் குழந்தைகளையும் மிரட்டி ஆட்டிப் படைத்த துஷ்டப் பையன். அவனைக் கண்டாலே எங்கள் அனைவருக்கும் ஒரே நடுக்கம்.





“கணக்குப் போட்டுட்டியா? எங்கே உன் சிலேட்டைக் காட்டு” என்று உரிமையோடு அதட்டியபடி காப்பி அடிப்பான்.

புத்தகங்களையும் இரவல் தராவிட்டால் கிள்ளுவான். தலையில் ஓங்கிக் குட்டுவான். தினமும் வீட்டிலிருந்து ஏதாவது தின்பண்டம் அவனுக்கு லஞ்சமாகக் கொண்டு வரவேணும். இல்லாவிட்டால் அடி! ஆசிரியரிடம் சொல்லலாம் என்றாலோ, வீட்டுக்குத் திரும்பும் வழியில் எதிர்ப்பட்டுக் கழுத்தை முறித்துச் சப்பாத்திக் காட்டில் போட்டுவிடுவேன் என்று பயமுறுத்துவான்.

ஆசிரியரிடமும் சொல்லாது பாட்டியிடமும் கூறாது அவனது துஷ்டத்தனத்தைச் சகித்துக் கொண்டிருந்தேன். தினமும் பாட்டிக்குத் தெரியாது வீட்டிலிருந்த முறுக்கு, சீடை, வெல்லக்கட்டி இத்யாதிகளை அவனுக்கு லஞ்சம் கொடுத்து வந்தேன். தின்பண்டங்கள் இல்லாதநாட்களில் பாட்டி அன்றாடம் எனக்குக் கொடுக்கும் ஒரு தம்பிடியை அவனுக்குக் கொடுத்துத் தொலைக்க வேண்டி வந்தது.

தம்பிடி போதாது, காலணா தர வேண்டும் என்று அவன் பிடிவாதம் செய்யத் துவங்கிய போதுதான் என் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது.

பாட்டி தன் வீட்டுச் செலவுப் பணத்தை ஒரு விபூதிச் சம்புடத்தில் அலமாரிமேல்தட்டில் வைப்பது எனக்குத் தெரியும். அவளுக்குத் தெரியாமல் அதிலிருந்து ஒரு காலணாவை எடுத்து, அந்தப் பயலுக்கு லஞ்சம் தரத் துவங்கினேன்.


ஒருநாள், அவ்வாறு எடுக்கையில் சம்புடம் கைதவறிக் கீழே விழுந்துவிட்டது. சப்தம் கேட்டு அங்கே ஓடிவந்த பாட்டி, “எதுக்குக் காசு சம்புடத்தை எடுத்தே” — என்று கையில் பிரம்புடன் என்னை அதட்டினாள். உண்மையைச் சொன்னதும் அவளுக்கு ஏற்பட்ட கோபம் கொஞ்ச நஞ்சமல்ல.

அப்படியே என்னைக் கையில் பிடித்துக் கொண்டு நேரே பள்ளிக்கூடம் வந்து விட்டாள். ஆசிரியரிடம் முறையிட்டாள்.

கடுமையான விசாரிப்பு நடந்தது. எங்களையெல்லாம் பயமுறுத்திய அந்தத் துஷ்டச் சிறுவன் எல்லோர் முன்னிலையிலும் ஐம்பது தோப்புக் கரணம் போட நேர்ந்தது. பாட்டி அத்துடன் விடவில்லை. அவனுடைய வீட்டுக்குச் சென்று அந்தப் பையனின் துஷ்டத்தனத்தைச் சொல்லி அவனுக்கு நான் கொடுத்த காசைக் கணக்கிட்டு, அவனது தந்தையிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டாள்.

அதற்குப் பிறகு அந்தப் பையன் பள்ளிக்குவருவதைநிறுத்திவிட்டான். ஆனால் வீடுதிரும்பும்வழியில் குறுக்கே வந்து, “இரு, உன் மண்டையை







உடைத்து மாவிளக்குப் போடுகிறேன்'' என்று அடிக்கடி பயமுறுத்திக் கொண்டிருந்தான்.

கூட்டமாக நாங்கள் வீடு திரும்பும் போது அவனது பயமுறுத்தலை லட்சியம் செய்யாமல் இருந்தேன். தனியே போக நேரும் போது நான் பயந்து போவேன்.

ஒருநாள் அவன் வழிமறித்து வம்பு செய்ய முயன்றதும் என்னையும் மீறிய ஒரு துணிவில் கீழே கிடந்த குச்சி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டேன்.

''எங்கே மண்டையை உடை பார்க்கலாம்'' என்று கத்திக் கொண்டு அவனை நோக்கி ஓடினேன். அவ்வளவுதான். அவன் எடுத்தான் ஓர் ஓட்டம்!

அவன் ஓடிய ஓட்டத்தை இன்று நினைத்தாலும் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. பயமுறுத்துகிறவர்கள் வெறும் சுண்ணாம்புப் பொம்மைகள் என்ற உண்மையை அந்தச் சிறு வயதிலேயே நான் உணர்ந்து கொண்டேன்.


என் தந்தையின் நண்பர் ஒருவர் தமது மகளுக்கு லேடீஸ் சைக்கிள் ஒன்றை வாங்கிப் பரிசளித்திருந்தார். பெண் குழந்தைக்குச் சைக்கிள் எதற்கு என்று வீட்டில் ஏகப்பட்ட எதிர்ப்பு. உடனே அவர் அதை எனக்கு அன்பளிப்பாகத் தந்து விட்டார். எனக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. நாங்கள் வசித்த தோட்டத்தின் பின்பக்கத்தில் ஒரு பெரிய தோட்டம் இருந்தது. சைக்கிளை அங்கே தள்ளிக் கொண்டு போய்ப் பல முறை கீழே விழுந்து, சில தினங்களில் சைக்கிள் ஓட்ட நான் கற்றுக் கொண்டு விட்டேன். அதற்குப் பின்னர் என் தந்தை என்னைச் சாலையில் போக்குவரத்து இடையே சைக்கிள் ஓட்டப் பயிற்சி தந்தார்.


டாக்டரும் அவரது மூத்த மகளும் சைக்கிளில் போவதை கிராமத்து மக்கள் மிகவும் அதிசயமாக வேடிக்கை பார்த்தனர்.

'என்னதான் படிக்கிற பிள்ளையாக இருந்தாலும் பெண் குழந்தை சைக்கிள் ஓட்டுவதா? பார்க்க நல்லாவா இருக்கு' என்று என் பின்னால் பலத்த கிசுகிசுப்பு ஏற்பட்டது.

ஆனால் பதினைந்து வயது வரை என் ஹைஸ்கூல் படிப்பு முடியும் வரை நான் கிராமத்துத் தெருக்களில் சைக்கிள் ஓட்டிச் சென்று சிலரின் வியப்பையும் — பலரின் கண்டனத்தையும் விலைக்கு வாங்கிக் கொண்டேன்.

— பூங்கொடி பதிப்பகம் (சென்னை — 4) வெளியிட்டுள்ள 'கதாசிரியையின் கதை' என்ற புத்தகத்திலிருந்து.





ப்ருந்தாவனக் கதையரங்கம்

பொங்கல் வாழ்த்து

சு. லட்சுமி (10513)



அன்று பொங்கல் திருநாள். ஊரே களை கட்டியிருந்தது. தபால்காரர்கள் பொங்கல் வாழ்த்துக்களைக் கொடுக்க வீடு வீடாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

ராஜா, தன் நண்பனான கண்ணன் அனுப்புவதாகக் கூறிய பொங்கல் வாழ்த்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

''இந்தா ராஜா, உனக்குப் பொங்கல் வாழ்த்து வந்திருக்கிறது'' என்று கூறி, வழக்கமாக அவர்கள் வீட்டுக்கு வரும் தபால்காரர் ஓர் அட்டையைக்கொடுத்துவிட்டுச்சென்றார்.

ராஜா மிகவும் ஆவலுடன் அதைப் பார்த்தான். அவனுடைய நண்பன் கண்ணன் அனுப்பியதுதான்என்பதை அறிந்தான். ஆனால், அது அச்சடித்துக் கடையிலே விற்கும் பொங்கல் வாழ்த்து அல்ல; கண்ணனே தன் கையால் வரைந்த இயற்கைக் காட்சி அதில் இருந்தது. அதன் அடியில், 'என் மனங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்' என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தான், கண்ணன்.

உடனே ராஜாவின் முகம் மாறியது. 'சே! இவனெல்லாம் ஒரு நண்பனா? ஒரு பொங்கல் வாழ்த்தை விலை கொடுத்து வாங்க மனமில்லை. தானே வரைந்து அனுப்பியிருக்கிறான்' என்று திட்டினான்.

பொங்கல்விடுமுறைகழிந்துராஜா பள்ளி சென்றதும் நண்பர்களிடமெல்லாம் கண்ணன் அனுப்பிய பொங்கல் வாழ்த்தைக் காட்டிக் கேலி பேசினான். கண்ணனை அருகில் வைத்துக் கொண்டே ராஜா இப்படிக் கேலி செய்தும், கண்ணன் எதுவும் கூறவில்லை. பொறுமையாக இருந்தான்.

காலம் சென்றது.

கண்ணன் ஓவியம் தீட்டுவதில் அதிக அக்கறை செலுத்தினான். விரைவில் சிறந்த ஓவியன் ஆனான். பல பரிசுகள் பெற்றான்.; சில ஆண்டுகளில் உலகப் புகழ்பெற்ற ஓவியன் ஆனான். அவன் வரைந்த ஓவியங்களை வாங்கப் பலர் போட்டி போட்டனர். உயர்ந்த விலைக்கு அவை விற்கப்பட்டன..

அப்போது ராஜா, பல இடங்களில் வேலை தேடியும் வேலை கிடைக்காமல் சிரமப்பட்டான். வறுமையில் வாடினான்.

அப்போது, ராஜாவுடன் பள்ளியில் படித்த ஒரு நண்பன், அவனிடம் வந்து, ''கண்ணன் நம்மோடு படிக்கும்போது, உனக்கு ஒரு பொங்கல் வாழ்த்து அனுப்பினானே, நினைவிருக்கிறதா? அது உன்னிடம்

இருக்குமென்று நினைக்கிறேன். அதை உடனே எடுத்து வா. நல்ல விலை கிடைக்கும்'' என்றான்.

ஒரு காலத்தில் கேலியும் கிண்டலும் செய்த அந்தப் பொங்கல் வாழ்த்தை ராஜா நினைத்துப் பார்த்தான். அதன் மதிப்பை இப்போது நன்கு உணர்ந்தான். தனக்குப் பணம் கிடைப்பதை விட, புகழ்பெற்ற ஓவியனான கண்ணனின் நட்பையே பெரிதாக மதித்தான். உடனே தன் வீட்டிற்குச் சென்று வீடு முழுவதும் தேடிப் பார்த்தான். ஆனால், அந்தப் பொங்கல் வாழ்த்து கிடைக்கவில்லை! அதன் மதிப்பை அறியாமல் எங்கோ எறிந்து விட்டோமே என எண்ணி ஏங்கினான்.



ஒரு கிராமத்தில் ஒரு பணக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு பழத்தோட்டம் வைத்திருந்தார். அந்தத் தோட்டத்தைக் கவனித்துக் கொள்ள ராமு என்ற இளைஞனை வைத்திருந்தார்.

ராமு தோட்டத்தைக் கண்ணைப் போலக் காத்து வந்தான். ஏராளமான பூச்செடிகளை வைத்தான். பழ மரங்களைப் பாதுகாத்தான். மாம்பழம், கொய்யாப்பழம், சப்போட்டாப் பழம் என்று தோட்டத்தில் பழுக்கும் பழங்களை அவ்வப்போது பறித்து, முதலாளி வீட்டில் கொண்டு போய்க் கொடுப்பான்.

ஒருநாள் ராமு தோட்டத்திலுள்ள களைகளைப் பறித்து, செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தான். அப்போது, முதலாளி அங்கு வந்து சேர்ந்தார். ராமுவைப் பார்த்த பொழுது, அவருடைய முகம் அத்தோட்டத்தில் பழுத்திருக்கும் மாம்பழங்களைப் போலச் சிவந்திருந்தது. அவ்வளவு கோபம்!

ராமுவுக்கு அவர் என்ன சொல்வாரோ, என்ன செய்வாரோ என்ற பயம் ஏற்பட்டது. அச்சத்துடன் அவர் முகத்தைப் பார்த்தான்.

''டேய் ராமு, நீ இத்தனை நாட்களாக இந்தத் தோட்டத்தில் வேலை செய்து என்ன பிரயோஜனம்? உனக்கு இங்குள்ள மாமரங்களில் எந்த மரத்துப் பழம் புளிக்கிறது, எந்த மரத்துப் பழம் இனிக்கிறது என்பது கூடத் தெரியாதா? உன்னால் எனக்கு ரொம்ப அவமானம் ஏற்பட்டுவிட்டது. வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் தின்பதற்காகக் கொடுத்த பழங்கள் எல்லாமே ஒரே புளிப்பு! வாயில் வைக்க முடியவில்லை என்றார்கள். இப்படி என் மானத்தை வாங்கும் உன்னை என்ன செய்வதென்றே தெரியவில்லை. இன்னொரு தடவை இப்படி நடந்தால், உன்னை உடனே வீட்டுக்கு அனுப்பி விடுவேன்'' என்று இரைந்து பேசினார்.

ராமு உடனே தன்னிடத்தில் மன்னிப்புக் கேட்பான் என்று முதலாளி எதிர்பார்த்தார். ஆனால், அவன் மன்னிப்புக் கேட்கவில்லை. ''முதலாளி, என்னை நீங்கள் இந்தத் தோட்டத்தைக் கவனிக்க, பராமரிக்க பாதுகாக்கத் தானே வேலைக்கு அமர்த்தினீர்கள்? ஒவ்வொரு மரத்தின் பழங்களையும் பறித்து ருசி பார்ப்பதற்காகவா? இல்லையே! உங்கள் அனுமதி இல்லாமல், நான் பழங்களைப் பறித்துத் தின்றால் அது பெரிய தவறல்லவா? நம்பிக்கைத் துரோகமல்லவா? இதுவரை அப்படி நான் செய்து, நீங்கள் என்னை மன்னித்தாலும் கடவுள் மன்னிப்பாரா? சத்தியமாகச் சொல்கிறேன். இதுவரை நான் இந்தத் தோட்டத்திலிருந்து எந்த ஒரு பழத்தையும் பறித்துத் தின்றதில்லை.. தின்றதை போது, அது

புளிக்குதா, இனிக்குதா என்பது எனக்கு எப்படித் தெரியும்? தோட்டத்தை நான் சரியாகக் கவனிக்கவில்லை என்றால், அதை நீங்கள் சுட்டிக் காட்டுங்கள். அதற்காக எந்தவிதமான தண்டனையும் அளியுங்கள். ஏற்றுக் கொள்கிறேன்'' என்று உணர்ச்சியுடன் கூறி நிறுத்தினான் ராமு.

ராமுவின் பதிலைக் கேட்டு முதலாளி மிகவும் மகிழ்ந்தார். ராமுவைப் போன்ற ஒரு தோட்டக்காரன் கிடைத்ததே தன் அதிர்ஷ்டம் என்று நினைத்தார். ''ராமு, நீ இதுவரை எத்தனையோ தடவைகள் நூற்றுக்கணக்கான பழங்களைப் பறித்துவந்து என்னிடம் கொடுத்திருக்கிறாய். ஒரு தடவையாவது நான் உன்னிடம் ஒரு பழத்தைக் கூடத் தந்ததில்லை. என் அனுமதி இல்லாமல் நீயும் தின்றதில்லை. உனக்கு எப்படிப் பழங்களின் ருசி தெரியும்? இப்போதுதான் என் தவறை உணர்கிறேன், ராமு, என்னை மன்னித்துவிடு'' என்று கூறி அவன் அருகிலே வந்து அவன் முதுகிலே தட்டிக் கொடுத்தார்.

தெய்வ பக்தி

ஏ.ஆர்.வீரராகவன் (9 ம)



மகேஷும், ரவியும் நண்பர்கள். இருவரும் மதுரை மாநகரில் உள்ள மாசி வீதியில் அருகருகே உள்ள வீடுகளில் வசித்து வந்தனர்.

மகேஷ் தெய்வ பக்தியும், பெரியோர்களிடத்துப் பணிவும் கொண்டவன். படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். சாத்வீக குணம் கொண்டவன்.

ரவியும் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன்தான். ஆனால் கடவுள் பக்தி சிறிதும் இல்லாதவன். முரட்டு சுபாவம் படைத்தவன். கடவுளின் அருள் இல்லாமலேயே, தானே எல்லாவற்றையும் சாதித்துக்கொள்ளலாம் என்ற மனோபாவம் படைத்தவன். இந்த விஷயத்தில் மட்டும் மகேஷுக்கு ரவியைச் சிறிது பிடிக்காது. மற்றபடி இருவரும் மிக்க நட்புடன் பழகிக் கொண்டிருந்தனர்..

ஒருநாள் செவ்வாய்க்கிழமை மாலை வேளையில் ரவியும், மகேஷும் நூல் நிலையத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். வழியில் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில். அக்கோவிலின் அருகில் வந்தவுடன் மகேஷ்,

''ரவி... இன்று செவ்வாய்க்கிழமை... ஆலயத்தினுள் சென்று அம்மனைத் தரிசித்துவிட்டு வரலாமே...'' என்று கேட்டான். அதற்கு ரவி,

''இவ்வாலயத்திற்குள் சென்று இறைவனை வழிபடும் நேரத்தில் எவ்வளவோ படிக்கலாம்... நேரத்தை வீணாகச் செலவிட என்னால் முடியாது. நீ வேண்டுமானால் செல்'' என்று கூறிவிட்டு வீடு நோக்கி நடக்கலானான்.

நண்பன் தன்னுடன் ஆலயத்திற்கு வரவில்லையே என்ற சிறிய வருத்தத்துடன், மகேஷ் ஆலயத்திற்குள் சென்று தரிசனம் செய்யத் தொடங்கினான்.

ரவி தன் வீடு நோக்கி, 'தெய்வ வழிபாடெல்லாம் மூடநம்பிக்கை, அதில்போய் மகேஷ் நேரத்தைக் கண்டபடி செலவிடுகிறானே!' என்ற நினைப்புடன் நடந்து கொண்டிருந்தான். அப்போது ஒரு மாட்டு வண்டி தாறுமாறாகச் சென்று கொண்டிருந்தது. அதனால், குழப்பமடைந்த ஒரு காரோட்டி, சாலையின் ஓரத்தில் காரைத் திருப்ப, அது, ஏதோ நினைவாகச் சென்று கொண்டிருந்த ரவியின் மீது மோதிவிட்டது. மண்டையிலும், காலிலும், நல்ல அடி! ரவி தரையில் மயங்கி விழ, காரின்

சொந்தக்காரர் சற்றும் தாமதிக்காமல் ரவியைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்.


மண்டையிலும், முழங்காலிலும் கட்டுகளுடனும், பல இடங்களில் பிளாஸ்திரியுடன் மருத்துவமனைப் படுக்கையில் இருந்து ரவி கண் விழித்த போது, அவன் கண்களுக்கு முதலில் தெரிந்தவன் கண்ணீருடன் நின்றிருந்த மகேஷ்தான்! மகேஷைப் பார்த்தவுடன் ரவியின் கண்களில் நீர் மல்கியது. சுற்றிலும் டாக்டர், நர்ஸ்கள், ரவியின் பெற்றோர்கள் இருப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் ரவி,


''மகேஷ், என்னை மன்னிச்சுக்கோடா... நீ சொன்ன போது என் அகந்தையால் கோவிலுக்கு வராமல் போனேன்...நேரம்வீணாவதாகநினைத்தேன்... ஆனால், அந்த நேரத்தில், கோவிலில் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்தால், இந்த விபத்திற்கு உள்ளாகியிருக்க மாட்டேன்.,... இப்போதுதான் இறைவழிபாட்டின் பெருமை புரிகிறது... நேரத்தை மிச்சம் பிடிக்க நினைத்து, இப்போது மருத்துவமனையில் நேரத்தை வீணாகப் போக்கிக் கொண்டிருக்கிறேன். இன்றுடன் என் அகந்தை அழிந்தது... இனி நானும் உன் போல் தினமும் ஆலய தரிசனம் செய்வேன்'' என்று கண்ணீர் சொரிந்தான்.

''இறைவனிடத்தில் நம்பிக்கை, பெரியோர்களிடத்தில் பணிவு, நாணயம் போன்றவை இருந்தால் எவ்விதத் தீங்கும் நமக்கு வராது... படிப்பில் மட்டும் வல்லவனாக இருந்தால் போதாது... கடவுள் பக்தியும் அவசியமே'' என்று அறிவுறுத்தினான் மகேஷ்.

சுற்றிலும் உள்ளவர்கள் மனம் நெகிழ்ந்து நின்றனர்.

ஓவியப் பராதளம்




டாடா டீடீ!
தஞ்சை மாலா.
அம்புலுக்குட்டி! ரொம்பவும் நல்லவள் சமர்த்தானவள்! அவள், இரண்டு பூனைக்குட்டிகளை வளர்த்து வந்தாள்!
டாடா என்றும் டீடீ என்றும் செல்லமாக அழைப்பாள்!
தினமும் ரொட்டி, பால் எல்லாம் வைத்து அன்புடன் கவனத்துடன் பேணி வந்தாள்
தோட்டத்திற்குப் போனாலும் கடைக்குப் போனாலும் டாடா, டீடீ இரண்டும் அவளுடன் கூடவே செல்லும்! அத்தனை அன்போடு பழகின!
டாடாவையும் டீடீயையும் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சலாக் கூத்தாடுவாள்
தனக்கென எது கொடுத்தாலும் அவைகளுக்குப் போட்ட பின்தான் தானும் தின்பாள்!
இதெல்லாம் அம்புலுக்குட்டியின் அம்மாவுக்குப் பிடிப்பதே இல்லை! திட்டிக் கூப்பாடு போடுவாள்!


சனியன்களா!
என விரட்டியடிப்பாள்
ஒரு நாள், அம்புலுக்குட்டி தூங்கிக் கொண்டிருந்தாள். கட்டிலுக்கு அடியிலிருந்த பெட்ரூம் விளக்கில் அவளுடைய போர்வை விழ போர்வையில் தீப்பற்றியது!
ஐய்யய்யோ! தீ தீ. குழந்தை!
அம்புலுக்குட்டியின் அம்மா அலறிக்கொண்டு ஓடினாள்! தீ மிக வேகமாய் பரவியது!
டாடாவும் டீடீயும், பாய்ந்து ஓடின! போர்வையை வாயில் கவ்வி கீழே இழுத்துப் போட்டன! கீழே விழுந்த போர்வை கவிழ்ந்தபடி பூனைக்குட்டிகள் மேல் விழ, அதற்குள் அவை சிக்கிக்கொண்டன
அம்மா ஓடி தண்ணீர் கொண்டு வந்து தீயை அணைப்பதற்குள் போர்வை பூராவும் எரிந்து டாடா டீடீ இரண்டும் வெந்து துடித்து இறந்தன!
மியாவ் மியாவ்
டாடாவும் டீடீயும் கடைசியாகக் கொடுத்த குரல்! 'எங்களைப்பற்றி கவலையே இல்லை! அம்புலுக்குட்டியை காப்பாற்றிவிட்டோம்!' என்பதுபோல் எதிரொலித்தது! அம்மாவும் அழுதாள்.
என்ன சொல்லியும் அம்புலுக்குட்டி சமாதானம் அடையவில்லை தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள் நமக்கே அழுகை வரும் போல் இருக்கே! அவள் என்ன செய்வாள்?



அவருக்கு அவருடைய தாய் தந்தையர் என்ன பெயர் வைத்தார்களோ தெரியாது. எல்லாரும் அவரைத் 'திருக்குறிப்புத் தொண்டர்' என்றே அழைத்து வந்தார்கள்.,

அவர் சிறந்த சிவ பக்தர். சிவனடியார்களைக் கண்டால், ஓடோடிச் சென்று அவர்களை வணங்குவார்; அவர்களுடைய குறிப்பை அறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்வதையேபெரும்பாக்கியம்என்றுநினைப்பார். அதனால்தான் அவரை அனைவரும் 'திருக்குறிப்புத் தொண்டர்' என்று அழைத்தார்கள்.

அவர் ஒரு பணக்காரரா? இல்லை, ஏதேனும் பதவி வகிப்பவரா? அதுவும் இல்லை. அவர் ஒரு சாதாரண சலவைத் தொழிலாளி. ஆனாலும், தொண்டு உள்ளம் கொண்டவர்.

அடியார்களின் துணிகளை வெளுத்துக் கொடுப்பதில் அவருக்கு ஒரு தனி இன்பம். துணிகளிலுள்ள அழுக்கை நீக்குவதன் மூலம் தம்முடைய மனத்திலுள்ள அழுக்கும் நீங்கும் என்று மனதார நம்பினார்.

ஒருநாள் ஒரு சிவனடியாரைத்திருக்குறிப்புத் தொண்டர் கண்டார். அவர் உடல் முழுவதும் திருநீறு அணிந்திருந்தார். இடுப்பிலே ஒரு கந்தையை உடுத்தியிருந்தார். அந்தக் கந்தை ஒரே அழுக்காக இருந்தது. துவைத்து எத்தனை நாட்கள் ஆயினவோ?

அந்த அடியாரைக் கண்டதும் திருக்குறிப்புத்தொண்டர்வணங்கிவரவேற்றார். "தங்கள் உடம்பு மிகவும் இளைத்திருக்கிறதே! என்ன காரணமோ? தாங்கள் அணிந்திருக்கும் துணியும் கறுப்பாக இருக்கிறதே. அதை என்னிடம் தந்தால் நன்றாக வெளுத்துத் தருவேன்" என்று பணிவோடு சொன்னார்.

"என் துணி அழுக்காகத்தான் இருக்கிறது. ஆனாலும், குளிரில் உடம்பு நடுங்காமல் இதை அணிந்திருக்கிறேன். இரவிலே இதையே நான் போர்வையாகவும் பயன்படுத்துவேன். இதை உம்மிடம் கொடுத்துவிட்டால், கோவணத்தோடுதான் நான் இருக்க வேண்டும்"

"சூரியன் மறைவதற்குள் வெளுத்து நன்றாக உலர்த்தித் தந்துவிடுவேன். உங்களுக்கு எந்தத் தொல்லையும் ஏற்படாது."

"சரி, சூரியன் மறைவதற்குள் தந்துவிட வேண்டும். இல்லாத போனால், என்னால் இரவிலே குளிரைத் தாங்க

முடியாது. என் உடல் விறைத்துப் போய்விடும். அப்படி ஏதாவது ஆகி விட்டால், அதற்கு நீர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.''


இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது வெயில் காய்ந்து கொண்டிருந்தது. சில நாட்களாகவே மழையும் பெய்யவில்லை. ஆகையால் எப்படியும் மாலைக்குள் துணியை நன்றாக வெளுத்து, உலர்த்தி அவரிடம் கொடுத்து விட முடியும் என்று நம்பினார் திருக்குறிப்புத் தொண்டர்.

சிவனடியார், தம்முடைய கந்தல் துணியைத் திருக்குறிப்புத் தொண்டரிடம் கொடுத்து, ''மாலையில் திரும்பி வருவேன். என் துணி தயாராக இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

திருக்குறிப்புத் தொண்டர் மிகுந்த மகிழ்ச்சியோடு, நீர்த்துறைக்கு அந்தத் துணியுடன் சென்றார். வழக்கமாகத் துவைக்கும் பாறையில் நன்றாகத் துவைத்தார். அழுக்கு நீங்கியது. இதற்குள் பிற்பகல் வந்து விட்டது! அத்துடன் வானம் இருண்டது. கருமேகங்கள் திரண்டு வந்தன.

சிறிது நேரத்தில் மழை சடசட எனப் பெய்ய ஆரம்பித்தது. ''என்ன இது! திடீரென்று மழை வந்து விட்டதே!'' என்று திகைத்தார் திருக்குறிப்புத் தொண்டர். 'இன்னும் சிறிது நேரத்தில் மழை நின்றுவிடும் என்று எண்ணினார். மழை நின்றபாடில்லை. தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. 'இந்த மழையில் எப்படி இந்தத் துணியை உலர்த்துவது? சீக்கிரமாகத் துணியை வெளுத்து, வீட்டுக்கு எடுத்துச் சென்றிருந்தாலும், காற்றிலே உலர வைத்திருக்கலாமே! ஐயோ! சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் போனதே! அந்தச் சிவனடியாருக்கு என்ன பதில் சொல்லுவேன்? எப்படி அவர் முகத்தில் விழிப்பேன்? இதற்கு என்ன வழி? அவர் இங்கு வருவதற்கு முன்பு நான் உயிரை விடுவது ஒன்றுதான் வழி'' என்ற முடிவுடன், துணி துவைக்கும் பாறையின் அருகே சென்றார், தம்முடைய தலையைப் பாறையில் பலமாக மோதினார். ஆனால், அவருக்கு வலிக்கவில்லை. அங்கு ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அந்தப் பாறையிலிருந்து மலர் போன்ற மென்மையான ஒரு கை தோன்றி அவரது தலையைத் தாங்கிக் கொண்டது!

உடனே கருமேகங்கள் கலைந்தன. வானம் வெளுத்தது. தேவர்கள் பூ மழைபொழிந்தனர். சிவபெருமான் உமாதேவியோடு அவருக்குக் காட்சி அளித்து, ''உம்முடைய பக்தியை உலகுக்கு அறிவிக்கவே, நாம் சிவனடியாராக வந்தோம். உம்மைச் சோதனை செய்தோம். சோதனையில் வெற்றி பெற்று விட்டீர். இனி, நீர் நம் உலகில் நிலைத்திருப்பீராக'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.



பூந்தாமரைக் கவியரங்கம்

வருந்துவதேன்!



'ஏழைக் குடிசையில் ஏன்பிறந்த தோமென
எண்ணி வருந்துவதேன்? — சிறு
ஓலைக் குடிசையில் வந்தவர் தான், பல
உலகப் பெருந்தலைவர்!

மேட்டுக் குடியில் பிறந்தத னாலிங்கு
மேன்மை யடைந்தவர் யார்? — பசு
மாட்டுத் தொழுவத்தில் பிறந்த கிறிஸ்துவின்
மாட்சி யைநீ எண்ணிப்பார்!

தேசியப் பூவாய் விளங்கிடுந் தாமரை
சேற்றில் பிறந்ததுதான்! — ஒளி
விசிடும் முத்து விளைந்திடும் சிப்பியும்
நாற்றம் மிகுந்ததுதான்!

குப்பையில் குன்றிமணி கிடந்தாலும்
குறைவாய் நினைப்பதுண்டோ? — உயர்
கோபுர உச்சியில் நின்றாலும் சிறு
குரங்கு உயர்வதுண்டோ?

எந்த இடத்தினில் யார்பிறந் தாலென்ன?
எண்ணமும், சிந்தனையும், — நல்ல
சொந்த மதியும், துணிச்சலு முள்ளவர்,
தோல்வியைக் காண்பதுண்டோ?

நம்பிக்கை யோடு உழைப்பவர்க்கு — எந்த
நாளும் குறைவேயில்லை — அந்தத்
தும்பிக்கை யானும் துணையிருப்பான் உயர்
தொண்டுக்கு அழிவுமில்லை.

— கு.ப. கலாவதி (14,348), நாரைக் கிணறு.

சுத்தமே மருந்து



அப்பாவும், நானும் நேற்றுத்தான்
ஆற்றங் கரைக்குச் சென்றோமே;

இனிப்புப் பண்டம் கேட்டேனே,
"ஈக்கள் மொய்த்த பண்டத்தை

உண்ணுதல் என்றும் கூடாது;
ஊறுகள் பலவும் விளைந்திடுமே"

என்றார் எனது அப்பாவும்
ஏமாற் றத்துடன் நானும்தான்,
'ஐயா' என்று கெஞ்சி னனே

ஒன்றும் பேசா தேகினரே;
ஓடிச் சென்றேன் அவரிடமே!

ஔடதம் என்போம் சுத்தத்தை.
அஃதை உணர்த்தினர் அப்பாவும்.

— கொ. மா. கோ. இளங்கோ (3017)
இராஜபாளையம்.



விளங்கிடும் விஷயங்கள்

வானம் முழுதும் நீலவர்ணம்
பூசிய தாரோ? — அது
மாலை நேர மாகும் போது
மங்கு வ தேனோ?

பஞ்சு மிட்டாய் வான் நிறையப்
போட்டது யாரோ? — அது
பறந்து பறந்து என் மனத்தைக்
கவர்வது ஏனோ?

பாலி லிலே ஊறிப் போன
அப்பம் எடுத்து — அதை
வானத் திலே ஒட்டும் படி
வீசிய தாரோ?

அற்பு தங்கள் இத்தனையும்
படைத்தது யாரோ? — அந்த
ஆண்ட வன்தான்! ஆண்ட வன்தான்!
அறிந்து கொள்வோமே!
— த. அருள்சிவபாலன் (47), செங்கல்
பட்டு.

தென்னை மரம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இருக்கும் தென்னை மரம்ஒன்று
பங்க மின்றி அம்மரத்தைப்
பாது காத்து வளர்க்கின்றோம்.




குளிர்ச்சி மிக்க இளநீரைக்
குடித்தால் தெம்பு பெற்றிடலாம்!
தளர்ச்சி எதுவும் இல்லாமல்
தழைத்து வளரும் மரமிதுவே!

சமைக்கப் பயன்படும் தேங்காயைத்
தந்திடும் சிறிதும் சளைக்காமல்
நமக்கு ஓலைகள், மட்டையெல்லாம்
நாளும் தந்திடும் நல்மரமே.

தங்கமே, இதனைக் காத்திடவே
தக்க வழிகளைக் கடைப்பிடிப்போம்.
எங்கும் தென்னந் தோப்புகளாய்
இருந்திடல் கண்டு மகிழ்ந்திடுவோம்.
— க. ஸ்ரீராம் (8477), நெய்வேலி — 1.

குள்ள பபூன்



குள்ள பபூன் வந்தானும்
குட்டிக் கரணம் போட்டானும்.

பந்தைத் தூக்கி எறிந்தானும்.
பல்வலி என்று அழுதானும்.

மோட்டார் பைக்கை விட்டானும்.
முகத்தில் அடிபட விழுந்தானும்.

யானை எதிரே வந்திடவே
யார் நீ என்று கேட்டானும்.

துதிக்கை யாலே யானையுமே
தூக்கி எறிய விழுந்தானும்.


குதிரை எதிரில் வந்திடவே
குதித்து ஏறப் பார்த்தானும்.

காலும் சுளுக்கிக் கொண்டதுவாம்.
கண்ணில் நீரும் வந்ததுவாம்.

இப்படி அழுதிடும் பபூனையே
எப்படிச் சிரிக்க வைப்பதுவோ?
— ஆர். அமர்நாத் (17178), கல்பாக்கம்.

சித்திரப் புதிர்! 20

ஆழி———



1 இந்த 4 உயிரினங்களில் ஒன்று மட்டும் வித்தியாசமானது. அது என்ன?



2 இவர் என்ன விளையாட்டு விளையாடுகிறார்?

3 இது எந்த நாட்டில் வெளியிடப்பட்ட தபால்தலை?





4 இது எந்தநாட்டு விமானப் போக்குவரத்தின் சின்னம்?




5 இவள் எந்த நாட்டைச் சேர்ந்த பெண்?

விடை: வேறுபக்கம்

லிதுவேனிய நாட்டுக் கதை

பொன் முடியும் பொன் தாரகையும்



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

லிதுவேனிய நாட்டில் ஓர் அரசன் இருந்தான். அவன் சிறந்த அழகும், உயர்ந்த குணமும் உள்ள ஒரு பெண்ணை மணக்கவிரும்பினான். அத்தகைய குணங்கள் அமைந்த ஒரு பெண்ணைக் கண்டான். அவளை மனதார விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டான்.

அரசனுக்கு அம்மா இருந்தாள். அவளை ராஜ மாதா என்று அழைத்தனர். அரசனுக்குக் கல்யாணம் செய்து வைப்பதற்காக அவள் வேறொரு பெண்ணைப் பார்த்திருந்தாள். அந்தப் பெண்ணை மணக்காமல் ஒரு சிறந்த அழகியை மணந்து கொண்டு விட்டான்.


புதிய அரசியை ராஜமாதாவுக்குப் பிடிக்கவில்லை. ராஜமாதா இயல்பாகவே தீயகுணங்கள் படைத்தவள். ஆகவே, அவள் அரசியைக் கண்டு பொறாமைப்பட்டாள்; வெறுத்தாள்; அவளுக்கு எப்படித் தீங்கு இழைக்கலாம் என்று யோசித்தாள்.

ஓர் ஆண்டு கழிந்தது. அரசிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அம்மா ,வைப் போலவே அதுவும் மிகமிக அழகாக இருந்தது. அதனுடைய காதுகளின் பின்னால் மூன்று சிறிய பொன் முடிகள் இருந்தன. யாரும் பார்ப்பதற்கு முன்னால் ராஜ மாதா அந்தக் குழந்தையை எடுத்தாள். தொட்டிலில் இடுவதற்காக அதை அலங்கரிப்பது போல, ஒரு பட்டாடையை எடுத்துக் குழந்தைக்குச் சுற்றினாள். பிறகு, அதை ஒரு மரப்பெட்டிக்குள் வைத்து மூடினாள். இரவோடு இரவாகத் தூக்கிச் சென்று, அருகில் இருந்த ஆற்று வெள்ளத்தில் அதைப் போட்டாள். அந்தப் பெட்டி ஒரு படகைப் போல மிதந்து கொண்டே போயிற்று. ராஜ மாதா கறுப்பு நிறத்தில் ஓர் ஆண் பூனைக் குட்டியை எடுத்து, பட்டாடையால் அலங்கரித்து அதைத் தொட்டிலில் இட்டாள்.

சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசாகப் பிறந்துள்ள குழந்தையைப் பார்ப்பதற்காக மறுநாள் காலையில் அரசனும், சபையோரும் வந்தனர். குழந்தையின் மயிர் அடர்ந்த கறுப்பு முகத்தைக் கண்டதும் அவர்கள்

அதிர்ச்சி அடைந்தனர். தொட்டிலில் ஒரு கறுப்புப் பூனை படுத்திருந்தது. அரசி வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அழுது கொண்டே இருந்தாள். ராஜ மாதாவும் மௌனமாக இருந்தாள். ஆனால், சில நாட்களுக்குப் பிறகு ராஜமாதா, "உன் மனைவி அழகாக இருக்கலாம். ஆனால் அவள் பூனையைப் பெற்றிருக்கிறாள். அவள் ஒரு பிசாசாகத்தான் இருக்க வேண்டும்!" என்று அரசனிடம் சொன்னாள்.

இன்னும் ஓர் ஆண்டு கழிந்தது. அரசி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அம்மாவைப் போலவே குழந்தையும் கண்ணைக் கவரும் வண்ணம் வெகு அழகாக இருந்தது. அதனுடைய காதுகளின் பின்புறம் மூன்று சின்னஞ்சிறிய நட்சத்திரங்கள் இருந்தன. இரக்கமே இல்லாத ராஜ மாதா அந்தக் குழந்தையையும் எடுத்தாள். முன்பு செய்ததைப் போலவே அதை ஒரு பெட்டிக்குள் வைத்து ஆற்றில் போட்டாள். பிறகு ஒரு பெண் பூனைக்குட்டியை எடுத்து, பட்டாடையால் சுற்றி, அதைத் தொட்டிலில் இட்டாள்.



குழந்தையைக் காண அரசன் வந்தான். குழந்தையைக் காணோம். பூனை தான் இருந்தது. மனைவி மீது அவனுக்குக் கோபமாக வந்தது. அவனுடைய மனத்தில் கோபத்தை விட அன்பே மேலோங்கி இருந்ததால், ராஜமாதாவின் பேச்சுக்களை அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை; இளம் அரசி இரவும் பகலும் அழுது கொண்டே இருந்தாள். அரசி பூனைக்குட்டியைப் பெற்ற செய்தி நாடு முழுவதும் பரவியது. அவள் ஒரு பிசாசு என்று மக்கள் நம்பினர்.

அரசனுக்கு ஆண் குழந்தை பிறந்த அதே இரவில் ஒரு செம்படவன் மீன் பிடிப்பதற்காக ஆற்றில் வலையை விரித்திருந்தான். எங்கும் இருட்டு. திடீரென ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. சப்தம் வந்த திசையில் அவன் படகைச் செலுத்தினான். மிதக்கும் பெட்டியைப் பார்த்தான். எடுத்தான். திறந்தான். உள்ளே ஓர் அழகான ஆண் குழந்தையைக் கண்டான்.

அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு அவன் சந்தோஷமாகத் தன் மனைவியிடம் போனான். "நமக்குக் குழந்தைகள் இல்லை. நம் பிரார்த்தனைக்கு இரங்கி, கடவுளே இந்த அழகான பரிசை நமக்கு அனுப்பியிருக்கிறார்!" என்று சொல்லிக் குழந்தையை அவளிடம் கொடுத்தான்.

குழந்தையைச் சுற்றியிருந்த பட்டுப் போர்வையை அவள் அகற்றினாள். உள்ளே விலை உயர்ந்த ஆடைகளும், கொஞ்சம் பொற்காசுகளும் இருந்தன. குழந்தையைக் கனிவோடு நோக்கினாள். அதனுடைய காதுகளின் பின்னால் மூன்று சிறிய பொன்முடிகள்

இருப்பதைக் கண்டாள். ஆகவே, குழந்தைக்குப் பொன்முடி என்று பெயர் இட்டாள்.

மீனவனும், மனைவியும் அந்தக் குழந்தையைத் தங்கள் சொந்த மகனைப் போலவே அன்போடு வளர்த்தனர். அவர்கள் வசதியாக வாழ்ந்ததால், அந்தக் குழந்தையை வளர்ப்பதில் அவர்களுக்கு எந்தவிதக் கஷ்டமும் இருக்கவில்லை. ''இந்தப் பொற்காசுகள் என்றைக்காவது ஒருநாள் அவனுக்குத் தேவைப்படலாம்'' என்று எண்ணி அவர்கள் குழந்தையின் பட்டாடைகளையும், பொற்காசுகளையும் பெட்டியில் கவனமாகச் சேமித்து வைத்தனர்.

ஓர் ஆண்டிற்குப் பிறகு அந்த மீனவன் ஆற்று வெள்ளத்திலிருந்து மீண்டும் ஒரு பெட்டியைக் கண்டெடுத்தான். அதில் ஓர் அழகான பெண் குழந்தை இருந்தது. அதையும் தன் மனைவியிடம் கொடுத்தான். முதல் குழந்தையைப் போலவே, இரண்டாவது குழந்தையும் உயர்ந்தரகப் பட்டாடையால் சுற்றப்பட்டிருந்தது. அதே அளவு பொற்காசுகள் உள்ளே வைக்கப்பட்டிருந்தன. ஆகவே, குழந்தைகள் இருவரும் அண்ணனும், தங்கையுமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நம்பினர். பெண் குழந்தையின் காதுகளில் பின்னால் மூன்று சிறிய நட்சத்திரங்கள் இருந்தன. ஆகவே, அவளைப் பொன் தாரகை என்று அழைத்தனர். சீரும் சிறப்புமாக வளர்த்தனர்.

பொன் முடியும், பொன் தாரகையும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தனர். அவர்களுடைய வீட்டைச் சுற்றி ஒரு பெரிய தோட்டம் இருந்தது. இருவரும் ஒன்றாகவே ஆடிப்பாடி விளையாடினர். ஒருவர் மீது ஒருவர் மிகுந்த பாசம் வைத்திருந்தனர்.

அண்ணனும், தங்கையும் ஒருநாள் மற்ற மீனவச் சிறுவர்களுடன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு சிறுவன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் அனாதைகள்,'' என்று சொல்லி ஏளனமாகப் பேசினான்.,

பொன் முடியும், பொன் தாரகையும் வீட்டிற்கு ஓடினர். ''அப்பா! அம்மா! நாங்கள் உங்களுக்குப் பிறந்த குழந்தைகள் இல்லையாமே? அனாதைகளாமே? ஆற்று வெள்ளத்திலிருந்து அப்பா எங்களை எடுத்து வந்தாராமே? அதெல்லாம் உண்மையா?'' என்று ஆவேசமாகக் கேட்டனர்.

மீனவனும் மனைவியும் குழந்தைகளிடமிருந்து எதையும் மறைக்க விரும்பவில்லை. பாதுகாப்பாக வைத்திருந்த பழைய மரப்பெட்டிகள், பட்டாடைகள், பொற்காசுகள் — ஆகியவற்றைக் கொண்டு வந்து குழந்தைகளுக்குக் காட்டினர். உண்மையைக் கூறினர்.,

பொன் முடியும், பொன் தாரகையும் தங்கள் கதையைக் கவனமாகக் கேட்டனர்.

''அப்பா, அம்மா! இவ்வளவு நாட்களும் நீங்கள் அன்பு காட்டினீர்கள். ஆதரவு கொடுத்தீர்கள். மிக்க நன்றி. ஆனால், இப்போது நாங்கள் உங்களை விட்டுப் பிரியும் வேளை வந்துவிட்டது. வெளி உலகிற்குப் போய் எங்களுடைய உண்மை அப்பா, அம்மாவைத் தேட விரும்புகிறோம். தயவு செய்து அனுமதியுங்கள்!'' என்று கேட்டனர்.

சின்னஞ்சிறிய அண்ணனும், தங்கையும் தங்களுடைய உடைமைகளை மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டனர். வளர்ப்புத் தாய் தந்தையரிடம் விடைபெற்றனர். பரந்த உலகில்



சைக்கிள் கடைக்காரர்: சைக்கிளுக்குக் காற்று எவ்வளவு அடிக்கட்டும்?

காற்றடித்துக் கொள்ள வந்தவன்: டியூப் வெடிப்பதற்குச் சற்று முன்வரை!

சைக்கிள் கடைக்காரர்: ?!?!

— த. அன்புசெழியன்

காலடி எடுத்து வைத்துத் தங்கள் பயணத்தை மேற்கொண்டனர். ஊர் ஊராகச் சென்றனர். உண்மைப் பெற்றோரைப் பற்றி விசாரித்தனர். ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

வழியில் அவர்கள் ஒரு பெரிய நகரத்தை அடைந்தனர். நீண்ட பயணத்தினால் அவர்கள் சோர்ந்து போயிருந்தனர். அந்த நகரம் அவர்களுடைய மனத்திற்குப் பிடித்திருந்தது. அங்கேயே தங்கிவிடத் தீர்மானித்தனர். பொற்காசுகளைக் கொடுத்து ஒரு பழைய வீட்டையும், பூங்காவையும் விலைக்கு வாங்கினர். உழைத்து, உழைத்து அந்த வீட்டையும், பூங்காவையும் அழகுபடுத்தினர். சிறுவனும், சிறுமியும் அமைத்த சிறப்பு மிக்கப் பூங்கா அந்த நகர மக்களைக் கவர்ந்தது. அவர்களுடைய புகழ் பரவியது.

அதே நகரத்தில்தான் அந்தக் குழந்தைகளைப் பெற்ற அரசன், அரசியினுடைய அரண்மனை இருந்தது. பெற்றோர்கள் வாழ்ந்த நகரத்திலேயே குழந்தைகளும் வாழ்ந்தனர். ஆனால், அந்த விஷயம் பெற்றோர்களுக்கோ, குழந்தைகளுக்கோ தெரியவில்லை.

நகரத்திலேயே அழகான பூங்காவை இரு குழந்தைகள் அமைத்துள்ளனர் என்ற செய்தி அரண்மனைக்கும் எட்டியது. அந்தக் குழந்தைகளின் பெயர்களைக் கேட்டதுமே, ராஜமாதாவுக்கு அவர்கள் யார் என்று விளங்கிவிட்டது. எப்படியெனில், ஏற்கெனவே அவள் அவர்களுடைய காதுகளின் பின்புறம் இருந்த பொன் முடிகளையும், பொன் நட்சத்திரங்களையும் பார்த்திருந்தாள்.''

ராஜமாதாவின் கோபமும், பொறாமையும் அவளை விட்டு இன்னும் நீங்கவில்லை. தனக்குப் பிடிக்காத அந்தக் குழந்தைகளை எப்படி ஒழித்துக் கட்டுவது என்று அவள் தீவிரமாக யோசித்தாள். கடைசியில், ஒரு பொல்லாத திட்டம் தீட்டினாள்.

ஓர் ஏழையைப் போல மாறுவேடம் பூண்டு ராஜ மாதா அந்தக் குழந்தைகளின் இல்லத்திற்குப் போனாள். தேனினும் தித்திக்கும் சொற்களால் அவள் குழந்தைகளைப் பாராட்டினாள்.

''என் அன்புக் கண்மணிகளே! ஆண்டவன் உங்களுக்கு அழகை அளித்ததைப் போலவே, அறிவையும் அளித்திருக்கிறான். இந்த இளம் வயதில் எத்தனை சீராக இந்த இல்லத்தை வைத்திருக்கிறீர்கள்? உங்களுடைய அழகான பூங்காவைப் பற்றி மக்கள் பேசாத நாளே இல்லை. நானும் அதைப் பார்க்கலாமா?'' என்று இனிமையாகக் கேட்டாள்.

குழந்தைகள் அவளைப் பூங்காவிற்கு அழைத்துச் சென்றனர். பூங்காவைப் பார்த்துவிட்டு ஒரே அடியாக அவள் அதைப் புகழத் தொடங்கினாள். ''என் செல்வங்களே! இவ்வளவு சிறப்பான பூங்காவை நான் இதுவரை கண்டதே இல்லை. இவ்வளவு பூச்செடிகளையும் உங்கள் பிஞ்சுக் கைகளாலேயா வளர்க்கிறீர்கள்? நம்பவே முடியவில்லை. இந்த மரங்களெல்லாம் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஒவ்வொரு மரத்திலும் ஒரு சிறிய மணி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! காற்றில் அசைந்து அவை கணகணவென்று ஒலிக்கும்



பள்ளியில் படிக்கும் மாணவிகள் வலது செவியினால் கேட்கும் பாடங்களை நன்றாக நினைவில் வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் மாணவர்களோ இடது செவியினால் கேட்கும் பள்ளிப் பாடங்களைப் பசு மரத்தாணி போல் மனத்தில் பதிய வைத்துக் கொள்கிறார்கள். இப்படியொரு கண்டுபிடிப்பை உலக விஞ்ஞானிகள் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு காதில் வாங்கி இன்னொரு காதில் விட்டு விடாமல் இருந்தால் சரி!

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

போது கேட்பதற்கு எவ்வளவு இன்பமாக இருக்கும்...!'' என்று அவள் பேசிக் கொண்டே போனாள்.

''பாட்டி! அத்தகைய மணிகள் எங்கே கிடைக்கும்?'' என்று பொன்முடி கேட்டான்.

''அதோ பாருங்கள்! நகரத்தின் எல்லையில் ஒரு குன்று தெரிகிறது இல்லையா — அதன் உச்சியில் ஒரு பெரிய தோட்டம் இருக்கிறது. அங்கே அழகான மரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மரத்திலும் பளபளவென்று சின்னச் சின்னத் தங்க மணிகள் தொங்குகின்றன. அங்கிருந்து ஒரு மணியைக் கொண்டு வந்து உங்கள் பூங்காவில் ஒரு மரத்தில் கட்டிவிட்டால் போதும். ஒரே ஒரு மணி கொண்டு வந்தால் போதும். அது அதிசய மணி. அன்று இரவே உங்கள் தோட்டத்தின் மற்ற எல்லா மரங்களிலும் அதைப் போலவே ஒரு சின்ன மணி முளைத்துவிடும்! மிகவும் எளிதான வேலை!'' என்று சொல்லிவிட்டு அந்த முதியவள் குழந்தைகளிடமிருந்து விடைபெற்றுச் சென்றாள்.

குன்றின் உச்சியில் இருந்தது, ஒரு மாயத் தோட்டம். குழந்தைகளை அங்கே அனுப்புவது என்பது, அவர்களை எமலோகத்திற்கு அனுப்புவதைப் போலத்தான். ஒரு மணி நேரத்திற்கு மேல் யாராவது அங்கு தங்கினால், உடனே அவர்கள் ஒரு மரமாக மாறி விடுவார்கள். அத்தகையவர்கள் தோட்டத்தை விட்டு மீண்டும் பழைய உருவில் திரும்பி வந்ததாகச் செய்திகள் இல்லை. அந்தத் தோட்டத்தில் அநேக மாயா ஜாலங்களும், மந்திர தந்திரங்களும் பல்வேறு அதிசயங்களும், ஆபத்துக்களும் நிறைந்திருந்தன.

அந்த முதியவள் சென்ற பிறகு பொன்முடியும், பொன்தாரகையும் அடுத்து என்ன செய்வதென்று ஆலோசித்தனர்.

''நான் குன்றுக்குப் போய் ஒரு மணியை எடுத்து வருகிறேன்,'' என்றான் பொன்முடி.

''வேண்டாம், அண்ணா! நம் ஆசைகள் எல்லாம் அளவோடு இருக்க வேண்டும். அதிக ஆசைப்பட்டால், அதிக துன்பங்கள் விளையலாம். நீ அங்கு போவது நல்லதல்ல என்று என் உள்மனம் சொல்லுகிறது. போகாதே!'' என்று தங்கை எச்சரித்தாள். அவளுடைய எச்சரிக்கைகளுக்கும், கெஞ்சல்களுக்கும் பொன்முடி செவி சாய்க்கவில்லை.

''நீ கட்டாயமாக அங்கு போகவிரும்பினால், ஒன்று செய். நீண்ட நேரம் அங்கு தங்காதே. காரியத்தை முடித்துக் கொண்டு விரைவாக வந்து விடு!'' என்றாள் தங்கை.



மறுநாள் அதிகாலை. பொன்முடி குன்றின் மேல் ஏறினான். தோட்டத்திற்குள் நுழைந்தான். கண்ணுக்கெட்டிய வரையில் எண்ணற்ற தாவரங்கள் மண்டிக் கிடந்தன. அருகிலிருந்த மரத்தை நோக்கினான். தாழ்ந்த கிளையில் பொன்மணி தொங்கியது. அடி மேல் அடிவைத்து நெருங்கினான்., சரேலென அதைப் பறித்தான்.

பிறகு அவன் திரும்பிப் பார்க்கவே இல்லை. ஒரு கெட்ட தேவதை துரத்தினால் எப்படி ஓடுவானோ, அதைப் போல அவன் அடிவாரத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடினான்.

வீட்டை அடைந்தான். மணியை ஒரு மரத்தில் கட்டினான். மறுநாள் காலையில் பூங்காவிலிருந்து ஓர் இனிய ஓசை கேட்டது. பொன் முடியும், பொன் தாரகையும் விரைந்து சென்று நோக்கினர். ஒவ்வொரு மரத்திலும் ஒரு தங்க மணி கனத்தது! 'கண கண' வென்ற மெல்லிய நாதம் பூங்கா முழுவதும் பொங்கி வழிந்தது! அண்ணனும் தங்கையும் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தனர்.

சில நாட்கள் கழிந்தன. இன்சொல் மூதாட்டி மீண்டும் வந்தாள். ''என்

இனிய குழந்தைகளே! உங்கள் பூங்காவில்இப்போது பொன்மணிகள்இன்பமாக ஒலிக்கின்றன. அதைப் போலவே, உங்கள் நீரூற்றுக்களில் தங்க மீன்கள் துள்ளித் திரிய வேண்டாமா? அப்போதுதானே உங்கள் பூங்கா உயர்ந்ததாக இருக்கும்?'' என்று பேசினாள்.

''தங்க மீன்கள் எங்கே கிடைக்கும்?'' பொன்முடி கேட்டான்.

''அந்தக் குன்றின் மேல் ஒரு குளம் இருக்கிறது. அங்கு போ, தெரியும்,'' என்றாள்.

மறுநாள் விடியற்காலை. தங்கமீன்களைத் தேடி அவன் குன்றின் மேல் ஏறினான். குளத்தைக் கண்டான். ஒரு மீனைப் பிடித்துக் கொண்டு வீடு நோக்கி விரைந்தான். நீரூற்றில் அதை விட்டான்.

அடுத்தநாள் ஒரே ஆச்சரியம்! அந்த ஒன்று பல மடங்காகி இருந்தது. நீரூற்று முழுவதும் தங்க மீன்கள் காட்சி அளித்தன. அவை சந்தோஷமாகத் துள்ளித் திரிந்து கொண்டிருந்தன.

மூதாட்டிக்குச் செய்தி கிடைத்தது. மாயத்தோட்டத்திலிருந்து அந்தச் சிறுவன் எப்படித் தப்பித்து வந்தான் என்று அவள் ஆச்சரியப்பட்டாள். அவனை எப்படியாவது ஒரு துன்பத்தில் சிக்க வைப்பதற்காக அவள் இன்னொரு சூழ்ச்சி செய்தாள்.

மூன்றாவது முறையாக மூதாட்டி அவர்களுடைய பூங்காவிற்கு வந்தாள். பூங்காவை வானளாவப் புகழ்ந்தாள். "உங்கள் தோட்டம் கண்ணையும் கருத்தையும்கவருகிறது. ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தாலும்... உண்மை பேசும் ஞானக்கிளி ஒன்று உண்டு. அது இங்கு இல்லாதது ஒரு பெரிய குறையாகத் தெரிகிறதே,'' என்றாள்.

''பாட்டி, பாட்டி, அந்த ஞானக்கிளி எங்கேஇருக்கிறது?'' பொன்முடி ஆவலோடு கேட்டான்.

''குழந்தாய், அந்தக் குன்றின் மேல்தான் கிளியும் இருக்கிறது. அந்தத் தோட்டத்தைக் கடந்தால் ஒரு பெரிய மாளிகை இருக்கும். உள்ளே நுழைந்து, மாளிகையின் கடைசி அறைக்குப் போ. அங்கு ஒரு பளிங்கு மேடை மீது ஞானக்கிளி உட்கார்ந்திருப்பதை நீ பார்க்கலாம்,'' என்று சொல்லிவிட்டு மூதாட்டி போனாள்.

''இத்துடன் இந்தச் சிறுவன் ஒழிந்தான். இனிமேல் உயிரோடு திரும்ப மாட்டான்,'' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டே அவள் தன் வழியே போனாள்.

''எனக்கு உண்மை பேசும் அந்தக் கிளி வேண்டும். என் உயிரைப் பணயம் வைத்தாவது அதைக் கொண்டு வருவேன்,'' என்று பொன்முடி உறுதியோடு சொன்னான்.


பொன்தாரகை அவனைத் தடுத்தாள். கிளி வேண்டாம் என்று பல வழிகளிலும் அவள் சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை. அதிகாலையில் எழுந்ததும், பொன் தாரகை மறுபடியும் தன் அண்ணனிடம் மன்றாடினாள்.

''போகாதே அண்ணா! ஏதோ இனம் தெரியாத ஒரு பயம் என்னைப் பிடித்திருக்கிறது. இரவெல்லாம் உன்னைப் பற்றிப் பயங்கரக் கனவுகள் கண்டேன். நீ போக வேண்டாம். போனால் திரும்பி வரமாட்டாய்; இறந்து விடுவாய் என்று தோன்றுகிறது,'' என்று சொன்னாள்.

தங்கையின் பேச்சுக்கள் பயனளிக்கவில்லை. பொன்முடி குன்றின் மேல் ஏறினான். உச்சியை அடைந்தான். முன்பு இரு முறை போனதைப் போல் இந்த முறை அவன் அவசரப் படவே இல்லை. தோட்டத்திலிருந்த

கடிகார விளம்பரங்களில் மணி 10.10 காட்டுவது போன்று அமைந்திருப்பதைப் பார்க்கலாம். இந்த 10.10 க்கு என்ன விசேஷம் தெரியுமா? ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட நேரத்தை உலக மக்களுக்கு நினைவுபடுத்தக் கடிகாரம் தயாரிப்பவர்கள் 10.10 ஐக் காட்டி லிங்கனை நன்றியோடு நினைவூட்டி வருகிறார்கள்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.





மரங்களையும், பூச்செடிகளையும் நின்று, நிதானமாக ரசித்துக் கொண்டே நடந்தான். தோட்டத்தின் முடிவில் மாளிகை இருந்தது. உள்ளே போனான். முதல் அறை வெள்ளி அறை. சுத்தமான வெள்ளியால் அது கட்டப்பட்டிருந்தது. வெள்ளை வெளேரென்று அது கண்ணைப் பறித்தது. இரண்டாம் அறை தங்கத்தால் செய்யப் பட்டிருந்தது. அந்த அறையும் அதிலிருந்த கலைப்பொருள்களும் மஞ்சள் நிறமாக மின்னின. மூன்றாம் அறை நவரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஒளி வீசியது. நான்காம் அறையில் விலை மதிப்பற்ற ஆபரணங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் குவிந்து கிடந்தன. அவற்றை எல்லாம் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே அவன் மெதுவாக முன்னேறினான்.

பொன்முடி மாளிகையின் கடைசி அறையை அடைந்தான். மூதாட்டி சொன்னது போலவே ஒரு பளிங்கு மேடையின் மேல் உண்மை பேசும் ஞானக்கிளி ஒய்யாரமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அதைப் பற்றுவதற்காக ஆர்வத்தோடு அவன் கையை நீட்டினான்.

அதற்குள் நேரம் முடிந்துவிட்டது! மாளிகையின் மாயா சக்திகள் ஆட்சி புரியத் தொடங்கி விட்டன! பொன்முடியின் உருவம் குறைந்து கொண்டே போயிற்று! கடைசியில் ஒரு சின்னப் பளிங்குச் சிலையாக மாறி 'டங்' என்ற சப்தத்தோடு அவன் கீழே விழுந்தான்!

பகலும், இரவும் பொன்தாரகை தன் அண்ணனுக்காகக் காத்திருந்தாள். அவன் வரவே இல்லை. அவனுக்கு என்ன ஆயிற்றோ என்று அவள் பயந்தாள். கவலை அவள் மனத்தை அரித்தது. கண்ணீர் ஆறாகப் பெருகி அவளுடைய கன்னங்களில் வழிந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவள் குன்றின் மேல் ஏறினாள்.

தோட்டத்திற்குப் போகும் வழியில் தேவதையின் ஆலயம் ஒன்று இருந்தது. தன் அண்ணனைக் காப்பாற்றும்படியும், அவனைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய சக்தியைத் தனக்கு அளிக்கும்படியும் அவள் தேவதையிடம் மனம் உருகி வேண்டினாள்.

அப்போது ஓர் அசரீரி ஒலித்தது. அவளுக்கு மிகவும் பயன்படக் கூடிய சில அறிவுரைகளைக் கூறியது. அவள் கவனமாகக் கேட்டாள்.

பொன்தாரகை உறுதியான உள்ளத்தோடு தோட்டத்திற்குள் நுழைந்தாள். அங்கிருந்த அதிசயங்கள் எதையுமே அவள் நோக்கவில்லை. வில்லிலிருந்து விடுபட்ட அம்பைப் போல அவள் மாளிகையை நோக்கி விரைந்தாள்.

காற்றைப் போல் வேகமாக மாளிகையின் உள்ளே புகுந்தாள். அங்கிருந்த பொருள்கள் எதையுமே அவள் லட்சியம் செய்யவில்லை. அறைகளைக் கடந்து, தொடர்ந்து ஓடினாள். கடைசி அறையை அடைந்தாள். தரையில் சிதறிக் கிடந்த சின்னச் சின்னப் பளிங்குச் சிலைகளை எல்லாம் சேகரித்து அவள் தன் ஆடையில் முடிந்து கொண்டாள். உண்மை பேசும் கிளியையும் பற்றிக் கொண்டாள். பிறகு அங்கு நிற்கவே இல்லை. தன் வீட்டை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தாள்.

பொன்தாரகை மாயத் தோட்டத்தின் எல்லையைத் தாண்டியதுமே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அவள் சேகரித்த பளிங்குச் சிலைகள் மூட்டையிலிருந்து பொலபொலவென்று கீழே விழுந்தன. ஒவ்வொரு சிலையும் ஒரு குழந்



தையாக மாறியது. அவர்கள் தங்கள் பழைய உருவை அடைந்தனர். உண்மை பேசும் கிளியைத் தேடிச் சென்று பளிங்குச் சிலைகளாக மாற்றப்பட்ட குழந்தைகளே அவர்கள். பொன்தாரகையின் வீரச் செயலால் அவர்கள் மீண்டும் மனித உருவை அடைந்தனர்.

அந்தக் குழந்தைகளின் கூட்டத்தில் பொன் தாரகை தன் அன்பு அண்ணனைத் தேடினாள். ஓடிச் சென்று அவனுடைய கையை அன்போடு பற்றினாள். அண்ணனும், தங்கையும் தங்கள் இல்லத்திற்கு விரைந்தனர். உண்மை பேசும் கிளியை ஒரு கூட்டில் அடைத்தனர்.

அவர்கள் இருவரையும் தொடர்ந்து மற்ற குழந்தைகள் நகரத்திற்கு ஓடிவந்தனர். அந்த அதிசயத்தைக் காண நகர மக்கள் எல்லோரும் திரண்டனர். காணாமல் போய், மீண்டும் கிடைத்த அந்தக் குழந்தைகளை அவர்கள் சந்தோஷமாக வரவேற்றனர். அதை ஓர் அதிசயமாகக் கருதினார்களே தவிர ஒருவருக்காவது உண்மை விளங்கவில்லை!

தங்கமணி, தங்க மீன், உண்மை பேசும் கிளி ஆகியவை நிறைந்த அந்த அழகிய பூங்காவைப் பற்றியே மக்கள் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தனர். செய்தி அரசனுடைய காதுகளுக்கும் எட்டியது.

அந்த அதிசயத்தை நேரில் பார்ப்பதற்காக அரசனும் அரசியும் ஒரு நாள் அந்தப் பூங்காவிற்கு வந்தனர். பொன்முடியும், பொன்தாரகையும் அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றனர். காற்றில் அசைந்து அசைந்து, கணகணவென்று ஒலித்த தங்க மணிகளையும், நெஞ்சை அள்ளும் நீரூற்று மீன்களையும் கண்டு அரசனும், அரசியும் களித்தனர். ஞானக்கிளி இருந்த கூட்டை அடைந்தனர்.


"அந்தக் கிளிக்குத் தெரியாத விஷயம் உலகில் எதுவுமே இல்லை. எந்தக் கேள்வி கேட்டாலும், அது உண்மையான விடையைக் கொடுக்கிறது!" என்று ஓர் அதிகாரி அரசனிடம் சொன்னார். அதைக் கேட்டதும் அரசன், அரசியினுடைய ஆச்சரியம் பன்மடங்கு பெருகியது.

பல நாட்களாகத் தங்கள் மனத்தில் இருந்த சந்தேகத்தை அவர்கள் அந்தக் கிளியிடம் கேட்டனர்.

"எங்கள் இரண்டு குழந்தைகளும் என்ன ஆயினர்? உயிரோடு இருக்கிறார்களா?" என்று கேட்டனர்.


பொன்முடியும், பொன்தாரகையும் சின்னஞ்சிறு குழந்தைகளாக ஆற்றில் மிதந்து சென்றது முதல் அன்றைய தினம் வரையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் கிளி வரிசையாக எடுத்துச் சொல்லியது.

குழந்தைகளுக்குப் பெற்றோர் கிடைத்தனர். பெற்றோருக்குக் குழந்தைகள் கிடைத்தனர். ராஜமாதாவுக்குத் தண்டனை கிடைத்தது. எங்கும் இன்பம் நிலவியது.



நாட்டுக்கரசனை வென்ற நாவுக்கரசர்


மலையைப் பெயர்க்க ராவணன் முற்பட, விலங்குகளும் பறவைகளும் நடுங்கின.... அருவிகள் இடம் மாறின... பனிக் கட்டிகள் சரிந்தன...
பார்வதி தேவி அதிர்ச்சியடைந்து சிவ பெருமானைப் பிடித்துக் கொண்டாள்...
பயப்படாதே பார்வதி! ராவணனுக்குப் பாடம் புகட்டுவோம்.
சிவபெருமான் தமது கால் கட்டைவிரலால் கயிலாய மலையில் ஓர் அழுத்தம் கொடுக்க, தோள் கொடுத்து மலையைத் தூக்கிக் கொண்டிருந்த ராவணன் சிக்கினான்...
ஹா! ஹா!
எத்தனை முயற்சி செய்தும் விடுபட முடியாமல் ராவணன் கதறி அழ, அருகே வாகீச முனிவரின் தவம் கலைந்தது...
ஏனப்பா இப்படி அழுகிறாய்? அலறுவதற்குப் பதில் பாடு! ஈசன் இரங்குவார். அவர் இசைப்பிரியர்.



ராவணன் தன் உடல் நரம்புகளையே தந்தியாக்கி யாழ் வாசித்துப் பாடினான்...
சிவபெருமான் மனம் குளிர்ந்து ராவணனை விடுவித்தார்.
மலையடியில் சிக்கிய நிலையிலும் விதிமுறை தவறாது பாடினாய்! இந்த சந்திரஹாசம் வாளைப் பரிசளிக்கிறேன்! நீண்ட ஆயுளுடன் வாழ்வாய்!
வாளும் ஆயுளும் பெற்ற ராவணனின் கர்வம் தலைக்கேறியது...
அழகிய பெண்களைத் துன்புறுத்துங்கள்! முனிவர்களின் தவங்களைக் கலையுங்கள்! ஹ ஹ ஹா!
வாகீச முனிவர் வருந்தினார்...
இறைவன் மனம் குளிரப் பாடுமாறு ராவணனுக்கு யோசனை சொன்னேன். துஷ்டனுக்கு உதவினேன்... இந்தத் தவறுக்கு என்ன பிராயச்சித்தம்?...
அசரீரி ஒலித்தது...
பூவுலகில் பிறந்து, ஈசன் புகழ் பாடி, தலயாத்திரை செய்யுங்கள். திருக்கைலாய தரிசனம் பெற்று அமைதி அடைவீர்கள்!



திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில் புகழனார் – மாதினியார் தம்பதிக்குப் பிள்ளையாகப் பிறந்தார் வாகீசர்...
திலகவதி! உனக்குத் தம்பி பிறந்திருக்கிறான், பார்!
தம்பி மருள் நீக்கியிடம் திலகவதி பேரன்பு கொண்டிருந்தாள்...
சின்னக் காலும் குட்டிக் கையுமாக எத்தனை அழகாயிருக்கான்!
மருள் நீக்கி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான்.
திலகவதி, பெற்றோரைப் போலவே சிவபக்தையாகத் திகழ்ந்தாள். சிவனடியார்களை உபசரித்தாள்...
ஆண்டுகள் சென்றன. ஒரு நாள்...
புகழனாரே! உங்கள் புதல்வி திலகவதியை சேனைபதி கலிப்பகையாருக்கு மணம் பேசும்படி என்னை அனுப்பியிருக்கிறார்கள்!
அப்படியா! கலிப்பகையாரை மாப்பிள்ளையாகப் பெறுவது என் பாக்கியம்! திலகவதி! நீ கொடுத்து வைத்தவள்!
என் அக்காவை அடைவதென்பது சேனைபதிக்கும் பெருமைதான்!




திலகவதிக்கும் கலிப்பகை யாருக்கும் திருமணம் நிச்சய மான அதே சமயம், பல்லவ மன்னன்...
கலிப்பகையாரே! வடதிசை படை யெடுப்புக்கு உடனே ஆயத்தம் செய்யுங்கள்!
சித்தம் பிரபோ!
படை கிளம்புமுன் கலிப்பகை...
தூதனே! புகழனாரிடம் போய், நான் வெற்றி வாகை சூடியதும் மணமாலை சூட வருவேன் என்று கூறு!
படைகளுக்குத் தலைமை தாங்கி, கலிப்பகையார் சென்றார்...
நாட்கள் செல்லச் செல்ல, கவலையில் புகழனாரின் ஆரோக்கியம் குன்றியது....
ஈசன் இணையடியில் சேரும் காலம் வந்துவிட்டது! ஆனால் திலகவதியின் திருமணம் முடிக்கும் காலம் வரவில்லையே!
சில தினங்களில் மாதினியாரும் கணவரைத் தொடர்ந்து சிவபதம் அடைய...
அம்மா! அம்மா!
கண்ணே! கலங்காதே நான் இருக்கிறேன்!



மேலும் சில நாட்கள் சென்று...
போர்க்களத்திலிருந்து வருகிறோம். புகழனார் வீடு இது தானே?
ஆமாம், செய்தி என்ன?
துயரமான செய்தி தான். சேனாபதி கலிப்பகையார் வீரமரணம் அடைந்தார்!
ஐயோ!
தூதர்கள் சென்றதும்...
தாய் தந்தையரை இழந்தேன். வாழ்வையும் இழந்தேனே? இனி எதற்கு உயிர் வாழ்வது?
அக்கா! என்னை அனாதை யாக்கி விடாதே!
தம்பிக்காக உயிர் வாழ்ந்தாள் திலகவதி. இருவரும் திருவதிகை என்ற ஊரில் குடியேறினர்.
வீரட்டானேசுவரர் கோயிலில் சிவ கைங்கர்யம் செய்து வந்தாள் திலகவதி.


மருள் நீக்கி வாலிபப் பருவம் அடைந்தான்...
குலவிளக்கே! அறிவில் சிறந்த நீ, இன்னும் நன்கு படித்துப் பெரும் புகழ் பெறவேண்டும்!
திருவதிகையில் சமணர் பலர் வாழ்ந்தனர். பல்லவ மன்னன் மகேந்திரன் சமணனானதால் செல்வாக்குடன் திகழ்ந்தார்கள்.
வா தம்பி! உன் பெயர்?
மருள் நீக்கி.
மருள் நீக்கிக்கு வாழ்க்கையின் நிலையாமை குறித்து ஐயங்கள் இருந்தன...
இங்கு தமிழில் நீதி நூல்களும் இலக்கண நூல்களும் நிறைய இருக்கின்றன. படித்துப் பார்!
கூர்மதி படைத்த மருள் நீக்கிக்குச் சமண சமயத்தில் பற்றுதல் ஏற்பட்டது.
சமணத் துறவிகள் அறிவாளிகளாக விளங்குகிறார்கள். இவர்களின் கொள்கைகள் என் உள்ளத்து மருள் நீக்குகின்றன...
அக்கா! என் மனம் துறவையே நாடுகிறது. உனக்குத் தெரியாமல் போகிறேன். மன்னித்து விடு!


திருப்பாதிரிப்புலியூர் சமணர்களின் அரணாக விளங்கியது...
பாடலிபுத்திரம் என்றும் இதற்கு ஒரு பெயராம்!
சமண மடத்தை அடைந்தார் மருள் நீக்கி.
ஆருகத சித்தாந்தத்தைப் புரிந்து கொண்ட நீ, எங்களிடம் வருவாய் என்று அருகர் சொன்னார்!
நாட்கள் செல்ல, மருள் நீக்கி சமண சித்தாந்தங்களில் தம் நிகரற்று விளங்கினார்.
இன்று முதல் உமக்குத் தருமசேனர் என்று பெயர். சமண சமயத்தின் குருவாக விளங்கி வழிகாட்டுவாய்!
தருமசேனரின் புகழ் பரவிய போதிலும் திலகவதி துயரத்தில் ஆழ்ந்தாள்...
ஈசனே! தம்பி பரசமயத்தில் சேர்ந்து விட்டானே! இந்தத் துயரை எவ்வாறு தாங்குவேன்?
சில ஆண்டுகள் சென்று தருமசேனருக்குத் தீராத வயிற்று வலி உண்டாக....
பொறுக்க முடியவில்லையே!
இந்தக் குண்டிகை நீரைப் பருகுங்கள். சூலைநோய் தீரும்!



சமணத் துறவிகளின் வைத்தியம் பலனளிக்கவில்லை...
தமக்கையார் மனம் நோகச் செய்தேன்; அதனால் தான் இப்படி வயிற்று வலி வந்திருக்கிறது...
திலகவதிக்குச் செய்தி அனுப்பினர் தருமசேனர்...
படுத்த படுக்கையாக இருக்கிறார்; தங்களைப் பார்க்க விரும்புகிறார்...
சிவனைப் பழிக்கும் சமணப் பள்ளிக்கு நான் வரமாட்டேன்.
தருமசேனர், தமக்கையைக் காணத் தள்ளாடி வந்தார்.
அக்கா! எனக்கு மன்னிப்பு உண்டா?
நான் செய்த தவம் வீண் போகவில்லை!
காலில் விழுந்த தம்பியை மன்னித்து, வீரட்டானேசுவரர் கோயிலுக்கு அழைத்துச் சென்றாள் திலகவதி.
திருக்குளத்தில் மூழ்கி விபூதி அணிந்து கொள்.
சந்நிதியில்...
மனமுருகிப் பிரார்த்தித்துக் கொள்.
காத்தருள்வாய்.... ஓம் நமசிவாய!... கூற்றாயினவாறு விலக்ககிலீர்...


பதிகம் பாட, மருள் நீக்கியின் சூலை நோய் மறைந்து போயிற்று...
இதென்ன அற்புதம்! வலி இருந்த இடம் தெரியவில்லையே!
அசரீரி எழுந்தது...
உன்னை "நாவுக்கரசன்" என்று உலகம் போற்றும்!
அன்று முதல் உழவாரப்படை என்ற கருவியால்....
புல் பூண்டுகளைச் செதுக்கி, கோயில் களைச் சுத்தம் செய்வேன்.
தல யாத்திரை செய்தார் நாவுக் கரசர். தேனினும் இனிய தமிழ்ப் பாடல் களை இயற்றி இசை யோடு பாடினார்.
திருநாவுக்கரசரின் புகழ் பரவ, வெகுண்ட சமணர்கள், மன்னனிடம் சென்று...
தருமசேனர் சூலை நோய் என்று பொய் சொல்லி, தமக்கையாரிடம் சென்று சைவராகி விட்டார்!
சமயத் துரோகி! அழைத்து வாருங்கள் அவனை!


மகேந்திர பல்லவனின் தூதர்கள்...
உம்மை உடனே அழைத்து வரச் சொல்லி உத்தரவு!
நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்...
தூதர்கள் திரும்பி வந்து...
'எனக்கு அரசன் சிவபெருமானே' என்று கூறிவிட்டார்... வர மறுத்து விட்டார்!
ஆ! மன்னன் ஆணையை மீறிய அவனைச் சுண்ணாம்புக் காளவாயில் போடுங்கள்!
அவ்வாறே செய்தார்கள். நீண்ட நேரம் சென்று கதவைத் திறக்க...
மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்....
...மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நிழலே!
அற்புதம்! உயிரோடு இருந்து பாடவும் செய்கிறாரே!
சமணர் தூண்டி விட, மன்னன், நாவுக்கரசருக்குப் பல தண்டனைகள் அளித்தான்...
விஷம் இவரை ஒன்றும் செய்யவில்லை... யானையோ இடறாமல் வணங்குகிறது....!



இந்த அதிசயங்கள் மன்னன் செவிக்கு எட்ட...
அவனைப் பெரிய கல் தூணில் கட்டிக் கடலில் எறிந்து விடுங்கள்!
கல் தூண் தெப்பம் போல் மிதந்தது!
கற்றூணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே!
திருப்பாதிரிப்புலியூர் அருகே கரையேறினார் நாவுக்கரசர்...
நாவுக்கரசர் வாழ்க!
வாழ்க! வாழ்க!
விவரமறிந்த மன்னன்...
நான் பெரிய தவறு செய்து விட்டேன்; நாவுக்கரசர் பெரிய மகான் என்பதை உணராமல் போனேன்...
நாவுக்கரசரிடம் தானே நேரில் சென்றான் பல்லவ மன்னன்...
நாவுக்கரசரே! இந்த நாட்டுக்கரசனை மன்னியுங்கள். இன்றுமுதல் நானும் சைவன்!
நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!


யாத்திரை சென்று பல்வேறு தலங்களில் இறைவனைத் தரிசித்த நாவுக்கரசர், நல்லூரில்...
எம்பெருமானே! என் சிரத்தின் மீது திருவடி வைத்து அருள் செய்யத் திருவுள்ளம் கொண்டீரோ! என் பாக்கியமே பாக்கியம்!
பின் திங்களூரை அடைந்தார்....
அட! திரும்பிய பக்கமெல்லாம் தண்ணீர்ப்பந்தல்! இப்படி அறம் செய்பவர் யார்?
அப்பூதி அடிகள்!
இதென்ன! எல்லாம் திருநாவுக்கரசர் மயமாயிருக்கிறதே!
ஆமாம்! அப்பூதி அடிகள் தமது பிள்ளைகளுக்குக் கூட 'மூத்த திருநாவுக்கரசு', 'இளைய திருநாவுக்கரசு' என்று பெயர் சூட்டியிருக்கிறார்... அதோ அவரே வருகிறாரே!
ஊருக்குப் புதியவரை வரவேற்ற அப்பூதி அடிகள்...
சிவனடியாரே! என் மனைக்கு வந்து விருந்துண்டு இளைப்பாறுக.
அது சரி, சிவத்தொண்டு புரியும் நீர், உமது பெயரை வைக்காமல் யார் பெயரையோ சூட்டியிருக்கிறீரே!
யாரோவா? சைவத்தை நிலைநாட்டிய திருநாவுக்கரசரை விடப் பெரிய ஒருவர் இருக்க முடியுமா? ஒன்றும் தெரியாதவராய் இருக்கிறீரே! நீர் யார்?



திருநாவுக்கரசர் தம்மை அறிமுகம் செய்து கொள்ள...
சிவபெருமான் சூலைநோய் தந்து ஆட்கொண்ட சிறியேன் நான்!
திருநாவுக்கரசரை விருந்துண்ணத் தமது இல்லத்துக்கு அழைத்துப் போனார் அப்பூதி அடிகள்....
அடியேனின் அறியாமையை மன்னிக்க வேண்டும்!
கை, கால்களைச் சுத்தம் செய்து கொண்டு மனையில் அமருங்கள்.
வாழை இலை பறித்து வரத் தோட்டத்துக்குச் சென்ற மூத்த திருநாவுக்கரசை நாகம் தீண்டி விட்டது!
ஆ! ஐயோ!
தள்ளாடியபடி வீட்டினுள் நுழைந்த மூத்த திருநாவுக்கரசு ...
அம்மா, இதோ இலைகள்!
இலைகளைத் தந்து விட்டுச் சுருண்டு விழுந்த மகனை, அப்பூதி அடிகளும் மனைவியும் பாயில் சுருட்டி வைத்து விட்டு ...
சுவாமி! உணவு பரிமாறலாமா?



உங்கள் மூத்த மகனையும் அழைத்து என்னுடன் அமரச் செய்யுங்கள். குழந்தை இல்லாமல் உணவருந்தக் கூடாது....
அப்பூதி அடிகளும் அவர் மனைவியும் நிலை குலைந்து போயினர்....
ஐயா! மன்னிக்க வேண்டும்! குழந்தையைப் பாம்பு தீண்டி விட்டது!
அடடா! என்ன காரியம் செய்து விட்டீர்!
கோயிலெதிரே குழந்தையைக் கிடத்து மாறு செய்த திருநாவுக்கரசர், திங்களூர் கைலாச நாதரை வேண்டி, பத்து பாடல்களைப் பாடி முடித்தார்...
சிறுவன் தூக்கத்திலிருந்து கண் விழித்தவன் போல் எழுந்து நின்றான்.
அப்பா! அம்மா!
என் கண்ணே!
இனி போய் உணவருந்தலாம் வாருங்கள்!
திருஞான சம்பந்தரும் அவரால் 'அப்பரே' என்று அழைக்கப் பட்ட திருநாவுக்கரசரும் பல அற்புதங்களை நிகழ்த்தினார்கள்!



பின்னர் திருநாவுக்கரசர் தனியே பிரிந்து சென்றார். காவிரிக்கரையோடு பல தலங்களைத் தரிசித்துச் செல்கையில் ஒரு நாள் அவர் பசியால் வாட, ஒரு வேதியர் தோன்றி....
இந்தாருங்கள், தயிர்சாதம்!
திருநாவுக்கரசர் உண்டு முடித்து நிமிர்ந்தபோது அந்தணர் மறைந்தார்....
ஆகா! ஈசனே எனக்கு உணவளித்து அருள் புரிந்திருக்கிறார்! என்ன கருணை!
திருக்கைலாயம் சென்று ஈசனைத் தரிசனம் செய்யத் துணிந்து, காடு மலைகளைக் கடந்த நாவுக்கரசரை ஒரு முனிவர் தடுத்து...
உம்மால் முடியாது! திரும்பிச் செல்லுங்கள்!
மாட்டேன்!
அப்போது அசரீரி ஒலித்தது..
இங்குள்ள குளத்தில் மூழ்கினால் திருவையாற்றில் எழுந்திருப்பாய்! அங்கே திருக்கைலாய தரிசனம் அளிப்போம்!
திருநாவுக்கரசர் அவ்வாறே செய்து, பிறவிப் பயன் பெற்றுப் பரவசமானார்.....

பழமொழிப் புதிர்





மேலே உள்ள இரண்டு படங்களைப் பார்த்ததும், உங்களுக்கு இரண்டு பழமொழிகள் நினைவுக்கு வரவேண்டுமே! அந்தப் பழமொழிகள் என்ன என்ன?

விடை: 62 ஆம் பக்கத்தில்



செல்லப் பிள்ளை

"என்னங்க... என்னங்க... உங்களைத்தானே... இங்கே வந்து பாருங்க... உங்க அருமைப் பிள்ளை யாண்டான் குமார் செய்திருக்கிற காரியத்தை..."

யூனிஃபார்ம் உடைக்குள் கையையும் காலையும் திணிப்பதற்கு முயன்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ராமராஜன், சாவதானமாக, "என்ன... என்ன அப்படிப் பெரிசா செய்திட்டான்....?" என்று தம் மனைவி மாதுரியிடம் கேட்டுக் கொண்டே வந்தார்.

"நீங்க கொடுக்கிற செல்லத்தினாலே... அவன் செய்கிற குறும்பு எல்லை மீறிப் போச்சு... இதோ... பாருங்க. ஏதோ பேப்பர்லேதான் படம் போட்டுக் கத்துக்கிறேன்னு கிறுக்கிக் கிறுக்கி வைச்சான்னா, இப்ப... நீங்க... மேஜையில் வைத்திருந்த இந்தப் போட்டோவிலே என்ன காரியம் பண்ணியிருக்கானு..."

தம் மனைவி கொடுத்த புகைப்படத்தை வாங்கிப் பார்த்த ராமராஜனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அது, ஒரு வாரமாகத் தாம் தேடிக் கொண்டிருக்கும் கேடி ஒருவனுடைய புகைப்படம். பாங்க் கொள்ளையொன்றில் சம்பந்தப்பட்ட அவனைப் பிடிப்பதில் ராமராஜன் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

கொள்ளையர்களைப் பிடிக்க அரசாங்கம் நியமித்த தனி போலீஸ் படைக்கு ராமராஜன்தான் தலைவர்.

போன வாரம் அந்தக் கைதி ஜெயிலிலிருந்து தப்பி ஓடியவன். அவன் தப்பிய மறுநாளே அந்தப் பாங்க் கொள்ளையும் நடந்திருப்பதால், அவனும் அதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அந்தத் திருடனோடை படத்தை மிகுந்த சிரமத்திற்கு இடையில் ஓர் இடத்திலிருந்து வாங்கி வந்திருந்தார், ராமராஜன்.

அதில்தான் அவர் பையன் குமார் தன் கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறான்.

இன்ஸ்பெக்டர் ராமராஜன் படிக்கும் போது முறைப்படி ஓவியம் கற்றவர். அதைத் தம் மகன் குமாருக்கும் ஓய்வு நேரங்களில் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

குமார் ஓவியம் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தைப் பத்திரிகைகளில் வரும் பெண்களுடைய முகத்தில் தாடி, மீசையைப் போட்டு, அப்பா, அம்மாவிடம் காட்டிச் சிரிக்க வைப்பான். அவர்களும் அவனது கைவண்ணம் கண்டு சிரித்தனர். களித்தனர்.

இப்போது —

அதே வகையில் அந்தத் திருடனுடைய முகத்திலும் தாடி, மீசை போட்டுக் கிறுக்கி இருக்கிறான்.

படத்தைப் பார்த்த மறுவிநாடியே இன்ஸ்பெக்டருக்கு முகமே மாறிவிட்டது. கண்கள் இரத்தச் சிவப்பாகி விட்டது.

"இப்ப அந்தப் பயல் எங்கே?" தன்னையும் மீறி வெறிபிடித்தவர் மாதிரி கத்திவிட்டார் ராமராஜன்.

"ஏன் சொன்னோம்...?' என்று ஆகிவிட்டது அவர் மனைவி மாதுரிக்கு.

"அவ...ன்... அவன்... டியூஷனுக்குப் போயிருக்கான்... என்னங்க... அவன்

சிற்பி சோமு

வந்ததும் லேசுபாசா கண்டிச்சு வைங்க... உங்க வேகத்தையெல்லாம் காட்டிடாமே...'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

''அவனை அப்புறமா வந்து பேசிக் கிறேன்...'' என்ற ராமராஜன் கோபாவேசத்துடனேயே ஸ்டேஷ னுக்குக் கிளம்பினார்.

அப்போது —

டெலிபோன் மணி அடித்தது.

ரிஸீவரை எடுத்துக் கேட்ட அவர் மனைவி, ''என்னங்க... உங்களோட பேசணுமாம், சப்இன்ஸ்பெக்டர்பேச றாரு...'' என்றாள்.

''அப்படியா...?, கொண்டா இப் படி!'' என்றவர், ரிஸீவரை வாங்கிப் பேசினார்.

''என்ன... என்ன... அந்தத் திரு டனைப் பிடிச்சாச்சா? லாக்கப்பில் தள்ளி வைச்சிருக்கீங்களா...? சரி சரி... வாங்க...'' என்றபடி ரிஸீ வரை வைத்த ராமராஜன், ''மாதுரி, அந்தத் திருட்டுப் பயலைப் பிடிச்சுட் டாங்க'' என்றார்.

அப்போது —

ஜீப் ஒன்று வாசலில் வந்து நிற்க, அதிலிருந்து சப் இன்ஸ்பெக்டரும், குமாரும் இறங்கி உள்ளே வந்தனர்.

''ஏண்டா குமார்....நீஎப்படி இவங் களோட?'' என்றார் இன்ஸ்பெக்டர் ராமராஜன்.

''குட்மார்னிங் ஸார்...'' என்று சல்யூட் அடித்த சப் இன்ஸ்பெக்டர்... ''ஸார்... அந்தத் திருடனைப் பிடிக்கத் துப்புக் கொடுத்து உதவியது உங்க பையன் குமார்தான்....'' என்றார்.

''என்ன...?'' என்றார் ராமராஜன்.

''ஆமாம் ஸார்...'' என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

''குமார்... நீ துப்புக் கொடுத் தாயா...? எப்படி...?'' என்று வியப் புடன் கேட்டார் இன்ஸ்பெக்டர் ராம ராஜன்.

''அப்பா, நேத்து நானும் அம்மா வும் கோவிலுக்குப் போய் சாமி கும் பிட்டுவிட்டுக் கோயில் பிராகாரத் தைச் சுற்றி வர்றச்சே அங்கே இருந்த பிச்சைக்காரங்களுக்கு அம்மா காசு



போட்டாங்க. அதிலே ஒருத்தன் 'திரு திரு'வென்று முழிச்சுக்கிட்டுத் தாடி, மீசையோட உட்கார்ந்திருந்தான். பார்க்கவே பயமாயிருந்தது. அம்மாவின் கையை நான் கெட்டியாகப் பிடிச்சுக்கிட்டே வீட்டுக்கு வந்துட்டேன்.

"ராத்திரி பாடம் படிக்கிறச்சே மேஜையில் நீங்க கொண்டு வந்து வைத்த இந்தப் போட்டோ இருந்தது. அதிலே இருந்தவன் அந்தத் தாடிக்காரன் மாதிரியே இருந்தான். அதான் போட்டோவிலே இருந்தவனுக்குத் தாடி, மீசை போட்டுப் பார்த்தேன்... அப்படியே அவனுட்டமே இருந்தது.

"காலையிலே டியூஷனுக்குப் போறச்சே கோவில்லே அவன் இருக்கானுன்னு பார்க்க ஓடினேன். நான் நினைச்சாப்பலே அவன் அங்கேதான் படுத்திருந்தான்.

"உங்ககிட்டே சொல்ல ஓடி வந்தேன். வழியிலே இந்த மாமா வந்தாங்க. ஜீப்பை நிறுத்தி இவங்ககிட்டே சொன்னேன்," என்று மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஒரேயடியாக எல்லாவற்றையும் சொல்லி முடித்தான், குமார்.

"திருட்டுப் பய, ஜீப்பைக் கண்டதும் ஓட்டம் பிடித்தான் ஸார். நல்ல வேளை கோவில்லே சாமி கும்பிட வந்தவங்க உதவியோட அவனை மடக்கி ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிட்டுத்தான் உங்களுக்கு போன் பண்ணினேன்..." என்றார் சப்இன்ஸ்பெக்டர்.

சற்று முன் தம் மகன் குமார் போட்டோவிலே செய்திருந்த குறும்பு கண்டு ஆத்திரப்பட்ட இன்ஸ்பெக்டர், ராமராஜன், விளையாட்டாக ஓவியம் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தில் படங்களுக்குத் தாடி, மீசை போட்டு வந்தது எவ்வளவு பெரிய அளவில் ஒரு மாபெரும் துப்புத் துலங்க உதவியிருக்கிறது என்று எண்ணி வியந்தார். குமாரின் முதுகில் தட்டிக் கொடுத்து, "சபாஷ் குமார்". என்று கூறியவாறு தம் மனைவியைப் பார்த்தார்.,

மாதுரிக்குத் தன் மகனின் பெருமை கேட்டு ஆனந்தம் தாங்கவில்லை. அப்படியே குமாரைத் தூக்கி மாறி மாறி அவன் கன்னத்தில் அன்பைப் பொழிந்தாள்.

தகவல் விசாரணை



ஓர் அஞ்சலகத்தில் பொதுமக்களின் உபயோகத்திற்காக ஒரு பேனா வைக்கப்பட்டிருந்தது. அதை ஒருவர் எடுத்து எழுதினார். அது சரியாக எழுதவில்லை. ஆத்திரங் கொண்ட அவர், "இது என்ன, ஐதர் அலி காலத்துப் பேனாவா?" என்று அஞ்சலக எழுத்தரிடம் கேட்டார்.

"எனக்குத் தெரியாது. அதோ பாருங்கள், 'இங்கு தகவல் கூறப்படும்' என்று இருக்கிறதே, அங்கே போய் விசாரியுங்கள்!" என்றார் அவர்.

உண்மையான காரணம்



மிருகக் காட்சி சாலையில் சிங்கத்தைப் பார்த்த மகள், "அப்பா, சிங்கம் கூண்டை உடைத்துக் கொண்டு, உங்கள் மேல் பாய்ந்து உங்களைத் தின்றுவிட்டால்....?" என்று கூறி அழுதாள்.

"அப்படி நடக்காது. இரும்புக் கம்பி பலமாக இருக்கிறது" என்றார் அப்பா.

"ஒருவேளை சிங்கம் உங்களைத் தின்றுவிட்டால், நான் எந்த பஸ் பிடித்து வீட்டிற்குப் போவது என்பது தெரியவில்லையே" என்று கூறி மேலும் அழுதாள் மகள்.

— மலையமான்



சுமப் சுஞ்சீரி

என்றும் வேலை முடிந்து வீடு திரும்பியதும், எல்லோரிடமும் சிரித்துப் பேசி, கலகலவென்று இருப்பார் அப்பா. ஆனல் இன்று சோர்ந்து போய், சிந்தனையில் மூழ்கி இருப்பதைக் கவனித்தாள் இந்திரா.

இரயில் நிலைய அதிகாரியாக வேலை பார்க்கும் அவருக்குத் தினமும் வந்து சொல்வதற்கு ஏதாவது நிகழ்ச்சிகள் இருக்கும். இன்று அவர் எதுவுமே பேசாமல் கவலை தோய்ந்த முகத்துடன் இருப்பதைப் பார்த்த அவள் காரணம் புரியாமல் திகைத்தாள்.

அப்பாவிடம் சென்று, "ஏம்பா, என்னவோ போலஃ சோர்ந்து போய் இருக்கீங்க?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லம்மா. லேசாத் தலை வலி" என்று அவளைப் பார்த்துப் புன் முறுவல் செய்தார் அப்பா. அதனல் திருப்தியடையாத அவள்,

"இல்லை, நீங்க பொய் சொல் றீங்க. என்னமோ நெனச்சுக் குழம்பற மாதிரி இருக்கு. என்னப்பா நடந்தது?" என்று விடாப்பிடியாகக் கேட்டாள். அதற்குமேலும் அவரால் நடந்ததை மறைக்க இயலவில்லை. "இந்த ஸ்டேஷனுக்கு நான் வந்து அஞ்சு வருஷம் ஆகுதம்மா. இதுவரை என்னைப் பத்தி ஒரு புகார்கூட வந்ததில்லை. ஆனா, இப்ப எம்மேலே முதல் தடவையாகக் குற்றம் சாட்டி மேலிடத்திலே இருந்து கடிதம் வந்திருக்கு" என்ருர்.

"அப்படி என்னப்பா தப்பு செய் தீங்க?" என்று கேட்டாள் இந்திரா.

அப்பாவின் முகம் மேலும் வாடியது. "எனக்குத் தெரிஞ்சு ஒரு தப்பும் செய்யலேம்மா. இந்த ஸ்டேஷன் வழியா சட்டத்துக்கு விரோதமா சில பேரு சந்தன மரங்களைத் திருட்டுத் தனமாக் கடத்தறதா மேலிடத்துக்கு எப்படியோ தகவல் போயிருக்கு. அதை உடனே கண்டுபிடிச்சுத் தடுக் கணும். இல்லேன்னு, அதுக்கு நானும் உடந்தைன்னு சந்தேகப்படற நிலை வரலாம்னு எச்சரித்து, கடிதம் அனுப்பி இருக்காங்க" என்ருர் அவர்.

"உங்களுக்குத் தெரியாமல் அது எப்படிப்பா நடக்கும்?" என்று வியப்புடன் கேட்டாள் அவள்.

"அதுதாம்மா எனக்கும் புரியலே. எனக்குக் கீழே வேலை செய்யறவங்களை எல்லாம் கேட்டாச்சு, அப்படி எதுவும் இல்லைன்னு சொல்ருங்க. நானும் எவ்வளவோ விழிப்பாத்தான் இருக்கேன். இப்படி ஒண்ணும் நடக்கிற மாதிரித் தெரியலை...." என்ற அப்பாவின் முகத்தில் கவலை பெரிதும் தெரிந்தது.

மறுநாள் இந்திராவுக்குப் பள்ளிக்கூடம் விடுமுறை ஆதலால் அப்பாவோடு இரயில் நிலையத்திற்குச் சென்ருள். அடிக்கடி அந்த நிலையத்தைக் கடந்து செல்லும் இரயில்களை வேடிக்கை பார்ப்பதில் அவளுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. அந்தக் குக்கிராமத்தில் பொழுது போவதற்கு வேறு வழியுமில்லை. ஆனல், அன்று அவள் எண்ணமெல்லாம் வேடிக்கை பார்ப்பதில் செல்லாமல் அப்பாவின் மீது ஏற்பட்ட வீண் பழியையே சுற்றி வந்தது.

அப்போது நிலையத்தின் இரும்பு வேலிக்கு அப்பால், மண் சாலையில் ஒரு மாட்டு வண்டி, பெரும் பெரும் சாக்கு மூட்டைகளைச் சுமந்தவாறு வருவதைப் பார்த்தாள் அவள். அதற்குப் பின்னல் இரண்டு பேர் வண்டியின் வேகத்திற்கு ஏற்ப, சைக்கிளில் மெதுவாக வந்தனர்.

[illegible]

மாட்டுவண்டி இரயில் நிலையத்தின் முன்னால் வந்து நின்றது. சைக்கிளில் வந்த இருவரும் வண்டியின் மீது ஏறி மூட்டைகளைக் கீழே இறக்கி, வண்டிக் காரனின் உதவியுடன் அவற்றை இரயில் நிலையத்திற்குள் கொண்டு வந்தனர். பிறகு, அலுவலில் இருந்த இந்திராவின் அப்பாவை அணுகி, வழக்கம் போலப் பருத்தி நூல் மூட்டைகளை வெளியூருக்கு அனுப்பக் கொண்டு வந்திருப்பதாகவும் அவற்றைப் பதிவு செய்யும்படியும் வேண்டிக் கொண்டனர்.

அவர் எழுந்து வெளியே வந்து மூட்டைகளைப் பார்வையிட்டார். மொத்தம் பத்து மூட்டைகள் இருந்தன. ஆங்காங்கே சிறு ஓட்டைகள் வழியாகப் பருத்தி நூல் வெளியே தெரிந்தது. அவர்கள் வழக்கமாகப் பருத்தி நூலை வெளியூருக்கு அனுப்பும் வியாபாரிகள் ஆதலால் அவர் மேற்கொண்டு எதுவும் சிந்திக்காமல் அவற்றை எடையிட்டு வைக்கும்படி தம் உதவியாளரிடம் சொல்லி விட்டு உள்ளே சென்றார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த இந்திராவின் மனத்தில் சட்டென்று ஒரு சந்தேகம் எழுந்தது. அவள் எழுந்து அப்பாவிடம் ஓடினாள்.

அவள் வேகமாக ஓடி வருவதன் காரணம் புரியாமல், திகைத்த அப்பாவிடம், ''இந்த மூட்டைகளுக்குள்ளே இருக்கிறது எல்லாம் பருத்தி நூலா அப்பா?'' என்று படபடப்புடன் கேட்டாள் அவள்.

''ஆமாம்மா. இவங்க பருத்தி நூலை வாங்கி வெளியூருக்கு அனுப்பி வியாபாரம் செய்றவங்க'' என்ற அப்பா, எதற்குக் கேட்கிறாள் என்று யோசித்தவாறு நெற்றியைச் சுருக்கி அவளைப் பார்த்தார்.

''இல்லப்பா... வந்து, பருத்தி கரிசல்மண் பூமியில்தான் பயிராகும்னு படிச்சிருக்கேன்,'' என்றாள் இந்திரா.

''ஓகோ, இருக்கலாம்மா. அதுக்கு இப்ப என்ன?'' என்றார் அப்பா.

''இது சரளை மண் நிலமாச்சே! இங்கே எப்படிப் பருத்தி விளையும்? அதோட பருத்தி நூல் உற்பத்தி இந்தப் பகுதியிலே எங்கேயும் நடைபெறுவதாகத் தெரியலையே, பிறகு எப்படி இவ்வளவு நூலையும் இந்த ஊரில் இருந்து இவங்க வாங்கி இருக்க முடியும்?'' என்று கேட்டாள், அவள்.

அப்போதுதான் அவருக்கு அந்த உண்மை உறைத்தது. தம் மகள் சொல்வது சரிதானே! பருத்தி பயிராகாத பகுதியில் இருந்து அவர்கள் இவ்வளவு பருத்திநூலை வாங்கியிருக்க முடியுமா?

அவர் எழுந்து வெளியே வந்து அந்த மூட்டைகளின் எடைகளை வாங்கிப் பார்த்தார். அவரது சந்தேகம் மேலும் உறுதியாயிற்று. அந்த வியாபாரிகள் இருவரையும் பார்த்து, ''ஏம்பா, இதுக்குள்ளே இருக்கிறதெல்லாம் வெறும் நூல்தானே, எடை ஏன் இவ்வளவு அதிகமாக இருக்கு?'' என்று கேட்டார்.

அதைக் கேட்டதும் இருவரும் திடுக்கிட்டு எழுந்தனர். ''அதுவா ஸார், வர்ற வழியிலே மழையிலே நனைஞ்சதாலே எடை அதிகமாப் போச்சு... அதனாலே பரவாயில்லே. இதை அவசரமா அனுப்பியாகணும்'' என்று சமாளித்தார்கள்.

தம் சந்தேகத்தை வெளிக்காட்டிக் கொள்ளாத இந்திராவின் அப்பா, தம் அறைக்குள் சென்று, சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் பெரிய

பழமொழிப் புதிர் விடை

புதிர் 13:

ஆடு நனைகிறதென்று
ஓநாய் அழுததாம்.

புதிர் 14:

எருதுப் புண் காக்கைக்குத் தெரியுமா?



மூட்டைகளுடன் இருவர் இரயில் நிலையத்தில் இருப்பதாகவும், உடனே வந்து சோதிக்கும்படியும் அந்த ஊரில் உள்ள காவல் நிலையத்திற்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

அடுத்த சில நிமிடங்களில் காவலர் வந்து சேர்ந்தனர். போலீசாரைப் பார்த்ததும் வியாபாரிகள் இருவரும் மெதுவாக நழுவிவிட முனைந்தனர். ஆனால், அதற்குள் அவர்களைப் பிடித்துக் கொண்ட காவலர், அந்த மூட்டைகளைப் பிரித்துச் சோதனையிட்ட போது அதனுள்ளே சந்தன மரங்கள் ஓர் அடி நீளம், அரையடி அகலத்திற்கு அழகாக வெட்டப்பட்டு, கட்டுக்கட்டாக மறைத்து வைக்கப் பட்டிருந்தன.

அந்தச் சிறுசிறு கட்டுகளைச் சுற்றி வைக்கோலாலும், துணியினாலும் பொதிந்து அதன்மேல் பருத்தி நூலைப் பரப்பி, மூட்டைகள் தைக்கப்பட்டிருந்தன.

அவ்விருவரையும்கைவிலங்கிட்டுக் காவலர்கள் அழைத்துச் சென்றனர்.

பல காலமாகச் சந்தன மரங்களைத் திருடிச் சட்டவிரோதமாகக் கடத்திக் கொண்டிருந்த குற்றவாளிகள் இருவரைப் பிடிப்பதற்கு உதவியதற்காக, அன்று காவல்துறையினரின் பாராட்டையும், தம்மேலதிகாரிகளின் பாராட்டையும் ஒருங்கே பெற்றார் இந்திராவின் அப்பா.

தம் மகளின் புத்திக் கூர்மையினாலும் சமயோசிதத்தாலுமே அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடிந்தது என்று எண்ணி அவர் மனம் பூரித்துப் போனார்.

தம் மகளை அழைத்து, ''இந்திரா, பிரச்னைகள் வரும்போது நம்மோட அறிவு, சமய சஞ்சீவி போல் நமக்கு உதவணும்... அறிவை வளர்த்துக்கிற நோக்கமே அதுதான்... நான் சிந்திக்கத் தவறிய இடத்திலே, உன்னுடைய அறிவை நீ பயன்படுத்தியதற்காக நான் ரொம்பப் பெருமைப்படறேன்'' என்றார்.

தன் தகப்பனாருக்குக் கிடைத்த பாராட்டில் தனக்கும் முக்கிய பங்கிருப்பதை நினைத்து அகமகிழ்ந்தாள் இந்திரா.

அப்பாவிச் சுப்பன்





சுப்பன் இருந்தான் அப்பாவி
சுயமாய் எதையும் செய்திடுவான்!
அப்பால் ஒன்றும் புரியாமல்
அவனே மனமும் வருந்திடுவான்!


நீரில் கோலம் போட்டிடுவான்;
நிழலை வெட்டிக் களைத்திடுவான்!
தேரின் கயிற்றைத் தான்மட்டும்
தெருவில் இழுத்தே பார்த்திடுவான்!


கடலில் அலைகள் ஓயுமென்றே
கரையில் நின்றே காத்திருப்பான்!
'இடுக்கண் வருங்கால் நகு' என்றே
இறந்தவர் வீட்டில் பேசிடுவான்.

மொட்டினைப் பிரித்து முகர்ந்தபடி
முற்றிலும் மணமே இல்லையென்பான்!
பட்டினி கிடப்பான் விரதமென்று.
பழையதைப் பார்த்தால் உண்டிடுவான்!

கொட்டி உடைப்பான் முட்டைகளை
கோழிக் குஞ்சைக் காண்பதற்கே.
கட்டிய நாயின் வாலினையே
கையால் நிமிர்த்த முயன்றிடுவான்.

உண்மை பேச வேண்டுமென்று
உள்ளதை யெல்லாம் உளறிடுவான்!
பண்பாய் நடக்க முடிவுசெய்தே
பார்ப்போர் காலில் விழுந்திடுவான்!





–நாகரத்தினம்



தண்டனையும் மன்னிப்பும்

— லென்லி

சேகர் ஆபீஸ் போகும் வழியில் வழக்கம் போல் ஸ்கூலுக்குப் போய்க் கொண்டிருந்த பையன்கள், ஸ்கூட்டரில், 'லிப்ட்' கேட்டுக் கையை உயர்த்தினார்கள். இந்தப் பழக்கத்தைத் தவறாக நினைத்த சேகரும் ஒன்றுமே சொல்லாமல் வண்டியைச் செலுத்திச் சென்றார். பையன்கள் ஏதோ சொல்லிச் சிரித்து நடையைக் கட்டினார்கள்.

தினசரி நடக்கும் இந்தச் சம்பவம் சேகரைப் பெரிதாகப் பாதிக்கவில்லை. அதை அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவும் இல்லை.

ஆனால், மறுநாள் காலை அவர் அந்தத் தெருவில் போகும்போது, அதே பையன்கள் தெரு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தனர்.

சற்றும் எதிர்பார்க்கும்முன், 'டங்' கென்ற ஓசையுடன் ஒரு கல் சேகரின் முதுகைத் தாக்கியது.

வண்டியை நிறுத்திவிட்டு, கடைசியாக ஓடிய ஒரு பையனைப் பிடித்தார் சேகர்.

''சார்! அடிக்காதீங்க! நான் கல் வீசலே சார்....!'' என்று மிரண்டு போனான் அந்தப் பையன்.

சேகர், 'விண் விண்'ணென்று வலித்த, தன் முதுகைத் தொட்டுப் பார்த்தார். கையில் ரத்தம் படிந்தது.

'நல்லவேளை, கல் தலையில் படவில்லை' என்று தேற்றிக் கொண்டபடி அந்தப் பையனையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு அவர்களுடைய பள்ளிக்குச் சென்றார்.

அந்தத் தலைமை ஆசிரியரை சேகர் அறிவார். சேகருடைய கோலத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவர், ''சார்! ஆக்ஸிடெண்ட்டா?'' என்று பதறி ஓடி வந்து தன் மாணவனைத் தடவிப் பார்த்தார்.

''ஆக்ஸிடெண்ட் அவனுக்கில்லை சார்! எனக்குத்தான்'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்து சம்பவங்களை



விவரித்தார் சேகர்.

''நான் ரொம்ப வேதனைப்படறேன் சார்! என் மாணவர்களாலே இப்படி நடந்ததற்கு, நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சேகரின் கைகளைப் பிடித்துக் கொண்டார் தலைமையாசிரியர்.

சேகரின் காயத்திற்கு முதலுதவி செய்யும்போதே, மற்ற பையன்களும் பயந்து கொண்டே பள்ளிக் கூடத்திற்குள் நுழைந்தார்கள். அவர்களை உடனே தன் அறைக்கு வரவழைத்தார் தலைமை ஆசிரியர்.

''நீங்கள் செய்தது நியாயமா? உங்களால் இந்தப்பள்ளிக்கே அவமானம். உங்களை நான் டிஸ்மிஸ் செய்யப் போகிறேன்'' என்று. அவர்களை நோக்கி அதிர்ந்தார்.

இதைக்கண்டு வருத்தப்பட்ட சேகர் தன்னால் அந்த மாணவர்களின் படிப்பு, எதிர்காலம் பாழாகக் கூடாது என்று முடிவு செய்தார்.

அந்த மாணவர்களின் நிலை கண்டு அவருக்குத் துக்கம் ஏற்பட்டது.

''வேண்டாம் சார்! அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று உங்களிடம் நான் வரவில்லை. அதற்கு நானே அவர்களை அடித்திருக்கலாம். மாறாக, அவர்களே தம் தவறை உணர்ந்து கொள்வதுதான் சரியான தண்டனை. நியாயமும்கூட'' என்று வேண்டினார் சேகர்.

''அது சரி! அப்படியானால், நீங்களே அவர்களை அழைத்துச் சொல்லியிருக்கலாமே, ஏன் இங்கு வர வேண்டும்?''

''அந்த இடத்தில் நான் சொல்லும் எந்தப் புத்திமதியும் அவர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படும். இடையில், வழிப்போக்கர்களில் சிலர் இவர்களை அடித்தும் விட்டிருப்பார்கள்.

''இங்கே நான் வந்த காரணம் என்னவென்றால், 'லிப்ட்' கேட்டு, பிறரிடம் சலுகை பெறுவது/எதிர்பார்ப்பது தவறு என்று சொல்லிவிட்டுப் போகத்தான். இவங்க எல்லோரும் என் சகோதரர்கள் மாதிரி! இவங்க எல்லாரும் போற வர்ற வண்டிகளில் கைகாட்டி, 'லிப்ட்' கேட்

கிறார்கள். அதிலே இவர்களுக்கு ஒரு ஆனந்தம். நான் லிப்ட் கொடுக்காததற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம், இந்த மாணவ மணிகள், பள்ளிக்கு வரும்போது, 'லிப்ட்' கொடுத்துப் பழக்கிவிட்டால், பிறகு அவர்களால் அந்தச் சுகத்தை மறக்க முடியாது. தினமும் லிப்ட் கிடைக்குமா பள்ளிக்குப் போவதற்கு என்ற ஆசை துளிர்விடும். ஒருவேளை இவர்களுடைய வீடுகளில் வசதி இருந்தால், 'வாகனங்களில் கொண்டு வந்துவிட்டால்தான் ஸ்கூல் போவேன்' என்று இவர்களும் பிடிவாதம் பிடித்து வாகனங்களில் வரலாம். இது நல்லதல்ல.

''இரண்டாவது காரணம், மூன்று நான்கு பையன்கள் ''லிப்ட்' கேட்கும் போது ஒருவனுக்கு மட்டும் வண்டியில் இடம் கிடைத்தால், மற்றவர்கள் அவன் மேல் பொறாமை கொள்வார்கள். இப்போது என் மேல் கல்லெறிந்தது போல, நாளை அவன் மேல் கல்லெறிவார்கள். இது மனித இயல்பு.


''கடைசியாக, சிறு வயதில் அனுவசியமான ஆசைகளுக்கு இடம் கொடுப்பதால் ஆபத்துக்களும் உண்டு. குழந்தைகளைக் கடத்தும் கும்பல் 'லிப்ட்' கொடுக்கிறேன் என்று ஏமாற்றி, குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போகவும் வாய்ப்பு உண்டு'' என்று கூறிவிட்டு, அந்தப் பையன்களின் முகங்களையே கூர்ந்து பார்த்தார் சேகர்.

அவர்களுடைய மனசில் அவமான உணர்ச்சி தோன்றியது போலும்! ஒருவரும் சேகரைப் பார்க்க முயலவில்லை.

''என் மகனும் பள்ளியில் படிக்கிறான். என் வீட்டில் வண்டியிருந்தாலும் அவன் நடந்துதான் செல்ல வேண்டும் என்று பழக்கியிருக்கிறோம்'' என்று சேகர் சொல்லி முடித்தபோது அந்த மாணவர்கள்,

''எங்களை மன்னிச்சுடுங்க சார்!'' என்று விழுந்து வணங்கி, ஒதுங்கி நின்றனர்.


தலைமை ஆசிரியர் சேகரைப் பார்த்தார். சேகரும் அவரைப் பார்த்து, ''அவர்கள் தவறை உணர்ந்துவிட்டார்கள்'' என்று கூறி ஸ்கூட்டரில் ஏறி அமர்ந்தார்.



இந்த முயல் தன் இரையை எந்தவழியாகப் போனால் அடையலாம்?

பிருந்தாவனம்

ஒற்றை/இரட்டைக் குளம்புள்ளவை



சில விலங்குகளுக்கு இரண்டு குளம்புகள் இருக்கும். சில விலங்குகளுக்கு ஒரே குளம்புதான் இருக்கும். கீழே உள்ள விலங்குகளில் இரட்டைக் குளம்புள்ளவை எவை? ஒற்றைக் குளம்பு உள்ளவை எவை? கண்டு பிடியுங்கள்:

1. குதிரை; 2. ஆடு; 3. மாடு; 4. கழுதை; 5. பன்றி; 6. நீர் யானை; 7. காண்டாமிருகம்; 8. ஒட்டகம்.


விடை: ஒற்றைக் குளம்பு உள்ளவை: 1, 4, 6, 7.

இரட்டைக் குளம்பு உள்ளவை: 2, 3, 5, 8.

— விஜி (397), மதுரை

சைக்கிளில் இருவர்

முன்பெல்லாம் சைக்கிளில் இரண்டு பேர் சென்றால், போலீஸ்காரர் பிடித்துக் கொள்வார். இப்போது, அந்த பயமில்லை. இப்போதுள்ள அரசு, சைக்கிளில் இருவர் போகலாம் என்று அனுமதி கொடுத்திருப்பதால், சிறு கிராமத்திலிருந்து பக்கத்திலுள்ள நகர மருத்துவமனைக்கு நோயாளியை அழைத்துச் செல்லவும், கிராமத்திலிருந்து கணவனும் மனைவியும் நகரத்திற்கு ஒன்றாகச் சென்று வேலை செய்யவும் வசதியாக இருக்கிறது. என் போன்ற மாணவர்களும்



ஒருவர் பின் ஒருவர் ஏறிச் செல்ல வசதியாக இருக்கிறது. அரசாங்கம் செய்துள்ள இந்த நன்மையைச் சிலர் தவறாகப் பயன்படுத்துவது வருந்தத்தக்கது. 3, 4 பேர் ஒரே சைக்கிளில் செல்வது ஆபத்தல்லவா?

— மா.தா. கோவிந்தராஜன் (15042), சென்னை—106.

தெய்வமாதா


1942 ஆகஸ்ட் மாதம். 'வெள்ளையனே வெளியேறு' என்று ஆங்கிலே



யரை நம் நாட்டை விட்டுப் போகச் செய்வதற்காக காந்தித் தாத்தா ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார். உடனே காந்தித் தாத்தாவையும் மற்ற தலைவர்களையும் ஆங்கிலேயர் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதைக் கண்டித்து, பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசப் போவதாக கஸ்தூரிபா அறிவித்தார். உடனே அவரையும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். சிறையில் இருந்த போது, அவரது உடல் நலம் கெட்டது. நோய்வாய்ப்பட்டார். 1944 பிப்ரவரி மாதம் இறந்துவிட்டார். நம் தேச விடுதலைக்காக உயிரைக் கொடுத்த தெய்வ மாதா அவர்!

— ஏ. பிரபு (641), பரோடா.

தீர்ந்து போச்சா?



(சினிமா தியேட்டரில் டிக்கெட் கொடுக்கும் இடத்தில்) "எனக்கு ஒரு டிக்கெட் கொடுங்க."


"டிக்கெட் தீர்ந்து போச்சு."

"டிக்கெட்டை கொஞ்சமா அடிச்சாத் தீர்ந்துதான் போகும். நிறைய அடிக்க வேண்டியதுதானே?"

— ஆர். சுப்புலட்சுமி (16293),

எத்தனை இதழ்கள்?

என் நண்பன் ஒருநாள் என் வீட்டிற்கு வந்தான். வீட்டில் நிறைய 'கோகுலம்' இதழ்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்ததும்,



"அடேயப்பா! எல்லா இதழ்களையும் சேர்த்து வருகிறாயா? மொத்தம் எத்தனை இருக்கும்?" என்று கேட்டான்.

நான் உடனே, "எத்தனையா? மொத்தம் கூட்டினால் வரும் விடை இரண்டு இலக்க எண்ணாக இருக்கும். அந்த எண்ணை அதே எண்ணால் பெருக்கினால் 1369 என்ற தொகை வரும்" என்றேன்.

என் நண்பன் சிறிது நேரம் கழித்துச் சரியான விடையைக் கண்டுபிடித்துவிட்டான். உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

விடை: 37 இதழ்கள்

— ஆர். தமிழ்வாணன் (11929), சென்னை — 4.

பொன்மொழியில் விலங்குகள்

கீழ்க் காணப்படும் ஒவ்வொரு பொன்மொழியிலும் ஓர் உயிரினம் காணப்படுகிறது.

* உங்களைத் தூக்கி எறியும் குதிரையைவிட, 'சுமந்து செல்லும் கழுதை



மேலானது.

— இத்தாலியப் பழமொழி

* நீர் அமைதியாக இருப்பதனால் முதலைகளே இல்லையென்று எண்ணி விடாதீர்கள்.

— பல்கேரியப் பழமொழி

* பூனை போய்விட்டால் எலிகள் கூத்தாடும்.

— பிரஞ்சு பழமொழி

* நாயிடம் கடன்பட்டிருந்தால், அதையும் 'ஐயா' என்றே அழைக்க வேண்டும்.

— ஆப்பிரிக்கப் பழமொழி

* தேளுக்கு மணியம் கொடுத்தால் நாழிக்கு எட்டுத் தரம் கொட்டும்.

— தமிழ்நாட்டுப் பழமொழி

தொகுத்தவர்: பி. கோவிந்தசாமி (5703), டி. புதூர்

விடை என்ன?



1. ஆற்று மணலை அள்ளித் தின்போம் நாங்கள் ஒரு சாதி. வெள்ளைக் கல்லை உடைத்துத் தின்போம் நாங்கள் ஒரு சாதி. ஓணானை உரித்துத் தின்போம், நாங்கள் ஒரு சாதி. — நாங்கள் யார்?

2. வெள்ளைக் கத்திரிக்காய், கள்ளக் கூச்சல் போடுது. அது என்ன?

3. பரட்டைத் தலை மாமியாருக்குப் பவளம் போன்ற மருமகள். அவள் யார்?

4. ஆத்தாள் தெருவிலே, மகள் கொலுவிலே, அவர்கள் யார்?

5. சின்ன மச்சான், குனிய வைச்சான். அவன் யார்?

விடை: 1. சீனி, கற்கண்டு, வாழைப் பழம். 2. சங்கு; 3. அத்திப் பழம்; 4. வைக்கோல் — நெல்; 5. நெறிஞ்சி முள்.

— எஸ். சுப்பிரமணியன் (16755) கொரடாச்சாரி.

சொன்னவர்கள் யார்?



கீழ்க்கண்ட வாசகங்களைக் கூறியவர்கள் யார்?


* 'டில்லி சலோ'
* 'யுரேகா, யுரேகா'
* 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்'
* 'சுதந்திரம் எங்களது பிறப்புரிமை
* 'ஜெய் ஜவான், ஜெய் கிசான்'
* 'நமக்குத் தொழில் கவிதை'

விடை: 1. சுபாஷ் சந்திரபோஸ். 2. ஆர்க்கமெடிஸ். 3. மா—சே—துங். 4. திலகர். 5. லால் பகதூர் சாஸ்திரி. 6. பாரதியார்.

— நா. சுஜாதா (10114), குரும்பப்பட்டிக் கிராமம்.

மூன்று எழுத்து

ராஜாஜி அவர்களைப் பற்றி இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் சொன்னார்: "ராஜாஜியை முக்கனியில் முதல் கனியாகவும், ஆங்கில மாதத்தில் ஐந்தாவது மாதமாகவும், தமிழ் மாதத்தில் பத்தாவது மாதமாகவும் நான் கருதுகிறேன்" மற்றவருக்கு அவர் என்ன சொல்கிறார்




என்று உடனே புரியவில்லை. யோசித்துப் பார்த்தார்.

முதல் கனி — மா
ஆங்கில மாதத்தில் ஐந்தாவது
மாதம் — மே
தமிழ் மாதத்தில் பத்தாவது
மாதம் — தை

'மாமேதை' என்பது புரிந்தது.

— எஸ். சபரி (14171),
விருத்தாசலம்

ஐந்தின் சிறப்பு



ஐம்பெருங் காப்பியங்கள்: சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

ஐம்பெரும் பூதங்கள்: நிலம், நீர், தீ, காற்று, வானம்.

பஞ்சபாண்டவர்கள்: தருமர், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன்.

— எஸ். சீனிவாசசேகர் (8291),
மண்ணச்சநல்லூர்

என்ன தப்பு?



சர்க்கஸ் அதிபர்: அந்த வழுக்கைத் தலையனைச் சேர்த்தது தப்பாப் போச்சு.

நண்பர்: ஏன்? என்ன நடந்தது?

சர்க்கஸ் அதிபர்: அவர் தலைமேல் ஏறி சர்க்கஸ் செய்தவங்களெல்லாம் வழுக்கி வழுக்கி விழுகிறாங்க.

— டி.சி. சீனிவாசன் (6459),
சென்னை — 18.

ஒரே காலண்டர்




28 ஆண்டுகளுக்கு முந்திய காலண்டர் உங்களிடம் உள்ளதா? இருந்தால், நீங்கள் காலண்டர் வாங்கத் தேவையில்லை. ஆம், 28 ஆண்டுகளுக்கு ஒரு முறை காலண்டர் ஒரே மாதிரி இருக்கும்.


— எஸ். லதா (392),
நாட்டரசன்கோட்டை.

(வி) சித்திரச் செய்திகள்

கழுதைக்கு நினைவுச் சின்னம்



இத்தாலி நாட்டில் சிசிலித் தீவில், அன்டில்லோ என்னும் கிராமத்தில் ஒரு கழுதைக்கு நினைவுச் சின்னம் அமைத்திருக்கிறார்கள். காரணம் என்ன தெரியுமா? அந்தக் கழுதை நீண்ட நாட்களாகச் சுமைகளைச் சுமந்து, நிறையச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டுப் பல கஷ்டங்களை அனுபவித்து இறந்ததாம். அதற்காக அந்தக் கிராமத்து மக்களின் நினைவில் என்றும் நிலைத்து நிற்க அந்த நினைவுச் சின்னம்!



கள்ளி மன்னர்!


ரொமேனியாவில் பீட்டர் டோப்ரோட் என்னும் ஆசிரியர், தன் தோட்டத்தில் 14,000 வகையான கள்ளிச் செடிகளைச் சேகரித்து வைத்திருக்கிறார். ஒரு விரல் நக அளவு முதல் பல மீட்டர்கள் உயரம் வரை உள்ள கள்ளிச் செடிகள் அவை. தனிப்பட்ட முறையில் எந்த மனிதரும் இதுமாதிரிச் சேமித்தது கிடையாது!

தூக்கி எறி காமிராவை!



ஒரு தடவை பயன்படுத்தியதும் தூக்கி எறிந்து விடக்கூடிய புதுமையான சிறு காமிரா ஒன்றை 'ஈஸ்ட்மென்—கொடாக்' நிறுவனம் தயாரித்து உள்ளது. அதன் விலை சுமார் 90 ரூபாய்தான். காமிரா, லென்ஸ் எல்லாம் பிளாஸ்டிக். 24 படங்கள் எடுக்கலாம். படங்கள் எடுத்து முடித்ததும் பிலிமைக் கழற்றி பிரிண்ட் போட்டுவிட்டு காமிராவைத் தூக்கி எறிந்து விட வேண்டியதுதான்!

270 மைல் நடந்த பூனை!



ஜப்பானில் டோக்கியோவில் ஹிராட்சுகா நகரில் உள்ள ஒரு போலீஸ் அதிகாரி 270 மைல் தூரத்தில் உள்ள 'இடோய் காவா' என்னும் இடத்திற்குச் சென்றார். தன்னுடன் மிகி என்ற பூனையையும் கொண்டு சென்றார். ஆனால் பூனை அங்கே காணாமல் போய்விட்டது. சுமார் 1½ ஆண்டுகள் கழித்து அந்தப் பூனை 270 மைல் தூரத்தையும் நடந்தே கடந்து அந்தப் போலீஸ் அதிகாரியிடம் வந்து சேர்ந்துவிட்டது. அந்தப் பூனையைப் பாராட்டி, ஜப்பானில் பூனை வளர்ப்போர் சங்கம் விழா நடத்துகிறது!

மிகப் பெரிய மாணவி



அமெரிக்காவில் ரோட் ஐலண்ட் பல்கலைக்கழகத்தில் நர்ஸ் பயிற்சி வகுப்பில் சேர்ந்திருந்த ஒரு மாணவியை கல்லூரியிலிருந்து நீக்கிவிட்டனர். காரணம், அவள் மிகவும் குண்டாக 137 கிலோ எடையில் இருந்தாள்! ஆனால், அந்த மாணவி வழக்குத் தொடர்ந்தாள். எப்படி இருந்தாலும் அந்த வகுப்பில் தொடர்ந்து படிக்க அவளுக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பாயிற்று!


180 ஆண்டுகளுக்குப் பிறகு . . . . .



கழுகுகளில் 'தங்கக் கழுகு' என்னும் இனம் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டது. 180 ஆண்டுகளாக அந்தக் கழுகை யாரும் பார்க்கவில்லை. ஆனால், சமீபத்தில் மேற்கு ஜெர்மனியில் 'பாடன் உர்ட்டம் பர்க்' காட்டுப் பகுதியில் ஒரே ஒரு தங்கக் கழுகு பறந்ததைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆக, அந்த இனம் இன்னும் அழிந்துவிடவில்லை என்பது இப்போதுதான் தெரிகிறது!

மனிதத் தோலை வளர்க்கலாம்!

மனிதத் தோலில் ஒரு சிறு துணுக்கிலிருந்து பெரிய தோல் ஷீட்டுகளை வளர்க்கும் முறையை ஐக்கிய அமெரிக்காவில் மிஷிகன் பல்கலைக் கழகம் கண்டு பிடித்திருக்கிறது. தீயினால் தோல் வெந்து போய்விட்டால், அந்த உடம்பிலிருந்து எடுத்த நல்ல சிறிய துணுக்குத் தோலை எடுத்து விஞ்ஞானக் கூடத்தில் பெரிதாக வளர்த்து, பிறகு அதை வைத்து இணைத்துத் தழும்பைச் சரியாக்க இந்தக் கண்டுபிடிப்பு பயன்படுகிறது.



டாக்டர் பக்கம்

வாய்ப்புண் வராமல் தடுப்பது எப்படி?



டாக்டர் ஸ்ரீ. கமலா

இன்று ஞாயிற்றுக்கிழமை.

எனக்கு ஓய்வு நாள்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு வாரப் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருக்கிறேன். வாசல் கதவைத் திறந்து கொண்டு யாரோ வருகிற சத்தம் கேட்கிறது.

திரும்புகிறேன்.

தீபா! எதிர் வீட்டில் வசிக்கிறாள்; ஏழாம் வகுப்பில் படிக்கிறாள். நன்றாகப் படிப்பாள். மிக நன்றாக ஓவியம் வரைவாள். பரத நாட்டியம் ஆடுவாள். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாள். எப்போதாவது என்னைச் சந்திக்க வருவாள்.

இதோ இன்று வந்திருக்கிறாள் தீபா —

நான்: என்ன தீபா? அத்தி பூத்த மாதிரி வந்திருக்கிறாய்? என்ன விஷயம்?

தீபா: டாக்டர், வாய்ப்புண் என்றால் என்ன?

நான்: ஏன் தீபா? திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்கிறாய்? உனக்கு ஏதாவது வாய்ப்புண் தொந்தரவு இருக்கிறதா?

தீபா: இல்லை டாக்டர், கிராமத்திலிருந்து என் தம்பி கடிதம் எழுதியிருக்கிறான். அவனுக்கு அடிக்கடி வாய்ப்புண் வருகிறதாம். அங்கே கவனிக்க வசதிகள் இல்லையாம். அதனால் உங்களிடம் விவரம் கேட்டு எழுதச் சொல்லியிருக்கிறான். எனக்கும் வாய்ப்புண் பற்றி ஒன்றும் தெரியாது. அதனால் தான் உங்களிடம் வந்திருக்கிறேன், டாக்டர்.

நான்: அப்படியா! இப்படி உட்கார், தீபா! உனக்கு வாய்ப்புண் பற்றி விளக்கமாகச் சொல்கிறேன்.

தீபா: நன்றி, டாக்டர்.

நான்: முதலில் வாய்ப்புண் என்பது தனிப்பட்ட நோயல்ல என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். உடம்பிலும் ரத்தத்திலும் ஏற்படும் சில மாற்றங்களின் அறிகுறிகளாகவும், சில தேவைகளின் அறிகுறியாகவும்தான் வாய்ப்புண் வரும். அதாவது நம் வாயில், உதட்டில், நாக்கில், வாயின் இரு ஓரங்களில் திடீரென்று வலியுடன் கூடிய சின்னச் சின்னக் கொப்புளங்கள் வெடிக்கும். இவை சீழ் பிடித்துப் புண்ணாகும். இப்புண்களைத்தான் 'வாய்ப்புண்' என்கிறோம். ஆங்கிலத்தில் இதை 'Stomatitis' என்று பொதுவாகச் சொல்வோம்.

தீபா: அப்படியா டாக்டர்!

நான்: வாய்ப்புண்ணில் பல வகைகள் இருக்கின்றன. நீ உற்சாகத்துடன் கேட்பதால் அவற்றையும் சொல்கிறேன்.

'Angular Stomotitis' என்று ஒரு வகை. இவை நம் வாயின் இரு ஓரங்களிலும் சிறிது கொப்புளங்களாக வெடித்துப் புண் உண்டாகும். குழந்தைகளுக்கு அதிகமாகப் பாதிக்கக் கூடிய வாய்ப் புண்கள் இவ்வகையைச் சேர்ந்தவை தான்.

'Gingivitis' என்பது இரண்டாவது வகை. இதிலே பல், ஈறுகள் வீங்கி, சிவந்து, சீழ்பிடித்துப் புண்ணாகும்.

'cheilosis' என்ற மூன்றாம் வகையில், உதடுகளில் வெடிப்புகள் உண்டாகிப் புண்ணாகும்.

இதுதவிர ஆப்தஸ் அல்சர் (Aphthous Ulcer) வின்சென்ட்ஸ் அன்ஜைனு (Vincent's Angina), கேண்டிடா ஆல்பிகன்ஸ் (Candida Albicans) என்ற சில வகை வாய்ப்புண்களும் இருக்கின்றன.

தீபா: சரி, டாக்டர், இவ்வாய்ப் புண்கள் எதனுல் வருகின்றன என்பதைச் சொல்லுங்களேன், தெரிந்து கொள்கிறேன்...

நான்: அவசியம் சொல்கிறேன். தீபா, வாய்ப்புண் வருவதற்கு முதல் காரணம் நாம் சாப்பிடும் உணவில் வைட்டமின் B 2, வைட்டமின் B 12, வைட்டமின் C, நியாசின், போலிக் அமிலம் போன்ற வைட்டமின் சத்துக்கள் குறைவாக இருப்பது தான்.

இரண்டாவது காரணம் — சுத்தம் சுகாதாரம்பற்றி அறியாதகுழந்தைகள் வாயை நன்ருகச் சுத்தம் செய்யாமல் அசிங்கமாக வைத்திருப்பார்கள். அம்மாதிரி வாயை அசுத்தமாக வைத்திருந்தால் பாக்டீரியா கிருமிகள் அதிகமாக வளர்ந்து வாய்ப்புண்ணை உண்டாக்கும்.

அடுத்தபடியாக ரத்த சோகை, தட்டம்மை, சின்னம்மை, தொண்டை அடைப்பான், டைபாய்டு காய்ச்சல் போன்ற நோய்கள் பாதிக்கும் போதும் வாய்ப்புண் வரலாம்.

சில சமயங்களில் டெட்ரா சைக்ளின், சல்பா போன்ற மாத்திரைகள் காரணமாகவும் வாய்ப்புண் வரும்.

சில குழந்தைகளுக்குப் பற்பசையில் உள்ள சில ரசாயனப் பொருட்கள் ஒத்துக் கொள்ளாமல் வாயில் புண்களை உண்டாக்கும்.

வெற்றிலை, புகையிலை அதிகமாகப் போடுகிற பெரியவர்களுக்கும் வாய்ப் புண் வரும்.

தீபா: அடேயப்பா.... வாய்ப்புண் வருவதற்கு இத்தனை காரணங்கள் இருக்கின்றனவா? இதுவரைக்கும் எனக்குத் தெரியாமல் போயிற்றே! சரி டாக்டர், வாய்ப்புண் என்பது யாருக்குமே வரக் கூடிய நோயா?

நான்: ஆமாம், தீபா... வாய்ப்புண் யாருக்கு வேண்டுமானுலும் வரலாம். ஆனுல், பெரும்பாலும் சுத்தமில்லாத குழந்தைகளுக்கும், சத்துள்ள உணவைச் சாப்பிட இயலாத வறுமையில் வாடும் ஏழைக் குழந்தைகளுக்கும் தான் அதிகமாக வருகிறது.

தீபா: வாய்ப்புண் வந்தால் நம் உடம்புக்குக் கெடுதலா, டாக்டர்?

நான்: என்ன அப்படிக் கேட்டு விட்டாய், தீபா! வாய்ப்புண் வந்தால் எத்தனை தொந்தரவுகள் வரும் தெரியுமா? புண் வலிக்கும். வாயைத் திறந்து பேச முடியாது. நன்ருகச் சாப்பிட முடியாது. அதிகமாக வாய்ப்புண் வந்துவிட்டால் தொற்றுநோய்க்கிருமிகள் சேர்ந்துகொண்டு புண்ணில் சீழ் வைத்து, வாய் துர்நாற்றம் அடிக்கும். இதனுல், காய்ச்சல்கூட வரலாம். கழுத்தில் நெறி கட்டி வலிக்கும். அடிக்கடி வாய்ப்புண் வந்தால் சரியாகச் சாப்பிட முடியாமல் வேறு சில சத்துக் குறைவு நோய்களும் நம் உடம்பில் ஒட்டிக் கொள்ளும்.

தீபா: அப்படியா டாக்டர்...? இந்த வாய்ப்புண் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

நான்: சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். அதாவது நாம் சாப்பிடும் உணவில் புரோட்டீன், கார்போஹைட்ரேட், கொழுப்பு இவைகளோடு வைட்டமின் சத்துக்களும் அடங்கியிருக்க வேண்டும்.

தீபா: அந்த உணவுகளைப் பற்றியும் எனக்குச் சொல்லுங்கள், டாக்டர்.

நான்: சொல்கிறேன், கேள்...., பால், முட்டை, மொச்சை, பட்டாணி, பயிறு வகைகள், கீரை

வகைகள், பச்சைக் காய்கறிகளில் வைட்டமின் B12, மற்றும் வைட்டமின் சத்துக்கள் அதிகமாக உள்ளன. அதே மாதிரி ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி, பாகற்காய், முருங்கைக்காய் போன்றவற்றில் வைட்டமின் C சத்து அதிகமாக உள்ளது. வேர்க்கடலேயில் நியாசின் சத்து உள்ளது. முட்டைக்கோஸ், காலிஃப்ளவர், முழுத்தானிய வகைகள், இறைச்சி, மீன் போன்றவற்றில் இரும்புச் சத்து அதிகமாக உள்ளது. இம்மாதிரி சத்துள்ள உணவுகளை நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே நாளில் அத்தனை வகைகளையும் செய்ய இயலாதல்லவா? அதனால் உணவுடன் தினமும் ஒரு வகைப் பழம், ஒருவகைக் காய்கறி, பால் அல்லது மோர் சேர்த்துக் கொண்டு வந்தால் போதும், வாய்ப்புண் வரவே வராது.

அடுத்ததாக வாய்ச் சுத்தம் மிக மிக அவசியம். ஒவ்வொரு முறையும் சாப்பிட்டு முடித்த கையோடு வாயை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும். பற்களுக்கிடையில் உணவுத்துகள்கள் சிக்கிக்கொள்ளாத வாறு பல் துலக்க வேண்டும்.

வெற்றிலே, புகையிலே போடும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

நீங்களாகவே மருந்துக் கடைகளில் மாத்திரை வாங்கிச் சாப்பிடும் பழக்கத்தையும் விட்டுவிட வேண்டும். ஏனென்றால், எந்த மாத்திரை உங்களுக்கு ஒத்துக் கொள்ளும் என்பதை மருத்துவர்தான் முடிவு செய்ய வேண்டும்.

சிறு வயதிலிருந்தே சுத்தத்தையும் சுகாதார வழிமுறைகளையும் கடைப்பிடித்து நோய்த் தொற்று வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தீபா: சரி டாக்டர், இத்தனே தடுப்பு முறைகளையும் மீறி வாய்ப்புண் வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது என்ன செய்வது?

நான்: அதையும் சொல்கிறேன் தீபா... வாய்ப்புண்ணுக்கெல்லாமா மருத்துவரிடம் செல்வது என்ற அலட்சியப் போக்கு பலரிடத்திலும் இருக்கிறது. அதே மாதிரி உஷ்ணத்தினுல்தான் வாய்ப்புண் வருகிறது; அது தன்னுல் சரியாகிவிடும் என்ற தப்பான அபிப்பிராயமும் மக்களிடம் நிலவுகிறது. அது தவறு. ஆரம்பத்திலேயே மருத்துவரிடம் கலந்தாலோசித்து முறையாக வைத்தியம் செய்து கொள்ள வேண்டியது அவசியம். வாய்ப்புண் வரக் காரணம் அறிந்து, வைட்டமின் மாத்திரைகளோ, ஆன்டிபயாடிக் மருந்துகளோ மருத்துவர் சிபாரிசு செய்வார்.

அது தவிர ஏற்கெனவே சொன்ன படி சத்துள்ள உணவுகளையும் சாப்பிட வேண்டும். வாய்ப்புண் இருக்கும் போது சூடான உணவு வகைகளை உட்கொள்ளக் கூடாது. பழச்சாறுகள் அடங்கிய தண்ணீர் ஆகாரங்கள் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை வாயைச் சுத்தம் செய்ய வேண்டும். 200 மி. லி. தண்ணீரில் ஒரு ஸ்பூன் (உணவுக்கு உபயோகிக்கும்) உப்பைக் கலந்து வாயைக் கொப்புளிக்க வேண்டும். இதனுல் நோய்த் தொற்று வருவதைத் தடுப்பதோடு, வாய்ப்புண் மிக விரைவில் குணமாவதற்கும் வழி வகுக்கும்.

தீபா: நன்றி, டாக்டர்... என் தம்பிக்கு நீங்கள் சொன்ன இத்தனே விவரங்களையும் விளக்கமாக எழுதி அனுப்புகிறேன். முடிந்தால், நேரில் இங்கே வரச் சொல்லி எழுதுகிறேன். அவன் வாய்ப்புண் உங்களால்தான் குணமாக வேண்டும். மீண்டும் நன்றி டாக்டர்!

நான்: நல்லது தீபா... அப்படியே செய்!

(விடைபெறுகிறுள்.)

சித்திரப் புதிர்-20
விடை:

1. எலி — தரையில் வாழக் கூடியது
2. பில்லியர்ட்ஸ்
3. இந்தியா
4. ஜப்பான்
5. வியட்நாம்

உயர்ந்தவன் யார்?



திருப்திகரமாக மதிய உணவைச் சாப்பிட்டான் செந்தில். ஈரக் கையைச் சட்டையில் துடைத்தபடியே வீட்டின் முன்பக்கம் உள்ள கடைக்குள் நுழைந்தான்.

கடை என்றால் ஏதோ பெரிய கடை என்று எண்ணிவிடாதீர்கள். அது ஒரு லாண்டரிக் கடை. முன்பக்க ஹால் போன்ற பகுதியில் தடுப்பு வைத்து மறைக்கப்பட்டிருக்கும். மறைப்புக்கு முன்பக்கம் சலவை செய்யப்பட்ட துணிகள் பீரோவில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். தடுப்புக்குப் பின்பக்கம் அழுக்குத் துணிகள் குவித்து வைக்கப்பட்டிருக்கும்.

''டேய் செந்தில்! நான் ஊருக்குப் போறதாலே வழக்கம் போல நோட்டிலே உருப்படிகளை எழுதி வை. குறிகளை ஒழுங்காகப் பார்த்துப் போடு'' என்று காலையில் தன் தந்தை ஊருக்குக் கிளம்பும்போது கூறிய சொற்கள் ஞாபகத்திற்கு வரவே, நோட்டையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு பக்கத்திலும் யார் யார் எத்தனை துணிகள் போட்டிருக்கிறார்கள் என்று எழுதி முடித்தான் செந்தில்.

அடுத்து . . . . .

சட்டை, பேண்ட் போன்றவற்றின் பைகளைச் சோதனை போட்டுவிட்டு, அழுக்குத் துணிகள் எல்லாவற்றையும் ஒரே மூட்டையாகக் கட்ட வேண்டியது.

பழக்கத்தின் காரணமாக, கைகள் வேகமாக இயங்கின. இதோ இன்னும் ஒரு சட்டைதான் பாக்கி....

சட்டையின் உள்பாக்கெட்டில் கை விட்டான். அவன் கைகளில் பேப்பர் போன்று ஏதோ தட்டுப்பட்டது. வெளியே எடுத்தான்....

பத்து ரூபாய் நோட்டு!

இது யாருடைய சட்டை? சைக்கிள் ரிக்ஷாக்காரர் கந்தசாமியினுடையதுதான். அவர்தான் மறந்து வைத்திருக்க வேண்டும். இந்தப் பத்து ரூபாயை நாமே வைத்துக் கொண்டால்.... என்னென்ன செலவுகள் செய்யலாம். சினிமாவிற்குப் போகலாம். காட்பரீஸ் வாங்கிச் சாப்பிடலாம். ஐஸ்க்ரீம் வாங்கிச் சாப்பிடலாம்.

நினைக்கும்பொழுதே நெஞ்சு இனித்தது அவனுக்கு. சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் இல்லை. பணத்தை, தன் பாக்கெட்டில் போடப் போகும் போது.....

'டேய் செந்தில்! மற்றவர் பணத்திற்கு ஆசைப்படுவது பாவம்.... மனிதர் யாரும் பார்க்காவிட்டாலும் எங்கும் நிறைந்திருக்கும் ஆண்டவன்

ம. ஜானகி

உன்னைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார். பணத்தை உரியவரிடம் சேர்ப்பித்து விடு'' என்று மனசாட்சி எச்சரித்தது. ஒரு வினாடி தயங்கிய அவன் கண்களில், ஐஸ் பார் தென்படவே நோட்டைத் தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

திடீரென்று அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

'கந்தசாமியே வந்து கேட்டால்...?'

'இல்லை' என்று சொல்லிவிட வேண்டும்.

தன் அப்பாவை நினைக்கும்போது அவனுக்கு உள்ளுக்குள் கொஞ்சம் நடுக்கமாகத்தான் இருந்தது. நேர்மை, நாணயம் இரண்டும் அவருக்கு இரண்டு கண்கள். கந்தசாமி அப்பாவிடம் சொல்லி அப்பா தன்னைக் கேட்டால்.,....

'நான் ரூபாய் நோட்டைப் பார்க்கவே 'இல்லை' என்று அடித்துச் சொல்லிவிட வேண்டும்.

எட்டிப் பார்த்த மனசாட்சியை அடக்கிவிட்டு, எழுந்து நின்று கொண்டான். மணியைப் பார்த்தான். இரண்டே கால். மூன்று மணிக்கு மாட்னி ஆரம்பமாகும். அதற்குக் கட்டாயம் போக வேண்டும்.

அழுக்குத் துணிகளை ஒழுங்காகக் கட்டி வைத்தான். கண்ணாடி முன்பு நின்று கொண்டு தலையை அவசர அவசரமாக வாரிக் கொண்டான்.

பிறகு தன் அம்மா இருக்கும் இடத்திற்குச் சென்று, ''அம்மா! போன வாரம் ஊருக்குப் போகும்போது அத்தை கொடுத்த ஒரு ரூபாயை அப்படியே வச்சிருக்கேன். அதிலே இப்ப சினிமாவிற்குப் போய்விட்டு வருகிறேன்.''

அம்மா எங்கேயாவது தடுத்து விடுவாளோ என்ற அச்சத்தில் வேகவேகமாக வாயிற்பக்கம் வந்தான்.

அப்போது.....

''ஐயா....''

அழைப்பது யார் என்று எண்ணியபடியே தலையை நிமிர்ந்தான். வாசலில் பிச்சைக்காரப் பொன்னன் தான் நின்று கொண்டிருந்தான்.

ஆம்! பொன்னன் ஒரு காலை இழந்தவன். பிச்சை எடுத்து வாழ்பவன். ஊன்றுகோலின் உதவியினால்தான் நடப்பான். பகல் எல்லாம் பிச்சை எடுக்கச் சென்றுவிடுவான். இரவு செந்திலின் வீட்டிற்குச் சற்றுத் தள்ளி இருக்கும் பிள்ளையார் கோவிலின் மேடை மீது படுத்துக் கொள்வான். யார் எது கொடுத்தாலும் வாங்கிக் கொள்வான். செந்திலின் அம்மா சில சமயங்களில் ஊற்றும் வடித்த கஞ்சியை மகிழ்ச்சியோடு வாங்கிக் குடிப்பான்.

பிச்சை எடுக்கத்தான் வந்திருக்கிறான் என்று செந்தில் நினைத்தான். சினிமாவிற்குப் போகும் பரபரப்பு.

''உனக்கு இன்றைக்கு ஒன்றுமில்லை. போ.... போ.... நாளைக்கு வா'' என்றான் எரிச்சலோடு.

''கோவிச்சுக்காதே தம்பி! இது... இது.... உங்க வீட்டுப் பையான்னு பார்த்துச் சொல்லு.''

தன் கையிலிருந்த துணிப் பையை கடைக்கு முன்னால் வைத்தான். மெதுவாக அமர்ந்து கொண்டான்.

அந்த வெள்ளைப் பையைப் பார்த்ததும் செந்தில் திடுக்கிட்டான். அன்று காலைதான் அவன் அக்காள், தன் கைக்குழந்தையுடன் கணவன் வீட்டிற்குச் செல்கிறாள். அவளைக் கொண்டு விடத்தான் அவன் தந்தையும் அவளுடன் செல்கிறார். அந்தப் புதிய பையில்தான் அக்காவிற்கு

எதற்குப் பின் எது?

சால்வை
சாயம்
சர்க்கரை
சந்திப்பு
சஞ்சலம்
சமநிலை.

இவற்றில் எந்தச் சொல்லுக்குப் பிறகு எது அகராதியில் காணப்படும்.

— ஏஎல். பழனியப்பன் (3035), சென்னை — 40.





வாங்கிய புதிய வாயில் சேலை, குழந்தையின் புதிய சட்டைகள், புதிய வெள்ளிக் கொலுசு, ஹோட்டலில் வாங்கிய பலகாரப் பொட்டலம் எல்லாம் இருந்தன. செந்தில்தான் அந்த வெள்ளைப் பைக்குள் எல்லாவற்றையும் அழகாக அடுக்கி வைத்தான். அக்காளின் சாமான்களோடு இந்தப் பையையும் அருகில் வைத்தான். இப்போது.... எப்படி.....? இவனிடம்?

பார்வையில் தொக்கி நின்ற கேள்விக் குறியை உணர்ந்து கொண்ட பிச்சைக்காரன் மெல்ல ஆரம்பித்தான். "தம்பி! பிச்சை எடுக்க இன்னிக்கு பஸ் ஸ்டாண்டு பக்கம் போனேன். கல்யாண நாளு போல இருக்கு. ஒரே கும்பல். பஸ்ஸிலே ஜனங்க தொங்கிக்கிட்டே வந்தாங்க. சேலம் போற பஸ் வந்துச்சு. யாரையுமே ஏத்திக்கலை. ஏன்னா அம்புட்டு நெரிசல். ஒரு மணி நேரம் கழிச்சு இன்னொரு பஸ் வந்துச்சு. எப்படியோ முண்டியடிச்சு உங்க அக்கா கைப்பிள்ளையோடு ஏறிடுச்சு. உங்கப்பாரும் கஷ்டப்பட்டு ஏறிப்புட்டாரு. பஸ் போன பிறகுதான். கவனிச்சேன். இந்தப் பை உங்கப்பாரு உட்கார்ந்த இடத்துக்கிட்டே இருந்ததை. உங்கப்பா பக்கத்திலே இன்னும் ஏழெட்டு ஆளுங்க உட்கார்ந்திருந்தாங்க. இது உங்க வீட்டுப் பையா.... மற்ற ஆளுங்களோட பையான்னு தெரியலை. எதுக்கும் நம்ம வூட்லே கேட்டுப்புட்டு.... அப்படி இல்லேன்னா, போலீஸ் ஸ்டேஷன்லே ஒப்படைச்சுடலாம்னு நெனச்சேன். ஏன்னா, பையைக் காணாமே போக்கினவங்க.... கவலைப்பட்டுக்கிட்டு இருப்பாங்க இல்லையா?"

பேசிமுடித்தான் பொன்னன்.

செந்தில் பொன்னனைப் பார்த்தான். எண்ணெய் காணாத பரட்டைத் தலை... வெயிலினால் ஏற்பட்ட வியர்வைத் துளிகள் படிந்த முகம். பசியினால் களைத்து வாடிய உடல். தொடர்ந்து பேசியதால் மூச்சு வாங்கும் மெலிந்த உடல். ஆ...னா...ல்... ஆனால்.... இந்த நிலையிலும் மனத்தால் கூட மற்றவர் பொருளுக்கு ஆசைப்படாத, கறை படியாத, அந்த உயர்ந்த உள்ளம்....

மலையின் உச்சியிலிருந்து தன்னை யாரோ,, இல்லை.... தானே, கீழே விழுந்துவிட்டாற் போன்ற உணர்வு.:.

''டேய் செந்தில்! இந்தப் பையை பிச்சைக்காரனை வைத்துக் கொண்டு அதில் உள்ள பொருட்களை விற்று வயிறாரச் சாப்பிட்டிருக்கலாம். அப்படிச் செய்தானா தன் வயிற்றுப் பசியைப் போக்க? நீ என்ன நினைக்கிறாய்? அது யார் பணம் என்று தெரிந்தும் திருட்டுப்பணத்தில் ஜாலியாக சினிமா பார்க்கக் கிளம்பி விட்டாயே! வெட்கமாக இல்லை உனக்கு....? பொன்னனின் உடலில்தான் ஊனமேயொழிய உள்ளத்தில் இல்லை. உனக்கு... உடலில் ஊனம் இல்லை. ஆனால்.... உள்ளத்தில்? — மனசாட்சி இடித்துக் காட்டியது. வினாக்களை வரிசையாகத் தொடுத்தது. அவன் அறிவுக் கண்களைத் திறந்தது.

'நான் செய்ய நினைத்தது தப்புதான். நான் திருந்திவிட்டேன். என் வகுப்பு ஆசிரியர் கூறியது போன்று இனிமேல் மற்றவர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டேன்' என்று மனத்திற்குள் கூறிக் கொண்டான்.

''பொன்னா, எங்கப்பா அவசரத்திலே பையை மறந்து போய் வைச்சுட்டு பஸ் ஏறியிருக்காரு! நல்ல காலம். நீ கண்டு பிடிச்சு எங்ககிட்டே கொண்டு வந்து கொடுத்துவிட்டே... நீ செஞ்ச உதவியை மறக்கமாட்டேன்'' என்றான் பொன்னனைப் பார்த்து.

''என்ன தம்பி! பெரிய பெரிய வார்த்தை எல்லாம் பேசிக்கிட்டு.... சாதாரணமாக மனுஷங்க செய்ய வேண்டிய கடமையைத்தானே நான் செய்தேன்'' என்றான் பொன்னன் அடக்கத்தோடு.

இதுவரை நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் அம்மா, ''பொன்னா! செந்திலோட அப்பா... யார் பொருளுக்கும் ஆசைப்பட மாட்டாரு. அதனால், கடவுள் உன் மூலமா எங்க சாமான்களை எங்ககிட்டே சேர்த்துப்பிட்டாரு. கொஞ்சம் இரு. சாப்பாடு கொண்டு வரேன். வாங்கிக்கிட்டுப் போ'' என்று கூறியபடியே அவள் உள்ளே சென்றாள்.

இப்பொழுது பாக்கெட்டில் இருந்த பத்து ரூபாய் பாறாங்கல்லாகக் கனத்தது செந்திலுக்கு. வெள்ளைப் பையைக் கொண்டு உள்ளே பத்திரமாக வைத்தான். பிறகு தன் அம்மாவிடம்,

''அம்மா! ரிக்ஷாக்காரர் கந்தசாமி மறந்து போய் பாக்கெட்டிலே பத்து ரூபாயை வைச்சிருக்காரு. அவர்கிட்டே போய்க் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுத் தெளிந்த உள்ளத்தோடு கந்தசாமியின் இருப்பிடத்தை நோக்கிக் கிளம்பினான்.

குழந்தைக்குப் பெயர்

ஆப்பிரிக்காவில் குழந்தை பிறந்த சில நாட்களுக்குப் பிறகு பெயர் வைப்பார்கள். குழந்தையின் முன்னால் பல பெயர்களைக் கொண்ட பட்டியலைப் படிப்பார்கள். எந்தப் பெயரைப் படிக்கும்போது, குழந்தை அழுகிறதோ அல்லது கத்துகிறதோ அந்தப் பெயரையே வைத்து விடுவார்கள்.

— எஸ். எஸ். ராஜா (16796),
குத்தாலம்—1.





தமிழ் கம்ப்யூட்டர் 'பாரதி!'

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று கனவு கண்டார் பாரதியார். அந்தத் தீர்க்கதரிசிக் கவிஞனின் கனவை நனவாக்கியிருக்கிறார்கள் பெங்களூர் 'Software Research Group' இளைஞர்கள். தமிழில் 'பாரதி' கம்ப்யூட்டர் கண்டுபிடித்ததன் மூலம் இந்த இளைஞர்கள் தமிழுக்குச் சிறந்த தொண்டு ஆற்றியிருக்கிறார்கள். தமிழகத்தில் தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுவின் தலைவர் ம. பொ. சிவஞானம் இந்தப் புதிய தமிழ்ச் சொற் தொகுப்புச் சாதனத்தை வெளியிட்டு மகிழ்ந்தார். தமிழகத் தமிழ் வளர்ச்சி செயலர் டாக்டர் ஔவை நடராஜனும், தொலைக்காட்சி இயக்குநர் திருமதி அகிலா சிவராமனும் தமிழுக்குக் கிடைத்த இந்த யோகத்தை மெச்சினார்கள். தமிழ் அறிந்த சமூகத்துக்கு இந்தப் பாரதி கம்ப்யூட்டர் சாதனம் மிகவும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. 'பாரதி' என்ற தமிழ் கம்ப்யூட்டர் சாதனத்தின் கணக்கிடும் ஆற்றல், வரிசைப்படுத்தும் திறன், கடிதங்களை முகவரியுடன் இணைத்தல், சிறப்பாக அச்சிடும் திறன் அனைத்தும் வந்திருந்தவர்களை மெய்மறக்கச் செய்தன. 'தமிழில் முடியுமா?' என்ற வினாவை 'முடியும்' என்று நிரூபித்துக் காட்டுவதற்கு உதவியவர் இளைஞர் திரு. டி. எஸ். முத்துகிருட்டிணன் தலைமையில் இயங்கும் இளமைப் பொறியாளர்கள்.

திரு. முத்துகிருட்டிணன் 1947 ஏப்ரல் 11 ந் தேதி பிறந்தவர். இவர் சென்னை ஐ. ஐ. டி. யில் மின்துறைப் பகுதியில் பி. டெக் பட்டம் பெற்றவர். இவர் ஐ. பி. எம். கம்ப்யூட்டர் துறைகளில் விசேஷப் பயிற்சி பெற்றதோடு லூகாஸ் டி. வி. எஸ். மைகோ, இந்தியன் டேட்டா பிராஸஸர்ஸ் நிறுவனங்களிலும் பணிபுரிந்து தமது நுட்பத் திறனை வளர்த்துக்கொண்டவர். அமெரிக்கா, ஐரோப்பா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்குத் தொழில் நிமித்தம் பயணம் மேற்கொண்டவர். ஐந்து வருஷங்களுக்கு முன் பெங்களூரில் கம்ப்யூட்டர் ஆராய்ச்சிக்காகப் பல இளம் விஞ்ஞான நிபுணர்களுடன் Software Research Group ஐத் தொடங்கினார். கன்னடம், ஹிந்திக்காக 'சப்ரத்ன' என்ற பன்மொழித் தொகுப்பு சாதனத்தைத் தயாரித்ததோடு, இவர் தமிழில் 'பாரதி'யை உருவாக்கித் தமிழுக்குச் சேவை செய்திருக்கிறார்.

ஆங்கிலம் தெரிந்திருந்தால்தான் கம்ப்யூட்டர் கருவிகளை இயக்க முடியும் என்பதில்லை. தமிழ் அறிந்திருந்தாலும் கம்ப்யூட்டர் சாதனங்களை இயக்க முடியும் என்பதற்கு 'பாரதி' வழி வகுக்கிறது. இளம் பொறியியல் நிபுணர் முத்துகிருட்டிணன் ஐரோப்பியர்களும் மெச்சும்படியாகக் கம்ப்யூட்டருக்கு "Word Lord" தயாரித்து, ஜெர்மானிய, பிரெஞ்சு மொழிகளில் அதனை வெளியிட்டு, மேற்கு ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் மிகப் பிராபல்யமடைந்திருக்கிறார். 1985 ஆம் ஆண்டு இந்தியத்தொழில்வளர்ச்சிக் கழக உறுதுணையோடு ஹாலந்தில் நடைபெற்ற ஐரோப்பிய 'ஸாஃப்ட்வேர்' எக்ஸிபிஷனில் கலந்து கொண்ட போது இந்தச் சாதனை செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. அதோடு ஜெர்மனியில் பிஷாப் நிறுவனத்தின் தொழில் கூட்டுறவும் கிடைத்தது இவரது சாதனைக்கு உறுதுணையாய் அமைந்தது. மேலும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா தேசங்களிலும் தமது கம்ப்யூட்டர் சாதனையை அறிமுகப்படுத்தப் போகிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

— பி. எஸ். எம்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

* இப்பொழுது நாட்டியத்திலே சில நாடகங்களை நடத்துகிறார்களே. இப்படி முன்பெல்லாம் கூட நடத்தியிருக்கிறார்களா?

— சி. வேதவல்லி, சென்னை — 5.

ஓ, நடத்தியிருக்கிறார்களே! 'நந்தனார் சரித்திரம்' என்ற நாட்டிய நாடகத்தை கோபாலகிருஷ்ண பாரதியார் எழுதினார். 'இராம நாடகம்' என்ற நாட்டிய நாடகத்தை அருணாசலக்கவிராயர் எழுதினார். இவை அக்காலத்தில் நடிக்கப் பெற்ற பிரபலமான நாட்டிய நாடகங்கள்.

* வீட்டு வரி, நில வரி, வருமான வரி, விற்பனை வரி என்று என்ன என்னவெல்லாமோ வரிகள் போடுகிறார்களே, இதெல்லாம் எதற்கு?

— கே. ஆத்மநாபன், கள்ளிக்கோட்டை.

நாம் ஒரு சங்கம் நடத்துவதானால் சங்க உறுப்பினர்களிடம் 25 காசோ 50 காசோ சந்தா வசூலிக்கிறோம். அப்படி வசூலிக்கும் பணத்தில் சங்கத்திற்கு வேண்டிய செலவுகளைச் செய்கிறோம். அதேபோலத்தான், அரசாங்கம் பலவித வரிகளை வசூலித்து, கல்விக்காகவும், சாலைகள் போடவும், மருத்துவமனை நடத்தவும், அணைகள் கட்டவும் செலவு செய்கிறார்கள். இன்னும் போலீஸ், சுகாதாரம், நீதிமன்றம் என்று பல செலவுகள். வருமானம் இருந்தால்தானே செலவு செய்ய முடியும்?

* என் நண்பன் மண்ணைத் தோண்டிய போது ஒரு தவளை விறைத்துப் போய் உலர்ந்து கிடந்தது. அதை எடுத்து, அவன் தண்ணீர் நிறைந்த தொட்டியில் போட்டான். சிறிது நேரத்தில் அதற்கு உயிர் வந்துவிட்டது! நன்றாக நீந்த ஆரம்பித்துவிட்டது! ஆச்சரியமாக இருந்தது. நண்பனைக் கேட்டால், 'நான் ஒரு புத்தகத்தில் படித்தேன். அது நிஜம்தானா என்று சோதனை செய்து பார்த்தேன்' என்கிறான். இப்படியும் நடக்குமா?

— கே. கணேஷ், இராமநாதபுரம்

நடக்கும். கோடை காலத்தில் குளங்கள் வற்றி, வறண்டு கிடப்பதைக் காண்கிறோம். அப்போது தவளைகள் பூமிக்கு அடியில் புதைந்து கொண்டு அங்கேயே நன்றாகப் பல நாட்கள் உறங்கும். இதை 'வேனில் உறக்கம்' என்பார்கள். மழைக் காலம் வந்ததும் சேற்றை விட்டு வெளியில் வந்து, நீரில் நன்றாக நீந்தும். அப்படித்தான் உன் நண்பன் எடுத்து நீரில் விட்ட தவளையும் உயிர் பெற்றிருக்கிறது!



* 'கதகளி' என்கிறார்கள். 'கதக்' என்கிறார்கள். இரண்டும் ஒன்றா? வேறு வேறா?

— ப. குணவதி, திருக்கோகர்ணம்

இரண்டும் ஒன்றல்ல. வெவ்வேறுதான். 'கதகளி' என்பது கேரள நாட்டைச் சேர்ந்த நாட்டியம். 'கதக்' என்பது உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களில் ஆடப்படும் நாட்டியம்.

கதகளியில் நடிப்பவர்கள், நடிக்க வேண்டிய பாத்திரங்களுக்கு ஏற்றபடி முகத்தில் சாயம் பூசிக் கொள்வார்கள். பல வண்ண உடைகளை அணிவார்கள். கதக் நாட்டியம் ஆடுபவர்கள் கால்களில் சதங்கை கட்டிக் கொள்வார்கள். இரு கால்களையும் ஒரே சமயத்தில் தூக்கித் தூக்கி வேகமாக அசைத்து ஆடுவார்கள். எந்தப் பக்கம் நகர்ந்தாலும் அவர்களின் உடம்பு வளையாது; நெளியாது. நேராகவே நகரும்.

* சென்னை மாம்பலத்தில் இருக்கிறதே, 'தட்சிண பாரத இந்தி பிரசார சபை', அது எப்போது தொடங்கப் பெற்றது?

— ஆர். சீனிவாசன், திண்டிவனம்

1918—ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தலைமையில் நிறுவப் பெற்றது.

* நம் தமிழ் மொழியிலிருந்து அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் எது?

— வே. அமிர்தவல்லி, சேலம்—2

திருக்குறள்தான்.

* எனக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் மலம் வெளியாகிறது. தினந்தோறும் வெளிவந்தால்தானே உடம்புக்கு நல்லது? இதற்கு என்ன செய்யலாம்?

— வி. ரங்கராஜன், சென்னை—17

மலம் வரும்போன்ற உணர்ச்சி தோன்றியவுடனே மலம் கழிக்க வேண்டியது மிகவும் அவசியம். சோம்பலில் சிலர் தள்ளிப்போடுவார்கள். சிலர் விளையாட்டு மும்முரத்தில், அலட்சியமாயிருப்பார்கள். இதைத் தவிர்க்க வேண்டும். ஆயினும் தினமும் முயன்று பார்த்தும் வெளிவரவில்லையே என்று நீ கவலைப்படத் தேவையில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை கூடச் சிலருக்கு வெளியாவது உண்டு. இதனால் அவர்களது உடல் நலம் கெடுவதில்லை. 48 மணி நேரமாகியும் ஒருவருக்கு மலம் வெளிவராவிடில், 'மலச்சிக்கல்' இருப்பதாக டாக்டர்கள் கருதுகிறார்கள். அப்போது டாக்டரைப் பார்த்தால், மலச்சிக்கலுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து, சிகிச்சை அளிப்பார்.

* உடற்பயிற்சி செய்வதற்கு எது சரியான நேரம்? சாப்பிட்ட பிறகு உடற்பயிற்சி செய்வது நல்லதா?

— ச. வீரமணி, சென்னை—10



அதிகாலையில் உடற்பயிற்சி செய்வது நல்லது. சாப்பாட்டிற்குப் பிறகு உடற்பயிற்சி செய்வது நல்லதல்ல. அதேபோல், பயிற்சி முடிந்தவுடனே சாப்பிடுவதும் நல்லதல்ல. சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு சாப்பிடுவதே நல்லது.

* பூச்சிகளிலே மிகவும் புத்திசாலிப் பூச்சி எது?

— ந. சண்முகம், புதுக்கோட்டை

எறும்புதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

* இட்லிக்கு ஆட்டி வைக்கும் மாவு புளித்து விடுகிறதே, எப்படி?

— ப. ஞானம், பேரூர்



காற்றிலே கோடிக் கணக்கான தாவர உயிரணுக்கள் கலந்திருக்கின்றன. அவை நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அவற்றிற்கு 'ஈஸ்ட்' என்று பெயர். அவை அரிசி மாவில் கலந்தவுடன், அங்கே ஒரு ரசாயன மாற்றம் ஏற்படுகிறது. அதனால்தான் மாவு புளிக்கிறது.

* நம் நாடு சுதந்திரம் பெறுவதற்காக புரட்சி வீரர் பகத்சிங்குடன் வேறு சிலரையும் ஆங்கில அரசாங்கம் தூக்கிலிட்டுக் கொன்றதாக என் மாமா சொன்னார். ஆனால், பகத்சிங்குடன் தூக்கிலிடப்பட்டவர்கள் பெயர்கள் அவருக்குச் சரியாகத் தெரியவில்லை. அவர்கள் யார் யார்?

— கே. மனோகரன், திருத்துறைப்பூண்டி

பகத்சிங்குடன் தூக்கிலிடப்பட்டவர்கள் இருவர். ஒருவர் பெயர் சுகதேவ்; மற்றொருவர் பெயர் ராஜகுரு.

* இப்போதுள்ள ஆங்கிலப் பஞ்சாங்க முறையை அமைத்தவர் ஜூலியஸ் சீசர் என்கிறார்களே, இது சரியா?

— பி. புவனா, பட்டுக்கோட்டை

சரியே. ஆங்கில மாதங்களில் ஒன்றான ஜூலை என்பதே அவருடைய பெயரிலிருந்து வந்ததுதான்!



ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸின் கதை

குழந்தைகளே! நீங்கள் கிராமஃபோன் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே!

இப்போதெல்லாம் அது உபயோகத்தில் இல்லை. அதன் இடத்தை டேப் ரிகார்டர்கள் பிடித்துக் கொண்டு விட்டன. இதைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு, கிராமஃபோன் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அப்போது, பாட்டு, பேச்சு போன்றவற்றை வட்டமான தட்டுகளில் பதிவு செய்வார்கள். இசைத்தட்டு என்று பெயர். அதைச் சுற்ற வைத்து, ஒலியை எழுப்பிக் கேட்கப் பயன்படும் எந்திரப்பெட்டிக்குத்தான் கிராமஃபோன் என்று பெயர்.

இப்போது பிரபலமடைந்துள்ள வீடியோவை விடப் பலமடங்கு அந்தக் காலத்தில் பிரபலமடைந்திருந்தது, இந்த கிராமஃபோன்!

அத்தகைய கிராமஃபோன் செய்யும் கம்பெனிகளில் ஒன்றுதான் HMV என்பது. அதாவது 'ஹிஸ்·மாஸ்டர்ஸ் வாய்ஸ்!' அவர்களின் இசைத் தட்டுக்களில் ஒரு டிரேட்மார்க்கை அதாவது, வியாபாரச் சின்னத்தை, நீங்கள் பார்த்திருக்கலாம். நீண்ட புனல் வடிவக் குழல் உள்ள கிராமஃபோன் பெட்டிக்கு, எதிரில் ஒரு நாய் உட்கார்ந்து பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கும்.

இந்தச் சின்னம் எப்போது, எப்படி ஏற்பட்டது தெரியுமா? அது ஒரு ருசிகரமான நிகழ்ச்சி... அதாவது கதை. உங்களுக்குத்தான் கதைகேட்கப் பிடிக்குமே!

ஃபிரான்சிஸ் பேராண்டு என்று ஓர் ஓவியர் இருந்தார். அவரிடம் ஒரு பழைய மாடல் கிராமஃபோன் இருந்தது. அதற்கு, 'எடிசன் ஃபோனோகிராஃப்' என்று பெயர். அதில் நீண்ட புனல் - வடிவக் குழல் இருக்காது. பிரான்சிஸ், அடிக்கடி அதில் இசைத் தட்டுக்களைச் சுழல விட்டு இசையைக் கேட்பார்.

ஃபிரான்சிஸிற்கு ஒரு சகோதரர். மார்க் பேராண்டு என்று பெயர். அவர் இறந்து விட்டார். அவர் ஒரு நாய் வளர்த்து வந்தார். அதை நிப்பர் என்பார்கள்.

அது என்ன செய்யும் தெரியுமா? அந்த எடிசன் ஃபோனோகிராஃபை பிரான்சிஸ் இயக்கிய உடனே, எங்கிருந்தாலும் சரி, ஓடிவந்து அதன் எதிரில் அமர்ந்து, காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, அதிலிருந்து எழும்

ஜானகி மணாளன்

ஒலியைக் கூர்ந்து கேட்கும். அந்தக் காட்சி எப்படி இருக்கும் தெரியுமா?

அந்த நாய், மறைந்த் தன்னுடைய எஜமானருக்காக ஏங்கித் தவித்து, ஃபோனோகிராஃபில் தன் எஜமானின் குரலை ஆவலுடன் கேட்பது போல் இருக்கும்.

ஃபிரான்சிஸ் அந்தக் காட்சியை மிகவும் ரசித்துப் பார்ப்பார். ஓவியக் காரர் அல்லவா? அவர் மனத்தில் கற்பனை ஊற்றெடுக்கும். கடைசியில் ஒரு நாள், அந்தக் காட்சியை அப்படியே ஓர் ஓவியமாக வரைந்து விட்டார். அதுமட்டுமல்ல; அதற்கு ஒரு பெயரையும் சூட்டிவிட்டார். என்ன தெரியுமா? 'தி நிப்பர் அண்டு த எடிசன் மெஷின்!'

ஃபிரான்சிஸ் தன்னைச் சூற்றியிருந்தவர்களிடம் அப்படத்தைக் காட்டினார். எவரும் அதை ரசிக்கவில்லை. ஆனால், ஒரே ஒரு நண்பர் மட்டும், ஒரு யோசனை கூறினார்.

படத்தில் வரையப்பட்டிருந்தது 'எடிசன் ஃபோனோகிராஃப் அது பழைய மாடல். அதில் புனல் வடிவக் குழல் இருக்காது. அதன் பிறகு புனல் வடிவக் குழலுடன் வேறு மாடல் வந்து விட்டது.

அதைக் குறிப்பிட்ட நண்பர், வடிவக் குழல் உள்ள புது மாடல் கிராமஃபோன் படத்தை வரையலாமே' என்றார். பிரான்சிஸ் அதை ஏற்றுக் கொண்டு, வேறொரு சித்திரம் வரைந்தார்.

1899. பிரான்சிஸ் ஒரு புதிய கிராமஃபோன் வாங்க விரும்பினார். அதற்காக லண்டன் நகரம் சென்று, பல தெருக்களில் அலைந்தார். ஓர் இடத்தில் 'கிராமஃபோன் கம்பெனி லிமிடெட்' என்ற பெயர்ப்பலகை கண்ணில் பட்டது. உள்ளே நுழைந்து விட்டார்.

அக்கம்பெனியின் மேலாளர் அவரை வரவேற்றார். அவர் பெயர் பி. ஓவன் என்பது. அவரிடம், பிரான்சிஸ் தம் சித்திரத்தைக் காட்டினார்.

ஓவனுக்கு அப்படம் மிகவும் பிடித்திருந்தது. அதைத் தம் கிராமஃபோன் கம்பெனியின் டிரேட்மார்க் — வியாபாரச் சின்னமாகப் பயன்படுத்தினால், எளிதில் மக்களைக் கவரலாம் என்று நினைத்தார். எனவே, பிரான்சிஸிடமிருந்து, அப்படத்தை விலைக்குவாங்கிக்கொண்டார். என்ன விலை தெரியுமா? 100 பவுண்டு.

அதற்கு முன் வரை, அந்தக் கம்பெனி, ஒரு தட்டின் மீது தேவதூதன் அமர்ந்து எழுதுவது போன்ற சின்னத்தைப் பயன்படுத்தி வந்தது. அதற்குப் பதில், பிரான்சிஸ் வரைந்த கிராமஃபோன் கேட்கும் நாயின் உருவத்தை வியாபாரச் சின்னமாக்கிக் கொண்டது, அந்தக் கம்பெனி.

அந்தப் படத்துக்கு ஏற்ற தலைப்பு வாசகம் ஒன்றையும் ஓவன் உருவாக்கிக் கொண்டார். அது என்ன தெரியுமா? அதுதான் 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்!' அதாவது HMV!

இந்த டிரேட்மார்க் 1920 இல்தான் இந்தியா வந்தது. அதுவும் எதில் தெரியுமா? ஒரு சிறிய போர்டபிள் கிராமஃபோனின் சின்னமாக!

"ஒட்டைச் சிவிங்கியாரே நீங்க ரொம்ப நல்லவர், பரோபகாரி, உயர்ந்தவர் அப்படீன்னு இந்தக் காடே புகழ்ந்து கொண்டாடுதே! காலை முதல் நானும், என்னுடைய குட்டியும் ஒண்ணுமே சாப்பிடலே. கொஞ்சம் தழை பறிச்சுப் போடுங்களேன்...."



புதிய புத்தகங்கள்

அழகிய வாழை

31 பாடல்களை இந்தப் புத்தகத்தில் தந்திருக்கிறார் கவிஞர் ஏ. நாராயணன். இவற்றில் 'எல்லாம் கடவுள் அறிவாரே', 'நன்றே நினைத்தால் நலமுண்டு' போன்ற பல கதைப் பாடல்களும் உள்ளன.

இந்தப் புத்தகத்தைப் பற்றி இரண்டாம் வகுப்பில் படிக்கும் பிரியா என்ற சிறுமியின் அபிப்ராயத்தை ஆரம்பத்தில் அச்சிட்டிருக்கிறார்கள். அத்துடன், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் டாக்டர் தமிழண்ணலும் ஓர் அணிந்துரை அளித்துள்ளார்.

'மலையாம் மலை அழகாம்
மலையைச் சுற்றித் தோப்பழகாம்
தோப்பாம் தோப்பழகாம்
தோப்பைச் சுற்றிப் பூவழகாம்.'

என்பதில் சந்தமும் அந்தாதியும் உள்ளன என அவர் பாராட்டியிருக்கிறார்.

ஒவ்வொரு பாடலும் படத்துடன் அச்சிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள்: 68, விலை ரூ 9.00
வெளியிட்டோர்: கற்பூரம் பதிப்பகம்,
அம்மாப்பேட்டை, சேலம்—3.

பெருமை சேர்க்கும் சிறுவர் கதைகள்

சிவப்புச் சாயம் பூசிக் கொண்ட பூனை காவி உடை தரித்த சாதுவைப் போல நடிக்கிறது; உபதேசம் செய்கிறது. அந்தப் பூனையின் உபதேசத்தை நம்பி அதன் சீடனாகிறது ஓர் எலி. பிறகு அதன் பேச்சை நம்பி வந்த எலிகளை, சீடனை எலிக்குத் தெரியாமல் பூனை தந்திரமாகக் கொன்று தின்று விடுகிறது. அதன் சூழ்ச்சி நாளடைவில் சீட எலிக்குத் தெரிந்து விடுகிறது.

தன் இனத்தைக் கொல்ல, தானே பூனைக்கு உடைந்தையாக இருந்ததை நினைத்து வருந்துகிறது அந்த எலி. எப்படியாவது பூனையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்கிறது. தான் நினைத்தபடி பூனைக்கு முடிவும் கட்டி விடுகிறது. 'பூனையின் புது வேடம்' என்ற இக்கதையுடன் மேலும் இரு கதைகளும் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன. அட்டைப் படத்தைத் தவிர, வேறு படங்களே இல்லை.

பக்கங்கள்: 64; விலை ரூ 6.00
வெளியிட்டோர்: இளவழகி பதிப்பகம்,
திம்மம்பேட்டை அஞ்சல்

வேட்டை நாய்

வீரச் சிறுவன் ஒருவன் பொல்லாத வேட்டை நாயுடன் போராடி அதைக் கொன்று விடுகிறான். பிற்காலத்தில் அவன் அந்த தேசத்தின் பெரிய வீரர்களிலே ஒருவனாகவிளங்குகிறான். இது அயர்லாந்துநாட்டுக் கதை.

உயிர் பெரிதா? நட்புப் பெரிதா? உயிரைக் காட்டிலும் நட்புத்தான் பெரிது என்பதை வாயால் கூறாமல் செய்கையில் காட்டுகிறார்கள் இரு அபூர்வ நண்பர்கள். இது கிரேக்க நாட்டுக் கதை.

இதேபோல், பர்மியக் கதை ஒன்றும், அரேபியக் கதை ஒன்றும் — ஆக நான்கு கதைகள் இப்புத்தகத்தில் உள்ளன.

ஒவ்வொரு கதைக்கான நிகழ்ச்சிப் படங்களுடன் அந்தந்த தேசத்துக் கொடிகளையும் காணலாம். இது 5—வது பதிப்பு.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா வழங்கியுள்ள இந்தப் புத்தகத்திலுள்ள பக்கங்கள்: 62; விலை ரூ 4/—.

கிடைக்குமிடம்: பாரி நிலையம்,
சென்னை — 108.

அணுவின் தந்தை

அணுவின் தந்தை எனப் போற்றப்படும் ஐன்ஸ்டைன் 12 வயதுப் பையனாக இருந்த போது, அவருக்குப் பாட நூலாக ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. அது கணக்குப் புத்தகம் போல் இல்லாமல் கதை வடிவில் இருந்தது. படிப்பதற்கு எளிதாகவும், தெளிவாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அது இருந்தது. ஓரிரு ஆண்டுகளில் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அக்கணித நூலை ஐன்ஸ்டைன் ஒரே நாளில் கூட இல்லை, இரண்டு மூன்று மணி நேரத்துக்குள்ளேயே படித்துவிட்டார்! அந்தப் புத்தகத்தைப் படித்த பிறகு அவருக்கு வாழ்க்கையில் ஊக்கமும் உற்சாகமும் பிறந்தன.


—இதேபோல் ஐன்ஸ்டைனின் வாழ்க்கையில் நடந்த பல நிகழ்ச்சிகளையும் உரையாடல் மூலம் சுவையாகக் கூறியிருக்கிறார் பி.வி. கிரி.

பக்கங்கள்: 80; விலை ரூ 6.25.
வெளியிட்டோர்: அமிழ்தம் பதிப்பகம்,
வேலூர் — 1 (வ.ஆ.)









பழைய கதை; புதிய பாடல்

வித்தியாசம்



குழந்தைக் கவிஞர்

வெள்ளை முயல் வேக மாக
ஓட லானது.
வேட்டை நாயும் அதைத் துரத்தி
விரட்ட லானது.
துள்ளித் துள்ளி அந்த முயல்
அதிக தூரத்தைத்
துரித மாகக் கடந்து சென்று
மறைய லானது.

முயலைத் தொடர்ந்த வேட்டை நாயும்
அயர்ந்து போனது.
மூச்சுத் திணறி ஓரி டத்தில்
அமர்ந்து விட்டது.
வயலில் ஆடு மேய்த்த சிறுவன்
இதனைக் கண்டனன்;
வந்து வேட்டை நாயி டத்தில்
கேட்க லாயினன்:

"சின்னஞ் சிறிய முயலைப் பிடிக்க
முடிய வில்லையே!
'தீரன், வேட்டை வீரன்' என்று
பெருமை கொள்வதேன்?
என்ன கார ணத்தி னாலே
தோல்வி வந்ததோ?"
என்று கேட்க, வேட்டை நாயும்
பதிலு ரைத்தது:

"எனக்கும் அதற்கும் உள்ள தான
வித்தி யாசத்தை
எளிதில் அறிந்து கொள்ள லாமே!
தெரிய வில்லையா?
உணவுக் காகத் தொடர்ந்து சென்ற
எனது ஓட்டத்தால்,
உயிரைக் காக்க ஓடும் முயலை
வெல்ல முடியுமோ?"

புதையல் வீரர்

டாக்டர் பூவண்ணன்



௯. பெருமாள் மறைந்தார்!

மகமத்கானின் படை ஊருக்குள் நுழைந்த போது ஊர் மக்கள், ரத்தக் கண்ணீர் வடித்தனர். "காலம் காலமாக விஜயமங்கலத்துக்குப் புகழைத் தந்து வரும் உட்கோயில் பொற்சிலைகளையும் அணிமணிகளையும் இன்னும் சிறிது நேரத்தில் இந்தப் படை கவர்ந்து செல்லப் போகிறது" என்பதை நினைத்து விம்மியழுதனர். ஆனால் யாரும் வீடுகளை விட்டு வெளியே வரவில்லை.

மகமத்கான் தனது படையை எதிர்த்து மக்கள் போரிடுவார்கள் என்றுஎதிர்பார்க்கவில்லை. என்றாலும் ஊர்ப் பற்று மிக்க வீரர்கள் சிலராவது உணர்ச்சி வயப்பட்டு உயிரை மதிக்காமல் தன் முன்னே வந்து குதிப்பார்கள்; கூச்சல் போடுவார்கள் என்று எதிர்பார்த்தான். அப்படி எதுவும் நடக்காததைக் கண்டு. நகைத்தவாறு குதிரையை உள்ளே செலுத்தினான்.

படை ஊருக்குள் நுழைந்து சென்று கோயிலை அடைந்தது. கோயிலின் வாயிலில் சிலர் நிற்பதைக் கண்டான் மகமத்கான் அவனுக்கு அருகிலே மற்றொரு குதிரையில் இன்னொரு படைத்தலைவன் போல வந்து கொண்டிருந்த மாரியப்பன், மகமத்கானின் காதில், "இவர்கள் ஊர்ப் பெரியவர்கள். ஊர்த் தலைவர், கோயில் அர்ச்சகர், கோயில் காவலர், அவர்களுடைய உதவியாளர்கள்! உங்களை உள்ளே விடாமல் தடுக்க நிற்கிறார்கள் போலும்" என்றான்.

இதைக் கேட்டதும் மகமத்கான் அட்டகாசமாகச் சிரித்தான். "இவர்களா என்னைத் தடுப்பார்கள்? வெள்ளத்தைப் புல் தடுக்குமா? மாரியப்பா, இவர்கள் என் காலில் விழுந்து கோயில் சொத்தைக் கொள்ளையடிக்காதே என்று வேண்டிக் கொள்ள வந்திருப்பார்கள். இவர்கள் வேண்டுகோளைக் கேட்பதில் கூட என் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. உள்ளே போவோம் வா" என்றபடி மகமத்கான் குதிரையிலிருந்து கீழே குதித்தான். மாரியப்பனும் அவ்வாறே செய்தான். படை வீரர்களும் அவர்களைப் பின்பற்றினார்கள்.

மகமத்கான் மாரியுடன் முன்னே செல்ல மற்ற வீரர்கள் வாளை உருவியபடி அவர்கள் பின்னே நிதானமாக நடந்தனர்.

மகமத்கான் கோயிலின் வாயிலை அடைந்தான். அங்கே ஊர்த் தலைவர்

முதலியோர் வாயிலின் குறுக்கே வரிசையாக நின்றிருந்தனர்.

ஊர்த்தலைவர் முன் வந்து பேசினார்:

"இஸ்லாமியப் படைத் தலைவனே! எங்கள் கோயிலில், பெருமாள் மீது பக்தி கொண்டு அவர் அருளைத் தேடி வரும் எவரும் நுழையலாம். ஆனால் பகல் கொள்ளைக்காக வரும் பகைவர்க்கு இடம் இல்லை.. அதனால் நீயும் உன் வீரரும் எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் விஜய மங்கலத்தை விட்டு ஓடிப் போங்கள். இல்லையென்றால்..."

ஊர்த் தலைவர் முடிப்பதற்கு முன்பு மகமத்கான் மமதையுடன் குறுக்கிட்டான்.

"இல்லையென்றால் உங்கள் பெருமாள் என்ன செய்வார்? எங்களை அழித்து விடுவாரா? அவரால் முடிந்தால் முதலில் அவரது கோயில் சொத்துக்களைக் காத்துக் கொள்ளச் சொல். பிறகு எங்களை அழிக்கலாம்!"

மகமத்கான் சொன்னவாறு தன் நீண்ட கையை நீட்டி ஊர்த்தலைவரைப் பற்றி ஒருபுறமாகத் தள்ளினான். ஊர்த் தலைவர் நிலை தடுமாறி வாயிற்படியில் விழ, மற்றவர்கள் ஓடிச் சென்று அவரைத் தூக்கினர்.

மகமத்கான் பேய்ச் சிரிப்புச் சிரித்தபடி கோயிலின் வாயிலைக் கடந்து உள்ளே கால் வைத்தான். அவனை மேலே செல்ல விடாமல் தடுத்தது ஊர்த் தலைவரின் அதட்டும் குரல்.

"அட மூடனே! பெருமாள் தன் சொத்தை எப்போதோ காத்துக் கொண்டார். உன்னாலோ உன் தலைவன் ஹைதராலோ, அவன் அப்பன் பாட்டனாலோ அதைத் தொட முடியாது!"

மகமத்கான் ஒருகணம் திகைத்தான். மறுகணம் திகைப்பை மறைத்துக் கொண்டான்.

"நான் தேடி வந்த சொத்தை மறைத்து வைத்து விட்டீர்களா? அதைக் கண்டுபிடிக்காமல் விடமாட்டேன். இந்த ஊரையே அணு அணுவாக ஆராய்ந்தாவது அதைக் கண்டுபிடித்தே தீருவேன்," என்று கத்திய மகமத்கான், "மாரி, நீ சொன்ன உட்கோயிலைக் காட்டு," என்று ஆணையிட்டான்.



"என்னை கான்வென்டுக்கு அழைச்சுக் கிட்டுப் போய் வர ரெண்டு ஆயாக்களை ஏற்பாடு செய்திருக்கார் எங்கப்பா..."

"ரெண்டு ஆயா எதுக்கு?"

"என்னைத் தூக்கிக்க ஒரு ஆயா. என் புஸ்தகங்களைத் தூக்க இன்னொரு ஆயா!"

மாரியப்பன் உடனே முன்னே நடந்தான்.

"அடே துரோகி! துரோகிகள் அழிவது உறுதி! தன் அடியவர்களைக் காக்கும் பெருமாள் உன் போன்ற அயோக்கியர்களை அழிக்காமல் விடமாட்டார்!"

ஊர்த் தலைவர் குரல் மாரியின் இதயத்தைத்தாக்கியது. என்றாலும் கிடைக்கப்போகும் பணத்தையும் பதவியையும் நினைத்தபடி முன்னே சென்றான். மகமத்கான் அவன் பின்னே சென்றான். படைவீரர்களில் ஒரு பகுதியினர் அவ்விருவரையும் பின்பற்றிக் கோயிலுக்குள் நுழைந்தனர்.

ஊர்த் தலைவர் முதியவர்கள் வாயிலின் ஓரத்தில் ஒதுங்கி நின்றனர்.

மாரியப்பன் உள்ளே சென்றான். இடப்பக்கப் பிராகாரத்தில் திரும்பினான். அனுமார் கோயிலை நோக்கி நடந்தான். அனுமார் கோயிலைக் கடந்து விட்டான். மேலே நடக்காமல் திடீரென்று நின்று விட்டான்.

காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் பிராகாரம் முழுவதையும் ஒளிமயமாக்கிக் கொண்டிருந்தன. அந்த ஒளியில் அரைக் குருடன் கூடத் தெளிவாகப் பார்க்கலாம். அப்படியிருந்தும் மாரியப்பன் தன் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். மீண்டும் கண்

கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தான்.

அவன் முகத்தில் முதலில் பிறந்த வியப்பு, சில நொடிகளில் திகிலாக மாறியது. மாரியப்பன், தனக்கு முன்னே பின்னே, பக்கத்தில் என்று மாறி மாறிப் பார்த்தான். பார்க்கப் பார்க்க அவனிடம் ஏதோ ஒரு வகை பயம் படர்ந்தது.

மகமத்கான் மாரியப்பனின் நிலையைக்கவனித்தான். 'ஏதோ தவறு நடந்திருக்கிறது' என்று நினைத்தான்.

''மாரியப்பா! எங்கே நீ சொன்ன உட்கோயில்?'' என்று கேட்டான்.

மாரியப்பன் மகமத்கான் காலில் விழுந்தான். ''படைத் தலைவரே! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உட்கோயிலைக் காணோம்'' என்று கூறினான்.

''என்னடா பிதற்றுகிறாய்? கோயில் சிலைகள் காணாமல் போகலாம். நகைகள் காணாமல் போகலாம். இந்த மக்கள் அவற்றை மறைத்து வைக்கலாம். கோயிலே காணாமல் போகுமா? உட்கோயிலையே மறைத்துவிட்டார்களா?''

மகமத்கான் கேட்டான்.

''எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை! இதோ இந்த அனுமார் சன்னதிக்கு நேரே சுமார் பத்தடி தூரத்தில் உட்கோயில் வாசல் இருந்தது. சதுரமான கிணறு போல வழி இருக்கும். உள்ளே இறங்கப் படியிருக்கும். படி வழியே இறங்கினால் நான் சொன்ன பொற்சிலைகள் இருக்கும். ஆனால் உட்கோயில் வழியே இல்லையே!''

மகமத்கான் வாசலில் வழிமறித்த அத்தனை பேரையும் அங்கே அழைத்து வரச் செய்தான்.

''உட்கோயில் வழி எங்கே?'' என்று உறுமினான் மகமத்கான்.

இப்போதும் ஊர்த் தலைவரே பேசினார்:

''பெருமாளின் மகிமை அறியாத மகமத்கானே! உன் வரவைக் கூறிப்



பெருமாளிடம்முறையிட்டோம். பெருமாள் உடனே தன் சொத்தை மாயமாக மறைத்துக் கொண்டார். உட்கோயில், உட்கோயில் வழி எல்லாம் எங்கள் கண் முன் ஒரே விநாடியில் மறைந்து விட்டன. மாதவன் செய்த மாயத்தை நேரில் பார்த்துப் பரவசப்பட்டோம். இவ்வளவு சக்தி வாய்ந்த பெருமாளின் கோபத்துக்கு ஆளாகாமல் நீ உன் படையோடு உயிர் தப்பி இந்த ஊரை விட்டு ஓடு.''

''இல்லை. நீ பொய் சொல்கிறாய். மாயமாவது, மந்திரமாவது! ஏதோ தந்திரத்தால் உட்கோயில் வழியை மூடிவிட்டாய். அதை நீயே காட்டுகிறாயா, இல்லை நானே இந்த இடத்தை இடித்துத் தோண்டி உட்கோயில் வழியைக் கண்டுபிடிக்கட்டுமா?'' என்று கேட்டான், மகமத்கான்.

''நான் சொன்னது, உண்மை. உட்கோயிலைப் பெருமாள் மறைத்து விட்டார் என்பது முக்காலும் உண்மை! பெருமாள் மீது சத்தியமாக நான் சொன்னது உண்மை!''

மகமத்கான் ஆத்திரம் கொண்டவனாய், ஊர்த் தலைவரை நோக்கித் தன் கைவாளை வீசினான். மறுகணம் ஊர்த் தலைவரின் தலை, தென்னையிலிருந்து விழும் முற்றிய காயைப் போலத் தனியே தரையில் விழுந்து புரண்டு அனுமார் கோயில் படிமுன் நின்றது. அப்போதும் அது, ''உண்மை! உண்மை!'' என்று இரண்டு முறை கூறிய பிறகே ஓய்ந்தது.

அதைக் கேட்ட மகமத்கான், அதிர்ந்து போனான்.

மற்றப் பெரியவர்களிடம், ''ஊர்த் தலைவருக்கு ஏற்பட்ட கதி உங்களுக்கும் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் உண்மையைச் சொல்லுங்கள்! உட்கோயில் வழி எங்கே?'' என்று மகமத்கான் இரத்தம் சொட்டும் வாளை முன்னே நீட்டியபடி கேட்டான்.

''உட்கோயிலைப் பெருமாள்.





மறைத்து விட்டார். பெருமாள் மீது சத்தியம். இது உண்மை! எங்களைக் கொல்வதானாலும் இதுவே உண்மை'' என்று மற்றவர்களும் ஒரே மாதிரி கூறினர்.

மகமத்கான் ஊருக்குள்ளிருந்து விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த ஆடவர், மகளிர், குழந்தைகள் என்று சிலரைக் கோயிலுக்கு அழைத்து வந்து, ''உட்கோயில் வழி எங்கே?'' என்று கேட்டான். ''அனுமார் கோயிலுக்கு எதிரே பத்தடி தூரத்தில் இருந்தது. இப்போது காணோமே!'' என்று அனைவரும் ஒரே மாதிரி கூறினர்.

'எளியவர்கள் பொய் பேச மாட்டார்கள்' என்றே மகமத்கான் நம்பினான். என்றாலும் அனுமார் கோயிலின் எதிரே பத்தடி தூரத்தில் தோண்டிப் பார்க்க முடிவு செய்தான். ஆனால் அந்த இடம் பாறை. அதனால் இரண்டு மூன்று இடத்தில் வெடி வைத்துப் பாறைகளை உடைத்தான். அனுமார் கோயில்எதிரே பெரியபெரிய பள்ளங்கள் தோன்றின. ஆனால் உட்கோயிலோ, உட்கோயில் வழியோ தென்படவில்லை.

உட்கோயில் மறைந்து போன விஷயம் ஊருக்குள் பரவ, கோயிலின் வெளியே ஊர் மக்கள் கூடிவிட்டார்கள். பெருமாளின் மாயச் செயலைப் புகழ்ந்தார்கள்.

மாலை நெருங்கிய நேரம்.

மகமத்கான் சோர்ந்து போனான். ஒரு கோயில் திடீரென்று எப்படி மறையும்? பெருமாள்தான் மறைத்திருப்பாரா? அற்புதச் செயல்கள் எல்லா மதங்களிலும் உண்டு! அவற்றில் இதுவும் ஒன்று என்று நினைத்த மகமத்கானைப் பயம் பற்றிக் கொண்டது. சக்தி வாய்ந்த பெருமாள் தன்னைத் தண்டிக்கும் முன் அங்கிருந்து ஓடிவிட எண்ணிக் கோயிலை விட்டு வெளியே வந்து தன் குதிரையில் ஏறினான். வழக்கம் போல் அவனருகே இருந்த தனது குதிரையில் ஏறியமர்ந்தான், மாரியப்பன். மகமத்கான் மாரியப்பனைப் பார்த்தான். ''இவ்வளவும் இவனால் வந்தது'' என்பதை நினைத்ததும், ஏமாற்றத்தால் வந்த அவனது ஆத்திரம் அதிகமானது. ''அடே மாரி! இனிமேலும் என்னருகே எனக்குச் சமமாக வரும்

துணிவு இருக்கிறதா?'' என்று கேட்டபடி தன் வாளை வீசினான்.

''இல்லை! இல்லை!'' என்று அவன் கூறி முடிக்கும்முன் அவனது தலை தரையில் உருண்டது.

மகமத்கான் இச்செயலால் ஏதோ ஆறுதல் பெற்றவன் போலத் தனது படையுடன் ஊரை விட்டுப் புறப்பட்டான்.

மக்கள் இப்போது மகமத்கானைப் பாராட்டினார்கள். துரோகி மாரியப்பனைக் கொன்ற செயல் பாராட்டத் தகுந்ததுதானே?''

— சோமு தாத்தா கொஞ்சம் நேரம் பேசுவதை நிறுத்தினார். அந்த இடைவெளியில் ''தாத்தா! நீங்க சொல்றதைக் கேட்டா உட்கோயில் செல்வம் மறைஞ்சுட்ட மாதிரி தெரியுதே! அது இப்போ இந்தக் கோயிலில் இல்லையா?'' என்று கேட்டான்.

''இருக்கு! இங்கே உட்கோயிலும் இருக்கு! உட்கோயில் செல்வமும் இருக்கு! இது என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இப்போது நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன். செங்கோடா! இந்த ரகசியம் வேறு யாருக்கும் தெரியக் கூடாது. தவறிப் போய் யாருக்காவது இந்த ரகசியம் தெரிஞ்சா, அவங்களை உயிரோட விடறதில்லைன்னு சபதம் செஞ்சிருக்கேன்.''

தாத்தா சொன்னதும், ''ஐயோ'' என்ற குரல் கேட்டது. அது செங்கோடன் குரல் அல்ல. அதனால் தாத்தா சட்டென்று எழுந்து, அனுமார் கோயிலின் பின்னே வேகமாக ஓடினார்.

அதற்குள் அங்கிருந்த உருவம் கோயிலின் வாயிலை நோக்கி ஓடியது.

தாத்தாவைப் பின்தொடர்ந்து வந்த செங்கோடனும் ஓடும் உருவத்தைப் பார்த்துவிட்டான். உடனே, சப்தநாடியும் ஒடுங்க, ''பெருமாளே!'' என்று குரல் எழுப்பியபடி நிற்க முடியாமல் தரையில் உட்கார்ந்துவிட்டான். அதற்கு முன் அவன் கண்ணீர் தரையைத் தொட்டுவிட்டது. ஏனென்றால் அவன் பார்த்த உருவம் சுமதியினுடையது!

(தொடரும்)



பறந்து செல்லும் கிளியேதான்
'பார்' வேலையும் செய்யுது
விரும்பி நாமும் பார்க்கவே
வித்தை யெல்லாம் காட்டுது!

கரும் பலகை ஒன்றிலே
கணக்கைக் கூட்டிப் போடுது.
தரும் உணவை உண்டேதான்
தாவிக் குதித்தே ஆடுது.

கூனிக் குறுகும் உடலுடன்
குனிந்து வளையம் நுழையுது!
நாணிக் கோணி மறுபடி
நாகுக் காகத் திரும்புது.

கடவுள் பக்தி உண்டெனக்
காட்டு கின்ற முறையிலே
கடமை மறவாக் கிளியுமே
காவடி எடுத்து ஆடுது!

கவிதை பிறந்த கதை



செல்லம் செய்த சமையல்

இளையவன்

"அப்போதுஎன்மகளுக்குவயது மூன்று.

"அப்பா! நான் உனக்குச் சாப்பாடு போடுகிறேன், சரியா?" என்று கேட்டுவிட்டுச் சமையல் செய்ய ஆரம்பித்தாள். கொஞ்சநேரத்தில்சாப்பாடு தயாராகி விட்டது. ஒரு செய்தித் தாளை இலையாகப் போட்டாள். சின்னச்சின்ன விளையாட்டுச்சொப்புகளில் அவள் தயாரித்திருந்த சாதம், குழம்பு, ரசம் கூட்டு, பச்சடி (எல்லாம் கற்பனை தான்) இவைகளை எனக்குப் பொறுமையாகப் பரிமாறினாள். நானும் பாவனை யாகச் சாப்பிட ஆரம்பித்தேன். 'பச்சடி போதுமா? கூட்டு இன்னும் கொஞ்சம்...' என்று பெரிய மனுஷி போல் அவள் பரிமாறியது, இப்போதும் சிரிப்பை வரவழைக்கிறது. இப்படி அந்தச் சம்பவம் எனக்கு நினைவுக்கு வந்த ஒரு சமயத்தில் அதைப் பாடலாகச் செய்துவிட விரும்பினேன்" என்று கூறும் கவிஞர் இளையவன் அவர்கள், அந்தச் சுவையான பாடலைக் கூறுகிறார்:

செல்லம் அவளது அப்பாவிற்குச்
செய்தாள் சாப்பாடு.
எல்லாம் முடிந்து இலையும் போட்டாள்
எத்தனை ஏற்பாடு!

அப்பா கொஞ்சம் பச்சடி' என்றாள்;
அவரோ 'சரி' என்றார்.
'உப்பு போதுமா? சொல்லேன்' என்றாள்;
உடனே 'உம்' என்றார்!

'பொங்கல்' என்றாள், 'பழங்கள்' என்றாள்;
'போட்டுக் கொள்' என்றாள்.
தங்கக் கட்டி தந்ததையெல்லாம்
தந்தை சாப்பிட்டார்!

செல்லம் செய்த சமையலினாலே
செலவே வரவில்லை!
எல்லாப் பொருளும் சொப்புகள்தானே
எனவே செலவில்லை!

'அப்பாவைப் போல் பெரியவனாய் ஆன உடனே நானுமே' என்ற குழந்தைக் கவிஞரின் பாடலில், ஒரு குழந்தையின் எதிர்காலம்பற்றிய நம்பிக்கை துளிர் விடுகிறது. அந்தப் பாடலின் கருத்தைத் தொடர்ந்து சிந்தித்தார் கவிஞர்.

எல்லாக்குழந்தைகளுக்கும்கற்பனை உண்டு. அதற்கு ஏதேனும் தடை ஏற்படுகிற பொழுது அவர்களுக்கு நியாயமான கோபமும் வருகிறது. அவர்கள் கற்பனையில் தங்களைப் பெரிய வீரர்களாக நினைத்து விளையாடிக் கொண்டிருக்கிற சமயத்தில், வீட்டு வேலை கூறுக்கிட்டால் யாருக்குத்தான் கோபம் வராது? கவிஞருக்கும் மாணவப் பருவத்தில் இப்படிக் கோபம் ஏற்பட்டதுண்டாம். அந்தக் கோபத்தையே உட்கருத்தாக வைத்து ஒரு பாடல் எழுதினால் என்ன என்று அவருக்குத் தோன்றியது. அப்படிப் பிறந்ததுதான் இந்தப் பாடல்:

ஆடும் ஊஞ்சலை ரயில் ஆக்கி — நான்
அதிசயப் பயணம் கிளம்பும்முன்

தேடும் மாமா வந்திடுவார் — ஒரு
திடீர் வேலையைத் தந்திடுவார்!

மாடிப் படியின் சரிவினிலே — நான்
மாவீரன் போல் இறங்குகையில்
கோடிக் கடையில் 'பொடி' வாங்கப் — பணம்
கொடுத்துத் தாத்தா அனுப்பிடுவார்!



வாசல் அருகே நண்பர்கள் — நான்
வருவேன் என்று நகரும்முன்
ஆசை அக்காள் அழைத்திடுவாள் — ஒரு
அவசர வேலை தனக்கென்பாள்!

ஆடப் போகும் போதெல்லாம் — தினம்
ஆயிரம் சொல்வார்; விடமாட்டார்!
பாடம் படிக்க உட்கார்ந்தால்
பக்கம் எவரும் வரமாட்டார்!

இவருடைய சகோதரர் திரு மாயூரன் வானொலிக்காக ஒரு நாடகத்தை எழுதியிருந்தாராம். வீட்டுக்கு வரும் கடிதங்களைக் கிழிக்காமல் தெருவில் போட்டு விடுவதால், அதைச் சமூக விரோதிகள் தவறான வழியில் பயன்படுத்த இடம் ஏற்படும் என்ற மையக் கருத்தை எப்படியும் குழந்தைப்பாடலாகவடித்துவிட வேண்டும் என்று கவிஞர் விரும்பினார். அந்தச் சமயத்தில், மயிலையில் நடந்த குழந்தைகளுக்கான கதைசொல்லும்நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்க வந்த அந்நாளைய காவல் துறை ஆணையர் திரு ஸ்ரீபால் அவர்கள், சமூக விரோதிகளிடத்தில் மாணவர்களும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதை வலியுறுத்திப் பேசினார். நாளடைவில் அந்தப் பேச்சின் கருத்தே கவிதையாக மலர வழி வகுத்தது. இதோ அந்தக் கவிதை:

வீட்டைத் தேடி யார் வந்தாலும்
விழிப்பாய் இருதம்பி — நீ
காட்டும் கவனம் குடும்பத்திற்கே
காவல்தான் தம்பி!

அறிமுகமில்லாப் புதியவர் வந்தால்
அதிகம் பேசாதே — ஒரு
குறிப்பில்லாமல் பொருள்கள் எதையும்
கொடுக்கப் பழகாதே!

வீட்டுக் கடிதம் கிழிக்க மறந்து
வெளியில் போடாதே — ஒரு
போட்டிக் கேனும் வீட்டு நடப்பைப்
பொதுவில் பேசாதே!

நல்லவர் எல்லாம் நாட்டில் உண்டு
நல்லது ஏற்றுக் கொள் — சில
பொல்லா தவரும் இருப்பதனாலே
பொறுப்பைக் கற்றுக் கொள்!

பேட்டி: பி. வி. கிரி


இரண்டும் சேர்ந்தால்

கீழே சில ஊர்களின் பெயர்கள் உள்ளன. ஆனால், ஒவ்வொரு ஊரையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் குறிக்கும் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்:

1. வீடு கட்ட உபயோகப்படுவது + ஒரு பூச்சி.
2. சாப்பாட்டிற்குப் பயன்படுவது + பயிரைக் காக்க அவசியமானது
3. ஒரு கடவுளின் பெயர் + வட இந்தியாவிலுள்ள ஒரு நதி
4. ஒரு திசை + ஒரு புண்ணிய ஸ்தலம்

விடை: 1. செங்கல்பட்டு; 2. நெய்வேலி; 3. சிவகங்கை; 4. தென்காசி.

— ஜெ. ரமேஷ் (7539), சிதம்பரம்



சார் தபால்!

நான் சேர்த்த 40 வ.ப. கதைகள்

* நான் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலில்தான் படித்து வருகிறேன் என்றாலும், வீட்டில் அம்மா அப்பாவிடம் தமிழும் படித்து வருகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

— ந. கார்த்திக், மதுரை—1.

* தக்க தருணத்தில் தாய்மொழியாம் தமிழைப் புறக்கணிக்காமல் அதனைக் கற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய கோகுலத்திற்கு நன்றி.

— பாலா அசோக், சென்னை—40.

* எனக்கு ஒரு போட்டியிலே பங்கு கொள்ள வாய்ப்பு கிடைத்தது. அப்போட்டிக்கு உரிய தலைப்பு, 'முன்னாள் குடியரசுத் தலைவரும், தொழிற்சங்கத் தலைவருமாகிய வி.வி. கிரி' என்பதாகும். அவரைப் பற்றிய நூல் கிடைக்கவில்லையே என்று நான் வேதனையுடன் இருந்தபோது, கோகுலம் (1986 ஆகஸ்ட் இதழ்) எனக்குப் பெரிதும் உதவியது.

— பி. கிதிகவாசன், புதுக்கோட்டை

* அறுபது தமிழ் ஆண்டுகளின் பெயர்களையும் வெளியிட்டுள்ளது கண்டு மகிழ்ந்தேன். உடனே, மனப்பாடம் செய்துவிட்டேன்.

— எஸ். அன்புச் செல்வி, மதுரை—20.

* பழமொழிப் புதிர் ஒவ்வொன்றும் சிந்தனையைத் தூண்டி அறிவை வளர்க்க உதவுகிறது.

— ஆர்.கே. அருள்செல்வன்,
விக்கிரபாண்டியம்

* நான் கோகுலத்தில் 1983 டிசம்பரிலிருந்து இன்று வரை வெளிவந்த 16 பக்க வண்ணப் படக்கதைகளைச் சேர்த்து வைத்திருக்கிறேன். மொத்தம் 40 கதைகள். இவற்றை இரண்டு பைண்ட் வால்யூம்களாகச் செய்யப் போகிறேன்.

— பி. கோவிந்தசாமி (5703), டி. புதூர்.

* பிருந்தாவனக் கவியரங்கம் சிறுவர் சிறுமியரின் கவித் திறனைப் படம் பிடித்துக் காட்டுகின்ற பயனுள்ள பகுதி.

— இர. நிர்மலா (12098), திருச்சி—17

* அமரர் லக்ஷ்மியின் குழந்தைப் பருவக் கட்டுரை அருமை. அடுத்த இதழிலும் அவரது குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை ஆவலாக எதிர்பார்க்கிறேன்.

. — எம்.ஏ. பாஷா மெரினா, சின்னசேலம்

* டாக்டராக இருந்து மக்களின் உடல் நலம் பேணியதோடு மட்டுமல்லாமல், எழுத்தாளராக இருந்து மக்களின் மன வளம் பெருகவும் உதவிய எழுத்தாளர் லக்ஷ்மியின் குழந்தைப் பருவம் என் நெஞ்சைத் தொட்டது.

— என். சந்திரசேகரன், கோட்டாத்தூர்.

* கோடை விடுமுறையை நல்லமுறையில் நாங்கள் பயன்படுத்த கோடை விடுமுறைப் போட்டி உதவுகிறது. சங்கராச்சாரிய சுவாமிகளுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை.

— வெ. அமலன், சென்னை—17.

* கோகுலத்தில் வெளிவரும் ஒவ்வொரு கதையுமே சிறுவர் சிறுமியரின் பண்புகளை உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கிலே வெளியிடப் படுவதாகவே நினைக்கிறேன். சிறுவர் உலகுக்கு உண்மையான தொண்டு இதுதான்.

— அ. அண்ணாமலை, கோட்டூர்

* எங்கள் ஊரான செஞ்சியை ஆண்டு வந்த வீரத் திருமகன் இராஜா தேசிங்கின் வீர வரலாற்றை வண்ணச் சித்திரக் கதையாக வெளியிட்ட கோகுலத்திற்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

— பொ. பாண்டியன் (11311), செஞ்சி

* பழைய கதை; புதிய பாடலை மே இதழில் காணோமே! என்ன ஏமாற்றம்!

— சி. குணவதி, பேராவூரணி

* கோகுலம் இதழில் நல்ல பல கருத்துக்களை வெளியிட்டு வருகிறீர்கள். குறிப்பாக, 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதி எல்லாருக்கும் பெருந்துணையாக உள்ளது.

— வெ. பாலசுப்பிரமணியன், தருமபுரி—1

* இருமொழிகளில் பழமொழிகளை நிறுத்தி விடாதீர்கள். தொடர்ந்து வெளியிடப் பணிவோடு வேண்டுகிறேன்.

— ஆர். சேதுபதி, வாணியம்பாடி

* முயற்சி தொடர்ந்தால் முடியாதது என்று உலகில் கிடையாது. கவிஞர் செல்ல கணபதி உண்மையிலேயே ஒரு நல்ல வருணனைக் கவிஞர்.

— சி. எல். சரவணன், மதுரை—1

* கவிதை பிறந்த கதை சுவையான பகுதி

— த. பாண்டிமுத்து, கருங்குழி

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034
போன்: 4 7 2280

Registered No TN/MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka





எல்லோரும்...
..எல்லோரும்...
..எல்லோரும்...
Twink
Orange
SOFT DRINK CONCENTRATE
எல்லோருமே விரும்புவது நியூட்ரின் ட்விங்க்
ஆரஞ்சு
லெமன்
மேங்கோ
பைனாப்பிள்
கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸன்ட்ரேட்
சுவைகளும் புதுமை, சுவைத்திட இனிமை
nutrine
ACIL/090/87-Tam